www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**அனுருத்தர் ஆணை!**

ஆரங்கே.. வீரர்காள்!.. ஆற்றல்மிகு தளபதிகாள்!
வாருங்கள்! வந்தீரா? வாழ்த்துக்கள்! – போரெங்கள்
தருமம்! புரிகிறதா? புறப்படுங்கள் யாழ் நோக்கி
நகரட்டும் நமது படை!

ஈழமோகம்

இதழ் 73 ஜூன் 1 - ஜூன் 14, 1995 7.00

# பாதுகாப்பு அமைச்சரின் "இரகசிய திட்டம்": யாழ் குடாநாட்டை

# தாக்கு என்கிறார் அமைச்சர்!

# தயங்குகிறது இராணுவம்!!

**தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் குடாநாட்டின் மீது பாரிய தாக்குதல் ஒன்றைத் தொடுக்கவும், அதில் சில பகுதிகளையாவது கைப்பற்றவும் வேண்டுமென்பதில் பாதுகாப்பு பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தை மிகவும் தீவிரமாக உள்ளார் என்றும், ஆயினும் அவ்வாறான ஒரு யுத்தத்தை நடாத்துவதில் இராணுவம் தயக்கம் காட்டி வருகின்றது என்றும் பாதுகாப்பு அமைச்சு மட்டத்திலிருந்து கசிந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. கிழக்கு மாகாணத்தை தாக்கி புலிகளை அகற்றினாலும் கூட, குடாநாடு அவர்களுக்கான புகலிடமாக உள்ளதால் குடாநாட்டின் மீதான தாக்குதலே புலிகளை பலவீனமடையச் செய்வதற்கு சிறப்பானதாகும் என்று பிரதியமைச்சர் கருதுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் பெருமளவிலான படையினருக்கு அழிவை ஏற்படுத்தக்கூடிய இத்தாக்குதலை உடனடியாகச் செய்வதில் நிறையவே பாதகமான அம்சங்கள் இருப்பதாக கூறும் இராணுவம், குடாநாடு நோக்கிய ஒரு பாரிய தாக்குதலுக்கு தயக்கம் காட்டியுள்ளது.**

ஆயினும், தமது நோக்கத்தை நிறைவேற்றுவதில் சற்றும் மனம் தளராத பிரதியமைச்சர் இராணுவ பதவிகளில் பல புதிய மாற்றங்களை செய்துள்ளார். இப்புதியவர்களிடம் குடாநாட்டை ஊடுருவிச் சென்று அதன் சில பகுதிகளையாவது கைப்பற்றுவதற்கான கால அவகாசத்தை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கெனவே தமிழீழ விடுதலைப் புலிகளை அடக்குவதற்கான இரகசிய திட்டம் ஒன்று தம்மிடம் இருப்பதாக பிரதியமைச்சர் பாராளுமன்றத்தில் அறிவித்திருந்தது. குடாநாடு மீதான அவரது தாக்குதல் திட்டத்தையேயாகும். தனது நண்பர்களும் ஓய்வு பெற்றவர்களுமான சில இராணுவ தளபதிகளுடன் சேர்ந்து அவர் தயாரித்த இந்த குடாநாட்டு தாக்குதல் திட்டத்தை, நடைமுறைப்படுத்தவே புதிய பதவி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.




இத்தகையதொரு பாரிய தாக்குதலில் இராணுவம் பலத்த இழப்பை எதிர்நோக்க வேண்டிவரும் என்பதையோ, பெருமளவு பொதுமக்கள் கொல்லப்படக்கூடும் என்பதையோ, பல கனரக ஆயுதங்கள் தேவைப்படும் என்பதையோ கூட அவர் பொருட்படுத்தியதாக தெரியவில்லை. முடிந்தளவு அதிக அளவிலான இராணுவத்தினரை போரில் இறக்கி, அவர்களுக்கு தேவையான ஆயுதங்களையும் உத்தரவுகளையும் வழங்கினால் வெற்றி பெறமுடியும் என்பதே அவரது கோட்பாடாக உள்ளது.

இந்தக் கோட்பாட்டை அவர் பல தடவைகளில் தெரிவித்து வந்துள்ளார்.

இப்போரை திறம்படச் செய்யவென ஈரான், குவைத், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஏற்கெனவே பெருந்தொகையான ஆயுதங்கள் அரசுக்கு வந்த சேர்ந்துள்ளன.

இதேவேளை, கிழக்கில் தமது தாக்குதலை புலிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்



என்பதும் அண்மையில் நடைபெற்ற தாராக்குளம் இராணுவ முகாம் தாக்குதலும் காரணமாக இருநூறு இராணுவ முகாம்கள் விரைவில் மூடப்படவுள்ளதாகவும், அவற்றிலிருந்து வாபஸ் வாங்கப்படும் படையினரும் வடக்குக்கு அனுப்பப்படலாம் எனவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவம் உற்சாகமாகவும், போரிடத்தயாராகவும் உள்ளதாக கூறும் பாதுகாப்பு அமைச்சு, இராணுவத்தினர் இத்திட்டத்தை முழுதாக ஏற்கவில்லை என்பதை முடிந்தளவுக்கு மூடிமறைக்கவே முயல்கிறது. இந்த அடிப்படையிலேயே பத்திரிகை சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் செயலும் தொடங்கப்பட வேண்டுமென அரச மட்டத்தில் ஆர்வம் காட்டப்படுகிறது.

இதேவேளை, இவ்வாறான யுத்தமொன்றை யாழ் மீது தொடுப்பது தொடர்பாக தமிழ் ஆயுதக்குழுக்கள் சிலவும் கலந்தாலோசிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## நக்குண்டார் நாவிழந்தார்!

"வொய்ஸ் ஒப் அமெரிக்கா" உடன்படிக்கையை ரத்து செய்யக்கோரி கடந்த 26ம் திகதி பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்ட தனிநபர் பிரேரணை 125 மேலதிக வாக்குகளால் தோல்வி கண்டது.

நான்கு பேர் மட்டுமே இப்பிரேரணைக்கு ஆதரவளித்திருந்தனர். இவர்களில் மூவர் பொ.ஜ.மு.வுடன் இணைத்திருக்கிற லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர்களாவர். பெற்றி வீரக்கோன் (பிரேரணையைக் கொண்டு வந்தவர்), வாசுதேவ நாணக்கார, அசோகா வீரசிங்க ஆகிய மூவரும் தேச மீட்பு முன்னணியைச் சேர்ந்த நிஹால் கலப்பத்தி அவர்களுமே இந்நால்வருமாவார்.

தமிழ்க்கட்சிகள் ஒன்றுமே இவ்வாக்கெடுப்பின் போது கலந்து கொள்ளவில்லை. அதாவது, நழுவிவிட்டார்கள்!.

ரணவில பகுதியில் 419 ஏக்கரில் கட்டப்பட்டுவரும் வொய்ஸ் ஒப் அமெரிக்காவுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடாத்திய போது அன்று அதற்கு வலிந்து போய் தலைமை கொடுத்த பொதுஜன முன்னணி இன்று பதவிக்கமர்ந்ததன் பின் வொய்ஸ் ஒப் அமெரிக்கா தொடர்பாக எந்தவித நடவடிக்கையையும் எடுக்காதது மட்டமல்லாமல், இன்று அந்த வொய்ஸ் ஒப் அமெரிக்காவை பாதுகாக்கின்ற, நியாயப்படுத்துகின்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகின்றது.

அண்மையில் வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், முன்னைய அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை தங்களால் ரத்து செய்ய முடியாது என அறிவித்திருந்தார். அப்படியானால் இது தெரியாமல் தான் அன்று வொய்ஸ் ஒப் அமெரிக்காவைத் தடைசெய்வதாக எங்களுக்கு வாக்குறுதி அளித்தார்களா? என மக்கள் கேட்கும் கேள்விக்கு என்ன பதில் தரப்போகிறார்கள்.

அமெரிக்கா தனது புதிய உலக ஒழுங்குக் கொள்கையையும், உலகத்தின் பொலிஸ்காரனாகச் செயற்படும் நடவடிக்கையையும் தனது ஆக்கிரமிப்புகளையும் நியாயப்படுத்துவதற்கு இந்த வொய்ஸ் ஒப் அமெரிக்காவையே பயன்படுத்தி வருவதுடன் இன்று அதனை தனது போர் நடவடிக்கைகளுக்கான உளவு வேலைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றது.

வடக்கு கிழக்கிற்கு எதிரான யுத்தத்திற்காக ஆயுதம் தருவதாகவும், பணம் தருவதாகவும் அமெரிக்கா சொன்னவுடன் கொள்கை கோட்பாடு எல்லாமே அம்போ என்றாகி விட்டன. நக்குண்டார் நாவிழந்தார்.

## நிவாரணப்பணத்தில் ஆயுதம்?

யுத்த சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலிருந்து கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்த மக்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தினுள்ளேயே இடம் பெயர்ந்திருந்த மக்களுக்கும் நிவாரணப் பொருட்கள் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்க படைகளினால் வடக்கில் நடாத்தப்படும் தாக்குதல்களினால் பெரும்பாலும் பொதுமக்களே அழிவுக்குளாகின்றனர் என்பதும் இதன் காரணமாக தங்களது உயிரையேனும் பாதுகாத்து கொள்வதற்காக வடக்கு மக்கள் இங்கும் அங்கும் இடம் பெயர்ந்து கொண்டிருப்பதும் சாதாரண நிலைமையாகியுள்ளது. இப்படி இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை இடம் பெயர்ந்த பகுதிகளின் அரசாங்க அதிபர் காரியாலயத்தினூடாகவே செயற்படுத்தப்படும் என்றபோதும் கடந்த ஜனவரியிலிருந்து பாதிக்கப்பட்ட இம்மக்களுக்கான நிவாரணப் பொருட்களை அரசாங்கம் இதுநாள் வரை அனுப்பாமலிருந்துள்ளது.

வடக்குக்கான பொருளாதாரத்தடையை அமுல்படுத்த அரசாங்கம் ஏப்ரல் 19 தாக்குதலை காரணம் காட்டுகின்றபோதும் அதற்கு முன்பிருந்தே கிளிநொச்சியின் இடம் பெயர்ந்திருப்பவர்களுக்கான நிவாரணப்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திருமலை: ஆசிரியர்களின் பொறுப்பீனம்!


திருக்கோணமலை ஆசிரியர்களில் சிலர் கல்வித்துறையை விடுத்து வேறுபல துறைகளில் விற்பன்னர்களாக முயல்கிறார்களோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. படிப்பித்தற் தொழிலில் கரிசனை உள்ள நேர்மையான ஆசிரியர்களுக்கு இவர்களது நடத்தை அவமானத்தையும் தலைகுனிவையும் ஏற்படுத்தி வருகிறது.

நகரத்திலுள்ள முன்னணிப் பாடசாலை அதிபர் ஒருவர் ஆசிரியர்களின் சம்பளப் பணத்தை கையாடியுள்ளதாக ஒரு குற்றச்சாட்டு. வடக்குக்கிழக்கு பாடசாலைகளில் பாதுகாப்பு கருதி சம்பளப்பட்டியலைப் பார்த்து அதன்படி காசோலை எழுதி ஆசிரியர்களுக்கு வழங்கும் அதிகாரம் அந்தந்த அதிபர்களுக்கே வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாடசாலைக்கும் குறிப்பிட்ட மாதத்தில் சம்பளப்பணமாக எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது என்ற விபரங்கள் மோசடியைத் தவிர்க்குமுகமாக வங்கிக்கு கல்வித்திணைக்களத்தால் அறிவுறுத்தல் செய்யப்படும். இவ்வரிவிதித்தலை ஒப்பு நோக்கியே வங்கியும் பணம் வழங்குவதால் மோசடிகள் இடம் பெற வாய்ப்பு இல்லை என்றே நம்பப்பட்டது.

ஆனால் இந்த அதிபரோ தனது பாடசாலை ஆசிரியர் ஒருவர் காசோலை வங்கிக்கு அனுப்பத்தாமதமாகியதை தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு வேறொரு காசோலையை அவ்வாசிரியர் பெயரில் எழுதி போலிக் கையெழுத்தும் வைத்து பணமாக்கிக் கொண்டாராம்.

உரிய ஆசிரியர் தனது காசோலைக்கு வங்கியில் பணம் கேட்டபோது தான் பிரச்சினை வெளியில் வந்தது. தொடர்ந்து விசாரணைகள் சாமாளிப்புகள்.... மீண்டும் விசாரணைகள்.... விடயம் தொடர்கிறது. என்னே அதிபர்!

அதிபர் இவ்வாறென்றால் இன்னோர் உபஅதிபர் நகரை அண்மித்த ஒரு சிறிய பாடசாலை. தொண்ணூறில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அதிபர் நடைபவனியில் யாழ்ப்பாணம் போய் அங்கிருந்து குடும்பத்துடன் அகதியாக இந்தியா சென்று அண்மையில் கப்பல் மூலம் மீண்டார். இங்கே வந்தவர் தனது கடைசி மாதச் சம்பளம் உடனே கிடைக்கும் என்று நம்பினார். அமைதியான சுபாவமுடைய அந்த அதிபர் தனக்குக் கீழ் உப அதிபராகப் பணியாற்றி தற்போது அதிபராகவே கடமைபுரியும் ஆசிரியரை அணுகி விடயத்தைக் கேட்டார். கிடைத்த பதில் என்ன தெரியுமா? உங்கள் சம்பளப் பணத்தைத் தபாலில் அனுப்பி விட்டேனே. இன்னுமா கிடைக்கவில்லை? என்பதாகும். இப்பொழுது அந்த அமைதியான அதிபருக்கு தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது. தனது



சம்பளத்தை அந்த உபஅதிபர் எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும். தான் கையெழுத்திடாமல் எப்படி இவருக்குப் பணம் கிடைக்கும். என்றெல்லாம் யோசிக்க ஆரம்பித்து விட்டாராம். இந்த விடயத்தை திணைக்களத்துக்குக் கொண்டு போவதா அல்லது பேசித் தீர்ப்பதா என்று குழப்பநிலையில் காணப்படுகிறார் இந்த அதிபர்.

இன்னொரு அதிபர் நகரத்துப் பாடசாலையைச் சேர்ந்தவர். இவர் மாணவர்களை 'அடேய்' என்று மாணவியரை 'அடியே' என்றும்தான் அழைப்பார். எவரையும் எக்காலத்திலும் இவர் பெயர் சொல்லி அழைப்பதில்லை. ஆசிரியைகளை 'நீலச்சாரி', 'மஞ்சள் சாரி' என்றுதான் அழைப்பாராம். இதன் பலன்..... இருப்பத்தாறு ஆசிரியர்களே அவரது பாடசாலையில் படிப்பிக்கிறார்கள். சுமார் இருபது பேரின் பெயர்கள் அவருக்கு நினைவில் இல்லாமலே போய்விட்டது. பாடசாலை நிர்வாகத்திலோ, மாணவர் முன்னேற்றத்திலோ கரிசனை இல்லாத இவ்வதிபர் பாடசாலையில் எந்த வேலைகளையும் செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு வலுத்து வருகிறது. விசாரித்ததில் உப அதிபர் தானாம் பாடசாலையைக் கொண்டு இழுக்கிறார் என்பது தெரியவந்துள்ளது.

ஆனால் பலே கில்லாடித் தனமாக பாடசாலையிலேயே தானும் குயிருந்து இன்னோர் ஆசிரியருக்கும் இருப்பிடம் வழங்கியுள்ளார். வாடகை இல்லாக் குடியிருப்பு.

இந்த அதிபர், அதிபர் தரத்திலுள்ள கல்வித்திணைக்கள உத்தியோகத்தர் ஒருவருக்கு தனது பாடசாலை வளவில் இருந்த மரங்களை அன்பளிப்புச் செய்தாராம். மர அன்பளிப்புக்குப் பதிலாக பாடசாலைக்கு 'சைக்கிள் செட்' ஒன்று இலவசமாகக் கட்டித் தருவதாக மரத்தைப் பெற்றுக் கொண்டவர் வாக்குறுதி கொடுத்துள்ளார். எனினும் அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை. மரங்களோ ஒரு கொந்தறாத்துக்காரரின் கைக்கு மாறிவிட்டனவாம். சைக்கிள் செட்டுக்காக பத்தாயிரம் வரை செலவழிக்க மரம் பெற்றவர் முன்வந்தார் என்றால் மரங்களின் உண்மையான பெறுமதி என்ன......?

மரம் என்றதும் இன்னொரு விடயம்.... நகரத்தில் உள்ள ஒரு பெண்கள் பாடசாலையில் கட்ட வேலைகள் நடைபெறுகின்றன. பழைய கட்டடம் உடைக்கப்பட்டது. பாரிய - பழைய - நல்ல மரங்கள் அமுக்கப்பட்டன. ஏலத்தில் விடப்படக்கூடும் என ஆசிரியர்கள் பெற்றோர்கள் எதிர்பார்த்தனர். திடீரென மரங்களைக் காணவில்லை. அவை இப்போது பாடசாலை அபிவிருத்திச் செயலாளர் வீட்டிலாம். பாடசாலை அபிவிருத்தி எப்படிப் போகிறது பார்த்தீர்களா?

நகரத்திலிருந்து ஆறுமைல் தொலைவில் ஒரு பாடசாலை. அதிபருக்கும் ஆசிரியர் ஒருவருக்கு வடாய். அதிபர் கூறுகிறாராம் ஆசிரியர் காதல் மன்னன் என்று. ஆசிரியரோ அதிபர் ஒழுக்கக் கேடானவர் என்கிறார். சில மாணவிகளின் பெயர்களும் அடிபடத் தொடங்கின. விடயம் கிராமத்து மக்களிடையே பரவியது. கிராமத்தின் பிரபலபோக்கிரி ஒருவர் அதிபரை இரண்டு தட்டுத்தட்டியிருக்கிறார். ஒரு சிலரைத் தவிர கிராமம் முழுவதுமே அதிபர் பக்கம் திரண்டுவிட்டது. விசாரணைகள்,.... காதல் மன்னன் கணக்கு வழக்கில் பிசகு செய்து விட்டாராம். இப்போது கல்விப்பணிப்பாளருக்கு தாயே .... அம்மா என்று பாசமுறைப்பாடு செய்திருக்கிறாராம்.

எண்பது மைல் தொலைவில் உள்ள பாடசாலையொன்றில் இல்ல விளையாட்டுப் போட்டி. விளையாட்டுத் திடலில் இரண்டு ஆசிரியர்கள் மோதிக் கொண்டார்கள். சாதாரண விளையாட்டு அலல. வீர விளையாட்டு. இல்லங்களுக்குப் பொருத்தமான பெயர்: சேரன், சோழன். , பரம்பரைக் கோபமோ? நல்ல முன்மாதிரி.

திருமலைக் கல்வித்திணைக்களத்தில் என்ன நடக்கிறது...? ஆசிரியர்கள் கடன் சம்பந்தமான விடயங்களுக்கு இரண்டு கிளாக் போடப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர்கள் தங்கள் அலுவலுக்காக அலுவலாகச் சென்றால் ஆட்கள் இரண்டு பேரும் ஆசனத்தில் இல்லை. இந்த லட்சணத்தில் இவர்கள் ஆரவாரம் வேறு செய்து விடுகிறார்களாம். விசாரித்துப் பார்த்ததில் இவர்களும் ஆசிரியர்கள் தானாம். வால் பிடிப்பதில் வல்லமை காரணாக அலுவலகத்தில் இவர்களுக்கு அதிகாரம். இன்னொரு சமாச்சாரம் இந்த ஆசிரியர்கள் என்றுமே படிப்பித்தன் தொழிலைச் செய்ததில்லையாம்.

நிலாவெளிப்பகுதியில் ஒரு பாடசாலையில் சங்கீத ஆசிரியை இல்லையாம். அங்கே பணியாற்ற வந்த ஆசிரியைக்கு கல்வி அலுவலகத்தில் கிளாக் வேலை. கணக்கீட்டுப் பகுதியில் கடமை புரிகிறாராம். பாவம் சங்கீதம்!

பல ஆசிரியர்களுக்கு மகப்பேறு விடுமுறை இருப்பது தெரியாதாம். ஆசிரியையைப் பிள்ளைக்கு பாலூட்ட அனுமதிக்காத பெண் அதிபர்களும் இருக்கிறார்கள்.

பல ஆசிரியர்கள் தங்களுக்கு என்னென் கடன் வசதிகள் பெற்றுக் கொள்ள உரித்துண்டு என்பதைக் கூட தெரியாதவர்களாக இருக்கிறார்களாம்.

சம்பந்தப்பட்டவர்கள் திருந்த வேண்டுமென்பதற்காகவே அவர்கள் பெயர்கள் வெளியிடப்படவில்லை. மாணவர்களுக்கு உதாரண புருஷர்களாகத் திகழ வேண்டியவர்கள், அவ்வாறு தான் செய்ய முடியவில்லை என்றாலும் மனிதர்களாகவாவது இருக்க வேண்டாமா?

- வி

# இராணுவத் தலைமையில் மாற்றம்! அனுருத்தவின் திட்டத்தின் முதற்கட்டம்?

வட - கிழக்குப் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க மேஜர் ஜெனரல் பற்றிக் பெனான்டோவின் தலைமையில் இராணுவக் குழுவொன்றை நியமிக்க பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தயின் தலைமையில் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற உயர் மட்ட இராணுவ அதிகாரிகளின் கூட்டமொன்றில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மே 19 அன்று வெள்ளிக்கிழமையன்று நடைபெற்ற இக்கூட்டத்தில் அவ் இராணுவக் குழுவின் உறுப்பினர்களாக பிரிகேடியர் வசந்த பெரேராவும், பிரிகேடியர் சிறி பீரிசும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதே சமயம் உடனடியாக நடைமுறைக்கு வரும் படியாக இராணுவத்தின் உயர் பதவிகள் சிலவற்றிலும் மாற்றங்கள் ஏற்படுத்தவும் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி இராணுவத்தின் Deputy Chief of Staffs ஆகவிருந்த மேஜர் ஜெனரல் றொஹான் தலுவத்த, வட - கிழக்குப் போர் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான தளபதியாகவும், இராணுவத் தளபதியின் செயலாளராகப் பணிபுரிந்த பிரிகேடியர் ஜாலிய நம்முனி Task Force இன் இரண்டாவது படைப்பிரிவின் தளபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ள அதே சமயம் இராணுவத் தளபதியின் செயலாளராக Task Force இன் இரண்டாவது படைப்பிரிவின் தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் கமுனு குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தின் Chief of Staffs ஆகவிருந்த மேஜர் ஜெனரல் லக்கி அல்கம ஓய்வூதியம் பெற்றுச் செல்லவுள்ளதால் தொண்டர் படைப்பிரிவின் தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் வஜிர விஜேரத்ன பதில் Chief of Staffs ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் ஏ.எம்.யூ.செனெவிரத்ன தொண்டர் (படைப் பிரிவின்) இராணுவத்தின் தளபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தின் நடவடிக்கைப் பணிப்பாளராக வரவிருந்த பிரிகேடியர் பரீ (Pari) லியனகே காலி 13வது படைப்பிரிவின் தளபதியாகவும், புத்தளத் தளபதியாகவிருந்த பிரிகேடியர் சூலா செனெவிரத்ன, கண்டி 32வது படைப்பிரிவின் தளபதியாகவும் , பிரிகேடியர் நந்த மல்லவாரச்சி குருணாகல படைப்பிரிவின் தளபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ தலைமையகத்தின் நடவடிக்கைப் பணிப்பாளராக பிரிகேடியர் றொஹான் குணவர்த்தனவும், இராணுவச் செயலாளராக பிரிகேடியர் நிஹால் ஜயக்கொடியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் தொடுப்பதென்ற தனது நோக்கத்திற்கமைய இராணுவ தலைமை மட்டத்தில் அனுருத்த ரத்வத்தை ஏற்படுத்திவரும் மாற்றங்களில் சிலவே இவையாகும்.

# கப்பல்களா? காலிக்குப் போகட்டும்!

ஆறு நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் கப்பல்கள் விஷேட பாதுகாப்பு சோதனைகளுக்கு உட்படுத்தப்படாதது துறைமுகத்தினுள் நுழைய விடக்கூடாது எனவும், கப்பல்களைச் சோதனை செய்ய கடற்படையும், பொலிசும் ஒன்றிணைந்து செய்ய வேண்டுமெனவும் பாதுகாப்பு அமைச்சு துறைமுக அதிகார சபைக்கு அறிவித்துள்ளது.

இக்கப்பல்களை நேரடியாகவே துறைமுகத்தினுள் எடுக்காது, துறைமுகத்திற்குச் சில தூரத்தில் கடலிலேயே சோதனைக்கு உட்படுத்துமாறும் ஏதாவது சந்தேகமிருந்தால் அவற்றைக் கொழும்புத் துறைமகத்திற்கு அனுப்பாது காலித்துறைமுகத்திற்கு அனுப்புமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன.

சந்தேகத்திற்கிடமான கப்பல்களை காலித்துறை முகத்தில் தடுத்து வைக்கவும் தீர்மானிக்கப்பட்டிருப்பது முழுமையான சோதனையொன்றை நடத்தவாகும். அவ்வாறு சோதனையிடப்படம் கப்பல்களில் உள்ள பொருட்கள் தொடர்பாகச் சரியான தகவல்களைத் தருமாறும் துறைமுக அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் இலங்கைக்கு வரும் கப்பல்கள் தொடர்பாகப் பொதுவாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஆலோசனைகள் தொகுப்பொன்று பாதுகாப்பு அமைச்சினால் துறைமுக அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாக அதன் அதிகாரியொருவர் கூறினார்.

# சொல்லாத சேதி

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தன்னுடைய திட்டங்களை அரசு முன்வைக்கவில்லை என்ற விமர்சனம் தேர்தல் காலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது. தீர்வுத் திட்டத்தை முன் வைப்பதற்கு அரசு தயங்குவதற்கான காரணம் என்ன என்று பல புத்திசீவிகள் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்த போது ஒரு நாள் நடந்த நிகழ்வு இது.

ஜனாதிபதி சந்திரிகாவும் கொழும்பின் முற்போக்கு, ஜனநாயக, தாராளவாதப் புத்திசீவிகளும் சந்தித்த ஒரு சந்தர்ப்பத்தில், தீர்வுத் திட்டத்தை ஏன் இதுவரை முன்வைக்கவில்லை என்று லெனின் தாடி வைத்திருந்த பழைய இடதுசாரி வீரரொருவர் நேசமாகக் கேட்ட போது ஜனாதிபதி சந்திரிகா சொன்ன பதில்:

"அனே, மடனங் பயய்!"

(ஐயோ எனக்கெண்டால் பயம்!)

பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி முதலிரு சுற்றுக்களுக்குப் பிற்பாடு வடபகுதிக்குப் பத்து மின் உற்பத்தியாக்கிகள் (மி.உ) - அது தான் ஜெனரேட்டர்ஸ்! - அனுப்பி வைப்பதாக உடன்பாடாயிற்று. ஒரேயடியாகப் பத்து மின் உற்பத்தியாக்கிகளையும் அனுப்பி வைப்பது அரசியல் சாதுரியமாகாது என்று ஜனாதிபதிக்கு 'ஆலோசனை' வழங்கப்பட்டதனால் இரண்டு மின்உற்பத்தியாக்கிகள் மட்டுமே முதலில் அனுப்பப்பட்டன. (இவை இயங்குவதற்கான எரிபொருள் அனுப்பப்படவில்லை என்பது வேறு கதை!)

அனுப்பி வைக்கப்பட்ட இரண்டு மின் உற்பத்தியாக்கிகளும் புலிகளின் கையில் சேர்ந்துவிட்டால் என்ன ஆவது என்று குழப்பமுற்ற ஜனாதிபதியின் ஆலோசகர்கள் இரண்டு மின் உற்பத்தியாக்கிகளும் யாரிடம் போய்ச் சேர்ந்துள்ளன என்று திட்டவட்டமாகத் தெரிய வேண்டும் என்று ஜனாதிபதியிடம் சொல்லியுள்ளனர். உடனடியாக உரியவர்களிடம் இது பற்றி விசாரித்த போது இரண்டு மின் உற்பத்தியாக்கிகளும் கன்னாகத்திலுள்ள மின் நிலையத்தில் இருக்கின்றன என்ற தகவல் கிடைத்ததும் திருப்தி அடைந்துவிட்டனர்.

சரி, கன்னாகத்தில் மட்டும் எலிகளும் எறும்புகளும் யானைகளும் உள்ளன என்பதுதான் அரசின் எண்ணம் போல!

39.5 மில்லியன் ரூபா வடபகுதிப் புனருத்தாரணத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்று பேச்சுவார்த்தைகளின் போது அறிவிக்கப்பட்டது தெரிந்ததே. இப்படி ஒதுக்கப்பட்ட பணத்தில் தான் சிமெந்து மற்றும் பொருட்கள் கொஞ்சம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டன என்று தகவல். சிமெந்து அனுப்பினால் பங்கர் கட்டுகிறார்கள் புலிகள் என்று ஜனாதிபதி குற்றம் சாட்டினார். நல்ல காலம் பொலிஸ் நிலையங்களும் சிறைச் சாலைகளும் கட்டாமல் பங்கர் தானே கட்டுகிறார்கள் என்று பொதுமக்கள் ஆசுவாசப்பட மீதிப்பணத்திற்கு என்ன ஆயிற்று என்பதுதான் கேள்வி. கொழும்பிலிருந்து சென்று பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டோர் மற்றும் பலர் கலந்து கொண்ட ஒரு விருந்தின் போது புலிகளுக்கு 39.5 மில்லியன் ரூபா கொடுக்கப் போகிறார்களாமே என்று யாழ்ப்பாண நகரத்தைப் புதிதாகக் கட்ட முன்வந்த கட்டிடக் கலைஞரைப் பார்த்துக். கேட்கப்பட்டது. அப்போது அவரும் அவரருகே அமர்ந்திருந்த இன்னொரு ஆலோசகரும் சிரித்தபடி சொன்னது:

"நல்லகதை; காசு எங்களிடம் தான் இருக்கும். Contract உம் எங்களிடம் தான் இருக்கும். புனர்நிர்மாண வேலைகளும் எங்களுடைய ஆட்கள் தான் செய்வார்கள்".

ஓரிரு வாரங்களுக்குப் பிறகு, இந்தப் பணத்தையும், புனர்நிர்மாண வேலைகளையும் கவனிக்க ஒரு பொறுப்பான நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டும் என்றும் அச்சபையில் அரசு தரப்பும் புலிகளும் அங்கத்துவம் வகிக்க வேண்டும் என்றும் யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது. அதன் பிற்பாடு 39.5 மில்லியன் ரூபா பற்றிய பேச்சே இல்லை!

சிட்டுக் குருவி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பத்மா இன்னொரு "பாபு"?

## பாதுகாப்பு அதிகாரிகள் சந்தேகம்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் சமூகத்தொடர்பு இணைப்பு அதிகாரியான பத்மா மகாராஜா இன்னுமொரு ''பாபு''வா? என ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளின் கடும் சந்தேகத்துக்கு உள்ளாகியுள்ளார்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான அவரால் (பத்மா மகாராஜா) காட்டப்படும் அசிரத்தையும், அவர் எதுவித பொறுப்புமின்றிச் செயற்படுவது தொடர்பாகவும் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் கடுங்கண்டனத்திற்குப் பாத்திரமாகியுள்ளார்.

ஜனாதிபதி தங்கியுள்ள அலரிமாளிகையினுள் உட்செல்லும் எல்லா வாகனங்களுமே முழுமையான சோதனையின் பின்பே உட்செல்லப் பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். எனினும், சில வாகனங்களை சோதனையிடப்படாது அலரிமாளிகையினுள் செல்லவிடுமாறு அவர் வாயிற் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதாகவும், அது மிகவும் அபாயத்திற்குரியதெனவும் உயர்அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதைத்தவிர, கடந்த சில தினங்களிற்கு முன் பரிசில் நடைபெற்ற இலங்கைக்கான உதவி வழங்கும் குழுக்களின் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி மீண்டும் இலங்கைக்கு வருகையில் அபுதாபி விமான நிலையத்தில் சிறிது நேரம் தங்கியுள்ள அதே சமயம், அவ்வாறு தங்கும் ஹொட்டேலைக் கூட ஒதுக்கியது பத்மா மகாராஜாவின் ஆலோசனையின் பேரிலேயே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உல்லாச ஹொட்டேலின் பாதுகாப்பு நடவடிக்கை மிகவும் பலவீனமான நிலையில் உள்ளதுடன், அது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடமாடும் இடமெனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இக்ஹொட்டேலில் தங்கியது தொடர்பாகப் பாதுகாப்பு அதிகாரிகளைப் போலவே, அபுதாபியின் தூதரக அதிகாரிகளும் சந்தேகத்திற்கும், கலவரத்திற்கும் உட்பட்டதாக இத்தகவல் வட்டாரங்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றன.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் முக்கியஸ்தர்களான கருணாரத்ன, துடுவெவத்த ஆகிய அதிகாரிகளும் இது தொடர்பாகப் பாதுகாப்புப் பிரிவின் உயர்அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ளதுடன் பத்மா மகாராஜா தொடர்பாக எழுந்துள்ள இப்பயங்கரப் பின்னணி தொடர்பாகப் பிரதமர் சிறிமாவோ கூட அவர் மீது சுடுசொற்களைப் பாவித்துள்ளதாகவும் அலரிமாளிகைத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

*றஷ்மிய - 950521*

## இன்னுமிருப்பது 182 மட்டுமே!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டினுள் உள்ள யாழ்ப்பாணக் குடா நாட்டினுள் தற்போது சிங்கள இனத்தவர்கள் 182 பேர் மட்டுமே வாழ்கின்றனர் எனத்தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தகவல் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. இச்சிங்கள இனத்தவர்கள் அநேகர் சிங்கள - தமிழ் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் ஆவர். அதே சமயம் சிலர் முழுமையாகவே சிங்களவர்களாவர். ஆனாலும் கணவன் - மனைவி இருவருமே சிங்களவர்களானாலும், தற்போது அவர்களின் பிள்ளைகள் கல்வி கற்பதும், நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தமிழ் மொழியிலாகும். இச்சிங்களவர்கள் மத்தியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் உறவினரான திருமதி பிசோ மெனிக்கேயும் உள்ளடங்குவார் என்று கூறப்படுகிறது.

*றஷ்மிய - 950521*

## மீண்டும் இஸ்ரேல்?

## பொ.ஐ.முவினுள் அதிருப்தி!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடைபெறும் யுத்தத்தில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இஸ்ரேல் ஆலோசகர்கள் குழுவொன்று இந்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக 'ஹிரு' வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்றாவது ஈழப்போர் ஆரம்பத்தில் அமெரிக்க இராணுவ வல்லுனர்களும், இராணுவ ஆலோசகர்களும் இந்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டு அவர்கள் கொழும்பிலும், அனுராதபுரப்பகுதியிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர். ஆனாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேசப் பேச்சாளர் லோறன்ஸ் திலகரை வொஷிங்ரனில் அமெரிக்க அரசதிணைக்களப் பிரமுகர்கள் இராஜதந்திர மட்டத்தில் வரவேற்பளித்ததால் அரசாங்கத்தின் உயர் மட்டத்தினரும், பாதுகாப்புப் பிரிவின் உயர் உறுப்பினர்களும் மேலும் அமெரிக்க இராணுவ ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வது இயலாது எனத் தெரிவித்துள்ளனர். இதனால் உயர் தலைமைப்பீடத்தினர் தமக்கு நெருங்கிய பாதுகாப்பு மற்றும் அமைச்சரவையின் ஒரு சில உறுப்பினர்களோடு நடாத்திய கலந்துரையாடுதலின் பின்பு இஸ்ரேல் ஆலோசகர்களை இந்நாட்டிற்கு வரவழைத்திருப்பதாக அறியப்படுகிறது.

இங்கு வந்துள்ள இஸ்ரேல் ஆலோசகர்கள் அனுராதபுரம் நடவடிக்கைகள் தலைமையகத்திற்குக் (Operational Headquarters) சென்று சில தகவல்களைப் பெற்றிருப்பதாகவும், அதன்படி இனிவரும் நடவடிக்கைகள் நடைபெறும் எனவும் தாம் தொடர்பு கொண்ட பாதுகாப்புப் பிரிவுப் பேச்சாளரொருவர் தெரிவித்ததாகவும் ஹிருவின் அச்செய்தி கூறுகிறது. இதே சமயம் இவ் இஸ்ரேலிய ஆலோசகர்களின் ஆலோசனையின் பேரில் இலங்கை விமானப்படையினால் இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள ஏ.என். - 32 (AN - 32) விமானங்கள் மூன்று, இதுவரை பெயர் வெளியிடப்படாத வெளிநாடொன்றிற்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டு அங்கு வைத்து இஸ்ரேல் தொழிநுட்பவியலாளர்களால் இந்த விமானங்கள் மூன்றிலும் ஏவுகணை எதிர்ப்பு உபகரணங்கள் பொருத்தப்படுமெனவும் கூறப்படுகிறது.

எவ்வாறெனினும் இதுவரை அரசாங்கக் கட்சிப் பாராளுமன்றக் குழுவிற்கோ அல்லது ஆகக்குறைந்தது அமைச்சரவைக்கோ கூடத் தெரியாத இந்த இஸ்ரேல் ஆலோசகர்களின் வரழைப்புப் பற்றி அரசாங்கக் கட்சியினுள்ளேயே பலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இஸ்ரேல் இராணுவ ஆலோசகர்களினாலேயே முன்பு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இராணுவப் பயிற்சியும், இராணுவத் தளபாடங்களும் வழங்கப்பட்டமையும் இவ் அதிருப்தியான விளைவு ஏற்படக்காரணமாகும் என ஹிருவின் அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

*ஹிரு - 950521*

## சிங்களப் பத்திரிகைச் செய்திகள்



யுத்தம் மீளத்தொடங்கிய பின்னர் கொழும்பு சிங்களப்பத்திரிகைகள் யுத்தம் தொடர்பாக வெளியிட்டுவரும் செய்திகள் பெருமளவு அதிகரித்துள்ளன. பல செய்திகள் ஆதாரமெதுவுமற்றவையாக, வெறும் 'யுத்த வியாபாரத்தை' நடத்துவதற்காகவும் கூட எழுதப்படுகின்றன. சிங்களப்பத்திரிகைகளில் வரும் சில செய்திகளை தமிழ்ப்படுத்தி இப்பகுதியில் தருகிறோம்.

சென்ற இதழில் 3ம் பக்கத்தில் 1ம் கலத்தில் வந்த செய்திகளும், புகைப்படம் பிடிக்கும் பொலிஸார் என்ற செய்தியும், 15ம் பக்கத்தில் வெளியான 'கொழும்பைத் தாக்க யாழ்ப்பாணத்தில் பயிற்சி' என்ற தலைப்பில் வெளியான செய்தியும் இந்தப்பகுதியில் பிரசுரிக்கவென தெரிவு செய்யப்பட்ட செய்திகளே. ஆயுனும், அவை இப்பத்தியிலன்றி வேறு பக்கங்களுக்குப் போய்விட்டன. வாசகர்கள் இவற்றை கவனித்துக் கொள்ளவும். தவறுக்கு வருந்துகிறோம்.

## முஸ்லிம் நாடுகள் விருப்பம்!

எழுந்துள்ள புதிய நிலைமையின் கீழ் வட - கிழக்கு யுத்தத்தில் இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கப் பாகிஸ்தான், ஈரான், குவைத், மலேஷியா, இந்தோனேசியா ஆகிய முஸ்லீம் நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், அவ் உதவிகள் மிக விரைவில் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளதாகவும் எமது தகவல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் முஸ்லீம் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், அப்பகுதிகளில் முஸ்லீம் மக்களின் இருப்புத் தொடர்பாக எழுந்துள்ள அச்சுறுத்தலுக்கு முகங்கொடுப்பதற்காகவும் இவ்வுதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

*யுக்திய 950514*

## உக்ரேனிலிருந்து 'சாம்'!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கை விமானப் படையின் ''அவ்ரோ'' விமானங்களை அழிக்கப் பாவித்த ஏவுகணைகள் சோவியத் யூனியனிலிருந்து பிரிந்து சென்ற உக்ரேன் அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்டிருக்கிறது. அவர்கள் பாவித்துள்ளது எஸ்.ஏ. 7 பீ குறுந்தூர வெப்பத்தைத் தேடிச் செல்லும் ஏவுகணை (S.A. - 7B Grail - Short Range Shoulder Launched Heat - Seeking Missile) என இந்தியாவிலிருந்து வெளியிடப்படும் 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தரையிலிருந்து, ஆகாயத்திற்கு சுடக்கூடிய (SAM) ஏவுகணைகள் தமிழீழ விடுதலைப் புலிகளிற்குக் கிடைத்தவுடன் வட கிழக்கு பிரச்சினை முழுமையாகவே புதிய வடிவம் எடுத்துள்ளதாகவும் அவை இலங்கைப் படையினரைக்கடும் அமுக்கத்திற்குள் சிக்க வைத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டும் ''ஹிந்துஸ்தான் ரைம்ஸ்'' பத்திரிகை, தற்போது இலங்கை விமானப்படைக்கு மிக உயர்வாக வானத்திலிருந்து குண்டுகள் வீசக்கூடியதாயிருந்தாலும், இவ்வேவுகணைகள் காரணமாக தமது முகாம்களுக்கு விநியோகம் (Supply) செய்ய முடியாத நிலைமையொன்று உருவாகியுள்ளதாக இராணுவ விமர்சகர்கள் தெரிவித்ததாக குறிப்பிடுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் சாம் ஏவுகணைகள் இருப்பதானது அவர்களின் பிரிவினை யுத்தத்தில் தீர்மானகரமான கட்டமொன்றிற்கான நுழைவு என ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் யோகேந்திரா பாலரத்னராஜா ''ஹிந்துஸ்தான் ரைம்ஸ்'' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில், யாழ் குடாநாட்டின் ஒவ்வொரு இடங்களிலும் தனித்தனியே இராணுவ முகாம்கள் மீது காலை நேரங்களில் கூட மாபெரும் அளவிலான தாக்குதலொன்றை நடத்துமளவிற்கு துணிவை இவ்ஏவுகணைகள் அவர்களிற்குப் பெற்றுக் கொடுத்திருப்பதாகவும் குறிப்பிடும் மேஜர் ஜெனரல் பாலரத்னராஜா இதுவரை ஆகாயம் தொடர்பாக இலங்கை விமானப்படைக்கு இருந்த தெளிவான அதிகார பலம் காரணமாக புலிகள் கைப்பற்றி வைத்திருந்த நிலப்பரப்பை அவர்களால் விஸ்தரிக்க இயலாது இருந்ததாகக் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏவுகணைகளை விலைகொடுத்து வாங்கியது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கமும், அரசாங்கத்தின் உளவுப்பிரிவும் தவறியமை பற்றி நடுநிலை விமர்சகர்கள் ஆச்சரியப்படுகிறார்கள் எனவும் கடந்த ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏவுகணைகள் உட்பட இராணுவ ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளையும், கப்பலொன்றையும் கூட உக்ரேனிடமிருந்து விலைக்கு வாங்கி வடபகுதிக்குக் கொண்டு வந்து சேர்த்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

*றாவய - 950521*

## கப்பிற்றல் ஹீறோஸ்!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வன்முறை நடவடிக்கைகள் திட்டப்பிரிவின் முன்னணி உறுப்பினர்கள் ஐவரைக் கொண்ட ''கப்பிற்றல் ஹீறோஸ்'' (Capitol Heroes) என்ற பெயரில் தெரியவரும் குழுவொன்று கொழும்பிற்கு வந்துள்ளதாக படையினருக்குத் தகவல் தெரியவந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்திட்டத்திற்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கும், அவ் இயக்கத்திற்கு வெளிப்படையாக எதிராகச் செயற்படும் தமிழ் அரசியல் கட்சிகள் , அமைப்புக்கள், இயக்கங்களின் தலைவர்கள், தீவிர உறுப்பினர்கள் உட்பட, அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் தமிழ்த் தலைவர்கள், தமிழ் வர்த்தகர்களையும் படுகொலை செய்ய திட்டம் தீட்டுவதும், செயற்படுத்துவதும் இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

கொழும்பு நகரம் பற்றியும் புலிப் பயங்கரவாதிகளின் படுகொலைப் பட்டியலிலுள்ள தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களின்தும், மேற் குறிப்பிடப்பட்ட ஏனைய தமிழ்த் தலைவர்கள், நபர்களுடனும், அவர்களது நடவடிக்கைகள் தொடர்பாகவும் அவர்களது பாதுகாப்பு ஒழுங்குகள் தொடர்பாகவும் இக்குழுவிற்கு நல்ல அறிவுள்ளதாகவும், அதனால் அவர்கள் ஐவரையும் இதற்காக ஈடுபடுத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளதாகப் படை சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இக்குழுவின் தலைவராகச் செயற்படுபவர் வடபகுதியிலிருந்து வந்துள்ள ராமாதிசிங்கம் என்பவரெனப் படையினர் நம்புகிறது. தலை நகரத்திற்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையே அடிக்கடி சென்றுவந்தபடி படுகொலைத்திட்டம் தொடர்பாகத் தமது தலைவர்களிடமிருந்து ஆலோசனை பெற்றுக்கொள்ளும் இக்குழு, அவ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், அவர்களின் உறவினர், நண்பர்கள், கட்சி உறுப்பினர்களுடனும் உறவைக் கட்டியெழுப்பவும், அதனூடாக இப்படுகொலை நடவடிக்கைகளை எளிதாகவே நடாத்தி முடிக்கவும் கடும் உழைப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் படையினர் தெரிவிக்கின்றனர்.

சில வாரங்களுக்கு முன் கொள்ளுப்பிட்டி கடற்கரை வீதியிலமைந்துள்ள அவரது வீட்டினுள்ளேயே படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாண ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் குமாரசாமி விநோதன் படுகொலை செய்யப்பட்டதும் இந்த ''கப்பிற்றல் ஹீரோஸ்'' குழுவாலேயே என நம்பப்படுவதாகப் பொலிஸ் விசாரணைப் பிரிவு தெரிவிக்கிறது. தற்போது அக்குழுவின் உறுப்பினர்கள் ஐவரையும் கடுமையாகத் தேடிவருகின்றனர் பொலிஸார்.

*லங்காதீப - 950522*

தொகுப்பு - விவேக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மு.காவால் நான் இடம் மாற்றப்படவில்லை!

ஏப்ரல் 6 - ஏப்ரல் 19 , 1995 (இதழ் 69) சரிநிகர் பத்திரிகையில் ''முஸ்லீம் காங்கிரஸ் அரங்கேற்றும் அடாவடித்தனங்கள்'' எனும் தலைப்பில் வெளியான கட்டுரையில் 4வது பந்தியில் ''ஓட்டமாவடி மத்திய மகா வித்தியாலய அதிபருக்கு இடமாற்றம் கொடுத்தது வரை'' எனும் பதங்கள் தற்போது மட்டக்களப்பு ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் அதிபராக இருக்கும் என்னையே பெரும்பாலும் சுட்டுகிறது என்பதை உணர்கிறேன். அதனால் இவ்விடயம் சம்பந்தமாக எனது பின்வரும் கருத்தையும் மறுதலிப்பையும் தயவு செய்து எதிர்வரும் சரிநிகரில் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் 1993 டிசம்பரில் பலரின் வேண்டுகோளுக்கு இணங்க அதிபராக நியமிக்கப்பட்டேன். இதில் முக்கியமாக பாடசாலை அபிவிருத்திச் சபை ஆசிரியர் மன்றம், நலன் விரும்பிகள் போன்றவர்களுடன் குறிப்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப், கௌரவ பஸீர் சேகுதாவூத் அவர்களும் அடங்குவர். நான் அதிபராக நியமிக்கப்பட்டதும் என்னை இடமாற்றம் செய்வதற்கு இப்பிரதேச ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் சிலர் அதிகப் பிரயத்தனம் எடுத்துக் கொண்டனர். எனினும் அது கைகூடவில்லை.

இக்கால இடைவெளிக்குள் கல்லூரியின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகளில் சகல தரப்பினரும் ஒத்துழைப்பையும் பெற்று செயற்படுத்திவந்தேன். இந்நிலையில் 1994 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் காரணமாக முஸ்லீம் காங்கிரஸின் உள்ளூர் ஆதரவாளர்கள் சிலர் மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது உண்மை. இதையறிந்த இப்பிரதேச பெற்றோர்கள் நலன்விரும்பிகள், சமூக ஸ்தாபனங்கள் போன்றவை இம்முயற்சியைத் தடுத்து நிறுத்துமாறு கல்வி உயர்கல்வி அமைச்சர், மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஆளுநர், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர், புனர்வாழ்வு கப்பற்துறை அமைச்சர், தபால் தொலைத் தொடர்பு பிரதியமைச்சர் ஆகியோர்களைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க எனது இடமாற்றம் நடைபெறவில்லை.

எனவே மேற்படி பத்திரிகைச் செய்தியில் என்னை இடமாற்றிவிட்டதாகக் குறிப்பிட்டிருப்பது உண்மைக்குப் புறம்பான செய்தி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***எம்.சி.ஏ.மொகமட்***
***ஓட்டமாவடி***

## பொட்டம்மான் – புதுவை நிலைப்பாடு!

புலம் பெயர்ந்தோர் எதிர்ப்புக் கருத்தை தனது பிறவிக்குணமாகக் கொண்டது சரிநிகர் என்று புகலிடத்தில் அதன் வாசகர்கள் தொன்று தொட்டுக்கண்டு வந்ததை மீண்டும் எழுதி நினைவூட்டுவது பலருக்கு அலுப்பைத் தரலாம் அவர்கள் பொறுத்தருள்க.

ஆழ்வார்க்குட்டி நிச்சயமாக அகதியாக இருந்திருக்க முடியாது என்றும், ஆதலால் அவர் புகலிட வாழ்வனுபவங்கள் குறித்து புரிந்து கொள்ள முடியாது போகிறார் என்றும் அவரது நாலுகலம் கண்டுபிடிப்பை நாலுநிமிடத்தில் வாசிக்கும் யாரும் அறிவர்.

புலம்பெயர் இலக்கிய வெளிப்பாடுகள் தன்னைத் 'தமிழில்' என்று குறுக்கி அடையாளம் கண்டு கொள்வதை ஏற்றுக்கொள்வதில்லை. புகலிட மொழிகளிலும் தமிழிலும் எழுதும் புலம்பெயர்ந்த படைப்பாளிகள் எழுத்துகள் தமிழிற்குப் புதிது என்று கூறுவது கொழும்பில் சிலருக்குப் பொறுக்கமுடியாமல் இருக்கிறது.

பொட்டம்மான் - புதுவை இரத்தினதுரை நிலைப்பாட்டைப் புலம் பெயர்ந்தோர் இலக்கியத்திலும் ஆழ்வார்க்குட்டி வைத்துக் கொள்வது குறித்து நமது கவலையாதெனில் இவ்வாசகதிலகத்தின் இலக்கிய அறியாமைக்கும் தாமத விளக்கத்திற்கும் 'சிங்காரம்' விடுகாயாக சிதறப்பட்டது குறித்துத்தான்.

சும்மா விளங்கக்கூடிய சிங்காரத்தை விளக்குவதற்கு ஆழ்வார்க்குட்டிக்கு புகலிட இலக்கியத்தின் தேய்வு தேவையாக இருக்கிறது.

நமது தந்தையைத் தேடிக்கொண்டிருப்பதாக நாம் யாருக்காவது சொன்னோமா? பெண்ணிலைவாதிகள் இதைக் குறியீடாகப் பயன்படுத்தியதற்கு ஆழ்வார்க்குட்டியை மன்னிக்கார் என்பது இன்னொரு பிரச்சினை.

எல்லா இலக்கியப் போக்குகளுக்கும் தந்தையைத் தேடுவது பழைய புத்தாம் பசலிச்சிந்தனைப் போக்கு. பிரதியைப் பிரதியாக பார்க்க ஆழ்வார்குட்டி கற்றுக்கொள்வது பிறரை எரிச்சலாக்காதிருக்க அவருக்கு உதவும்.


அன்றியும் நமது மூலம் எதுவென்று கொழும்பில் இருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளும் நிலையில் நாம் இல்லை.

தந்தையைத் தேடித்தான் தமிழில் புகலிட இலக்கிய தரிசனம் செய்வேன் என ஆழ்வார்குட்டி அடம்பிடித்தால்

''அற்றைத் திங்கள் அவ்வெண்ணில்வில் எந்தையும் உடையேம்
எம் குன்றும் பிறர் கொளார்,
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்
வென்றெறிமுரசின்
வேந்தர் எம்குன்றும் கொண்டார்
யார், எந்தையும் இலமே!''

என்று பறம்புமலை அரசன் பாரியின் மக்கள் பாடியதாகக் கபிலர் குறிப்பிடுகிறார். ஆழ்வார்குட்டி அதற்கும் அப்பால் தேடி ஆராய்ந்து மூதாதையரிடம் போவது நல்லது.

***சுகன்***
***பிரான்ஸ்***




## நகைச்சுவைப் பகுதி ஆரம்பித்தாலென்ன?

அறியவரகிற அனைத்தையுமே தவறாக வியாக்கியானஞ் செய்தே தீருவது என்ற சபதத்துடன் சரிநிகரில் எழுதி வருகிற துடைப்பான் இம்முறை என்னுடைய இரண்டு தமிழாக்கங்கள் பற்றிய தனது குறிப்புகள் மூலம் தனது சபதத்திற்கு பங்கமில்லாமல் நடந்துள்ளார். (சரிநிகர் 70, பக்கம் 13) கவிதைகளின் ஆன்மா மொழிபெயர்ப்பில் இறப்பு நிலை (!) எய்தியதாகக் குறிப்பிடும் இரண்டு கவிதைகளதும் மூலத்தை அரபு மொழியில் அவர் வாசித்திருப்பார் என நான் எண்ணவில்லை. எனது தமிழாக்கத்துக்கு ஆதாரமாயிருந்த ஆங்கில மொழிபெயர்ப்புக்களைக் கூட அவர் அறியார் என்பது என் ஊகம்.

அவர் குறிப்பிட்ட ஒரு தமிழாக்கங்களது மூலவடிவங்களும் (அதென்ஸ் விமானநிலையம், அவர்கள் என்னைப் பிணமாகக் காண விரும்புகின்றனர்) வழமையான வரிப் பிரிப்பின்றி ஒரு நீள்ப்பந்தியாக எழுதப்பட்டவை. இவ்வாறான கவிதை வடிவம் இன்று தமிழில் அரிது. எனவே, அச்சில் வந்த பந்தியின் ஒவ்வொரு வரியையும் நான் பிரித்தெழுதிய வரியாகக் கொண்டு தன் தலையைக் குழப்பிக் கொண்டுள்ள துடைப்பான், தான் எழுதுவதை எழுதுமுன் கவிதை பற்றித் தெரிந்த எவரிடமாவது காட்டி ஆலோசனை பெற்றிருக்கலாம்.

புதுக்கவிதை என்றால் வரிக்கு மூன்று வார்த்தைகட்கு மேல் வராது, மரபுக் கவிதை என்றால் வரிகள் எல்லாம் சம நீளம் என்றவாறு கவிதையைப் புரிந்து கொண்டிருக்கிறவர்கள் எல்லாம் கவிதை பற்றி விளக்கம் எழுத வெளிக்கிட்டால் பிரச்சினைதான். பாரதியின் வசன கவிதையும் உரைநடைப்பாங்கானதுதான். தர்விஷின் கவிதைகள் சிலவும் அவ்வாறே என்பதை இங்கு குறிப்பிடல் பொருந்தும். நிற்க,

சரிநிகரில் ஒரு நகைச்சுவைப்பகுதி ஆரம்பித்தாலென்ன? துடைப்பான் வெகு சீரியஸாக எழுதுகிற எல்லாவற்றையும் அங்கு பிரசுரிக்கலாம்.

***சி.சிவசேகரம்***
***கொழும்பு - 13***

## தமிழ்ப் புத்திஜீவிகள் சிரிக்க வைக்கிறார்கள்

நான் சரிநிகரை தொடர்ந்தும் வாசித்து வருகிறேன்., பிரமாதம்!! அரசு - புலிகள் பேச்சின் போது கூட நிதானம் இழக்காமல் கூர்மையாக அவ்தானித்து பழங்கால நிகழ்வுகளையும் எடைபோட்டுக் கருத்து தெரிவித்த தங்களின் பத்திரிகையின் ஆருடம் மெய்யாய்போனது. எதிர்பாாத்த யுத்தம் எதிர்பாரா நேரத்தில் வந்துவிட்டது. இனிவரும் ஒவ்வொரு துன்ப துயரங்களும் வர்ணிக்க முடியா துன்பமாக இருக்கப் போகின்றது. எதுவென்றாலும் குள்ள நரித்தனங்களுக்கு சரணாகதி அடைவது தமிழரின் உரிமையை பெற்று தந்துவிடும் எனப்பலர் கருத்து பகர்வது பெரும் வேடிக்கையானதே. அறியாமை, சகிப்புத்தன்மையற்றவர்கள் தான் அப்படி பகர்கின்றார்கள் என்றால் பல சமாதானவாதிகள் எனப்படும் வியாபாரிகளும் அப்படியே சொல்வது வருத்தத்துக்குரியது.

இலங்கைத் திருநாட்டின் இடதுசாரிகளின் லீலாவிநோதங்கள் ஒன்றும் நாம் அறியாததல்ல. அவ் இடதுசாரிகளிலும், தான் வித்தியாசமானவர் என சிற்சில வழிகளில் நிரூபித்த வாசுதேவநாணயக்கார அவர்கள் நீருக்குள் தீ கொண்டு செல்பவர் போல் பல காரியங்களில் ஈடுபடுவது துரதிர்ஷ்டமானது. பாம்புக்கு தலையையும், மீனுக்கு வாலையும் காட்டும் விலாங்குத்தனம் தான் வாசுவிடம் இருக்கிறதா என்று கேட்க வேண்டிய நேரம் இது. விஜயகுமாரணதுங்கவின் நினைவுதின பேரணியின் போது நடந்து கொண்ட அவரின் நடத்தை அண்மைக்கால சிறு உதாரணமாகும்.

மற்றும் வெண்பா நன்றாக இருக்கின்றது. மெல்லத்தமிழினியை ஏன் காணவில்லை? தலைகாட்டச் செய்யவும்.

மற்றும், வ.ஐ.ச.ஜெயபாலன் அவர்களால் ஜனாதிபதிக்கு எழுதிய பகிரங்க கடிதம் கண்டேன். கடந்த காலகட்ட பேரினவாத சிங்கள அரசக்கட்சியினர் நடாத்திய தகிடு தத்த விளையாட்டுக்களை பரிதாபகரமாக மறந்த பல அப்பாவித் தமிழர்களில் ஜெயபாலனும் விதிவிலக்கல்ல. போல் தெரிகிறது. எனவே தான், திருமதி சந்திரிகா குமாரணதுங்க அவர்களின் மேல் வைத்திருந்த தீராத நம்பிக்கை குடைசாய்ந்து விட்ட ஏமாற்றத்தில் பல கண்டனக்கணைகளைத் தொடுத்து சரமாரியாக திட்டித்தீர்த்து கொதித்து எழுதிக் குவித்துள்ளார். பரவாயில்லை பிரமாதமாக இருந்தது! கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம். கடந்த தேர்தல் காலத்தை நினைத்துப் பார்க்கிறேன். பல தமிழ்ப் புத்திஜீவிகளின் நிலைப்பாடுகளை எண்ணி சிரிக்க வேண்டியிருக்கிறது.

***கேகாலைமலர்***
***கேகாலை***

## வாசுவிடம் சில கேள்விகள்

மார்க்ஸியம் கதைக்கின்ற இலங்கையின் இடதுசாரிகளின் கொள்கைகட்கும் செயல்கட்குமிடையே எப்போதும் பாரிய இடைவெளி இருந்து வந்துள்ளது என்பது வரலாற்று முடிவு. இம்மனிதர்களில் ஒருவராகத்தான் நாம் எமது மூத்த இடதுசாரி என்று கூறிக்கொள்ளுகின்ற வாசுதேவ நாணயக்கார அவர்களைப் பார்க்கின்றோம்.

பெரும்பாலானவர்கள் பேரினவாதிகளாகவும், அவர்களை பின்பற்றுபவர்களாகவும் இருக்கும் போது தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்; அவர்களது உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று அன்று தொடக்கம் உரத்து குரல் எழுப்பிவரும் சிங்களவர்களில் ஒருவரான வாசுதேவ அவர்கள்; ஏழத்தாழ அரைநூற்றாண்டு காலமாக பௌத்த மயப்பட்ட சிங்கள பேரினவாதத்தால் ஏமாற்றப்பட்டு, சுதந்திரத்திற்காக தமது உரிமைகட்காக் போராடிவரும் தமிழ் பேசும் மக்கள் தொடர்பாக சரிநிகர் 72இல் பிரசுரிக்கப்பட்ட வாசுதேவ அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் வாசுதேவ அவர்கள் பற்றிய மேற்குறிப்பிட்டவாறான ஒரு கணிப்பிற்கு தவிர்க்க முடியாதபடி மக்களை இட்டுச் செல்கின்றன.

புலிகள்; தமிழ்மக்களது உரிமைகள் தொடர்பாக கொண்டுள்ள இறுக்கமான போக்கு தான் அரசு இறங்கிவந்து பேச்சுவார்த்தை நடாத்த காரணம் என்பதை வாசுதேவ அவர்கள் புரிந்து கொள்வது நல்லது. போர் என நால் போர் என்று கூறிய இனவாதி ஜே.ஆருக்கும் சமாதானம் என்றால் சமாதானம் என்று கூறி ஏமாற்ற முற்படும் சந்திரிகாவிற்கும் உள்ள இடைவெளியை நிரப்புவது புலிகள்தான்.

இப்பொழுது வாசுதேவ. அவர்களின் கடிதத்தை பார்ப்போம்; கடித்த்தின் மூன்றாம் பந்தியில் ''அரச தரப்பில் பலவிதமான குறைகள் இருந்தபோதும், யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவந்து பேச்சுவார்த்தையை சுமூகமாக நடாத்துவதற்கான ஒரு நிலைமையை தோற்றுவிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் உண்மைத்தன்மையை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றார்கள்'' என்று கூறப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற வேண்டுமென்பதற்காக; அரச தரப்பில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று தயவு செய்து விளக்க முடியுமா?

போர் தவிர்ப்பு சூழ்நிலை, போர் நிறுத்தமாக மாற்றப்பட வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கை உதாசீனம் செய்யப்பட்டது ஏன்?

பேச்சுவார்த்தைக்கு முடிவெடுக்கும் தகவுள்ள அமைச்சர்களை அனுப்பிவைக்குமாறு புலிகளால் பலதடவை கோரப்பட்ட போதும்; ஏன் அவ்வாறு செய்யப்படவில்லை?

மேற்கூறிய வினாக்களுக்கு தங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் தங்களது அரசால் தகுந்த பதிலைத்தர முடியுமா?

பேச்சுமுறிய, அரசுவிட்ட தவறுகள்தான் காரணம் என்று கூறிய ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் கூற்றுக்கு உங்களது பதில் என்ன? அண்மையில் இந்திய பத்திரிகையொன்றிற்கான பேட்டியில் சந்திரிகா அவர்கள் ''ராஜீவை புலிகள் தான் கொன்றார்கள்'' என்று கூறுயிருக்கின்றார். புலிகளோடு பேசும் போது புலிகள் சிறந்தவர்கள் பேச்சு முறிந்த பின் அவர்கள் கொடூரமானவர்கள். இது தான் உங்கள் தரப்பு நியாயமா?

பேச்சுவார்த்தைக்கு என்ன முன் நிபந்தனைகளையும் போடவேண்டாம் என்று புலிகளிடம் கேட்டதாக குறிப்பிட்டுள்ளீர்கள் நல்லது.

பிரபாகரன் உங்களிடம் ஆயுதம் கேட்டாரா அல்லது பணம் கேட்டாரா நிபந்தனையாக?

தனது அரசு புலிகளுடன்தான் யுத்தம் புரிகிறது, தமிழ் மக்களுடன் அல்ல என்று ஜனாதிபதி அவர்கள் மே 22 அன்று ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார்.

பூநகரிபாதை என்ன புலிகள் தாங்கள் போய் வருவதற்காகவா திறக்கச் சொன்னார்கள்? ஜனாதிபதி அவர்களுக்கு தெரியுமோ தெரியாது; ஆயினும் வாசுதேவ அவர்களே உங்களுக்கு சிலவேளை யாரும் சொல்லியிருக்கலாம்;

தாண்டிக்குளத்தில் பொறிவெடிகள் புதைத்துவைக்கப்பட்ட வயல் வரம்புகளினூடு தமிழ் மக்கள் நடத்திச் செல்லப்பட்டனர்; இதனால் பலர் கால்களை இழந்தனர். இராணுவத்தினது இவ்வாறான மனித உரிமை மீறல்கள் நிகழுகின்ற போது; அவ்வாறான இன்னுமோர் பாதை பூநகரியில் உருவாவதை தனது மக்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு இயக்கம் ஏற்றுக்கொள்ளும் என்று கருதுகின்றீர்களா?

தாண்டிக்குளத்தை தாண்டும்போது எத்தனை அப்பாவி மக்கள் இராணுவ வெறியாட்டத்திற்கு பலியானார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா? இதேபோல் பூநகரியிலும் ஏற்பட வேண்டுமென்று கருதுகிறீர்களா?

நல்லது; புலிகளுடன்தான் யுத்தமென்றால் ஏன் வடகிழக்கு மக்களுக்கு அன்றாடப் பொருட்கள் செல்வதை தடுக்கின்றீர்கள்? ஆயின் மக்களெல்லாம் புலிகள் என்று கூறுகின்றீர்களா? உங்கள் மொழியில் தமிழ்மக்கள் பயங்கரவாதிகள் அப்படித்தானா?

உங்களது அரசு மீன்பிடிதடையை நீக்கியதாகச் சொல்லியது, எரிபொருள்தடையை நீக்கியதாகச் சொல்லியது. ஆனால் கடற்படையால் தாக்கப்பட்ட மீனவர்கள் எத்தனைபேர் தெரியுமா? எவ்வளவு எரிபொருள் இராணுவத்தால் அனுமதிக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியுமா?

***சித்தாந்தன்***
***கரவெட்டி***

## திருத்தம்

இலங்கைப் பத்திரிகைக் கவுன்சில் அமர்வொன்றின் போது (02.05.1995) ''சரிநிகர்'' பத்திரிகையின் 30.06.1994 திகதிய இதழில் வெளிவந்த செய்தியொன்றில் காணப்பட்ட சில கருத்துக்கள் ( Statements) எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பாக திரு.எஸ்.தவராஜா தனது வீட்டுக் கதவுகளுக்கும், யன்னல்களுக்கும், கட்சியினால் வழங்கப்பட்ட பணத்திலிருந்து நீலநிறப்பெயின்ற் வாங்கிப் பூசவில்லை என்பதையும், அவர் கட்சிப் பணத்தை தவறாகப் பயன்படுத்த (Misappropriate) வில்லை என்பதையும், அவரை விலக்கக் கட்சி தீர்மானிக்கவில்லை என்பதையும், நிதிச்சோர்வு காரணமாக ஆலங்கேணி புனர்வாழ்வுக் கழகத்திலிருந்து அவர் நீக்கப்படவில்லை என்பதையும் நாம் தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்திரிகை கவுன்சிலால் இவ்விடயம் தொடர்பாக எத்தகைய விசாரணைகளும் இன்னமும் மேற்கொள்ளப்படாத போதும், இவ்வாறான ஒரு திருத்தத்தை வெளியிடுமாறு நாம் பத்திரிகை கவுன்சிலால் பணிக்கப்படவில்லை என்ற போதும், திரு.தவராஜா அவர்களுடைய நலன்கருதி இத்திருத்தத்தை இங்கு பிரசுரிக்கிறோம்.

ஆ-ர்

www.tamilarangam.net



# பகவத் சிங்கும் பிரபாகரனும்

நாசமறுப்பான்



"புலிகள் திரும்பவும் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டுமானால், அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டுப் பேச வரவேண்டும். அது மட்டுமல்ல, பிரபாகரனே பேச்சுவார்த்தையில் நேரடியாகக் கலந்து கொள்ள வேண்டும்".

- எங்கேயோ கேட்ட குரல்போல இருக்கின்றதல்லவா?

ஆம்! பதினான்கு மாதம் நீடித்த பிரேமதாசா கால பேச்சுவார்த்தைகளின் முறிவுக்குப் பின்னர், அன்றைய ஐ.தே.க. அரசு தரப்பில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்த கருத்துக்கள் தான் இவை. இவைபற்றி இப்பத்தியில் நாம் ஏற்கெனவே பேசியுள்ளோம்.

ஐ.தே.க. அரசுகளுக்கும், இன்றைய அரசாங்கத்துக்கும் இடையில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான அணுகுமுறையில் எத்தகைய பாரிய வேறுபாடும் இல்லை என்பதை மீளவும் மெய்ப்பிக்கும் வகையிலான ஒரு பேச்சு இது.


நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களை முழங்குவதன் மூலமாக, தம்மைச் சிங்கள இனத்தின் பாதுகாவலர்களாக காட்டித் தமது குறுகிய அரசியல் இலாபத்தையும் பிழைப்பையும் தொடர்ந்த முன்னாள் ஐ.தே.க. தலைவர்களின் வழிமுறையை இன்றைய அரசுத் தலைவர்களும் தொடங்கியிருப்பதை இது தெளிவுபடுத்துகிறது. 'நாம் நடாத்தும் யுத்தம் புலிகளுக்கு எதிரானதே அன்றி தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல அவர்கள் தான் அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் எதிராக யுத்தம் செய்கிறார்கள் என்பதோ, எமது படைவீரர்கள், எத்தகைய நிலைமையையும் சமாளிக்க வல்லவர்கள், அவர்களை நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் வஞ்சிக்கவில்லை என்பதோ போன்ற ஜனாதிபதியின் கருத்துக்கள் கூட இதே பழைய பிழைப்புவாதிகளின் அதே புளித்துப்போன குரலையே வெளிப்படுத்துகின்றன.

கடந்த இரு வாரங்களில் நடைபெற்ற கல்லாராவ மீனவர்வாடிகள் மீதான புலிகளின் தாக்குதல்கள், பௌத்த மதகுருவான திம்புலாகல சீலாலங்கார தேரோவின் கொலை போன்ற விடயங்கள், புலிகள் சிங்கள மக்களை கொல்லும் படுகொலையாளர்கள் என்ற கூற்றுக்குப் பலமூட்டுபவையாக உள்ளன. தனிநபர்களை கொலை செய்வது, சிங்கள குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடாத்துவது போன்ற மிகவும் கோழைத்தனமான நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுவது இது முதல் தடவையல்ல. திட்டமிட்ட குடியேற்றங்களும், அரச படைகளின் ஆதரவுடன் நடாத்தப்படும் தமிழ்ப்பகுதி கரையோரங்கள் மீதான ஆக்கிரமிப்பும் இந்த நாட்டின் அரசியல் பிரச்சினையின் பிரிக்கமுடியாத அம்சங்களாக இருந்து வந்துள்ளன என்பது எவ்வளவுதான் உண்மை என்றாலும், இத்தகைய தாக்குதல்கள் எந்தவிதத்திலும் நியாயப்படுத்தப்பட முடியாதவை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இத்தகைய கொலைகள், பரந்துபட்ட சிங்கள மக்களின் மற்றும், உலக அபிப்பிராயத்தின் முன் புலிகளை மேலும் அந்நியமாக்குவதுடன் அவர்களே கூறுகின்ற 'தமிழ் மக்களின் சுதந்திர'த்திற்கும் பலத்த பின்னடைவையே கொடுக்கும்.

ஆனால், இலங்கை அரசும் சரி, அதன் படைகளும் சரி, சிங்கள இனவாத வெறியை ஊட்டிக் கொண்டிருக்கும் சிங்கள, ஆங்கில பத்திரிகைகளும் சரி, இந்தமாதிரி விடயங்களை தமது அரசியல் மற்றும் வியாபாரங்களுக்காகப் பயன்படுத்துவதில் காட்டுகின்ற தீவிரத்தை, இவ்வாறான நிலைமைகளை இல்லாதொழிப்பதில் காட்டுவதாக இல்லை.

உதாரணமாக, திம்புலாகலை தேரர், டி.எஸ். சேனநாயக்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களில் ஒன்றை 'தமிழ் மயமாக்கலிலிருந்து' பாதுகாக்கவென பொலநறுவை மாவட்டத்திற்கு சென்றவர். ஆயதப் படைகளது பாதுகாப்புடனும், அரசியல்வாதிகளது ஆசீர்வாதத்துடனும் சிங்களக் குடியேற்றங்களை திட்டமிட்டு சிங்கள அரசாங்கங்கள் நடாத்தி வந்த போது அவற்றை முன்நின்று நடாத்திய பல பத்து பௌத்த பிக்குகளில் இவரும் ஒருவர். தமிழ் தேசிய இனப்பிரச்சினை தீவிரமடைய காரணமாக இருந்த இந்த குடியேற்றத் திட்டங்கள் தொடர்பாக தொடர்ச்சியானதும் உறுதியானதுமான ஒரு கொள்கையையே - அதாவது தமிழ் பகுதிகளில் தமிழர்களை சிறுபான்மையினராக்கும் நோக்கையே - எல்லா அரசுகளும் கொண்டிருந்தன.

ஆயுதமேந்திய இளைஞர்களின் போராட்டங்கள் வெடித்தபின், சிங்கள அரசுகளும், அரசியல்வாதிகளும் தமது பௌத்த சிங்கள மேலாதிக்க வாதத்துக்கு கருவிகளாக பயன்படுத்தி எல்லைப்புறங்களில் குடியேற்றிய பலநூறு வறிய அப்பாவி சிங்கள விவசாயிகள் பலிக்கடாக்களாகிப் போயிருக்கிறார்கள். குடியேற்றும் போதே இனக்குரோத மூட்டப்பட்டு குடியேற்றப்பட்ட இவ்விவசாயிகளுக்கும், அயல் கிராமங்களைச் சேர்ந்த தமிழ் விவசாயிகட்குமிடையில் நிரந்தரப் பகைமை அல்லது சந்தேகமும் கூடவே குடியேற்றப்பட்டன. இவ்வாறான எல்லைப்புற கலவரங்கள், தாக்குதல்கள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் கோரிக்கைகள் எவற்றையும் குறித்து அரசு தரப்பில் எத்தகைய நிதானிப்பும் இருந்ததில்லை. மாறாக, நிலைமை இங்கு தொடர்ந்தும் மோசமாக இருக்கும் விதத்தில் அக்குடியேற்றவாதிகளுக்கு ஆயுதங்களும் படையினர் பாதுகாப்பும் வழங்கப்பட்டுவந்தன.



புலிகளது சிங்கள மீனவர்கள் மீதான தாக்குதலும் இவ்வாறான ஒரு வாடியிலேயே நடந்துள்ளது. வடக்கு கிழக்கு மீனவர்களுக்கு அவர்களுடைய கடற்பரப்பில் மீன்பிடிக்க முற்றாக தடைவிதித்துவிட்டு, அரசு பாதுகாப்புடன் பிறமாவட்ட மீனவர்கள் தமிழ் கரையோரப் பரப்புகளை நோக்கி நகர்ந்து மீன்பிடிக்க அனுமதிப்பதும் கடந்தகால அரசுகளின் ஒரு 'தேசபக்த' பணியாக இருந்து வந்துள்ளது.

ஆக், புலிகளின் சிங்கள மீனவர்கள் மீதான தாக்குதலோ, பௌத்த குருமீதான தாக்குதலோ கண்டிக்கப்பட வேண்டிய செயல்கள் என்று கூறும் அதேவேளை கூட, இவைக்கான பொறுப்பு அரசாங்கத்துக்கும், சிங்கள அரசியல்வாதிகள், மற்றும் பத்திரிகைகளுக்கும் உண்டு என்பதையும் மறுக்கமுடியாது.

அதுவும், புலிகளை படுகொலையாளர்கள் என்றும் பிரபாகரனை ஒரு மனநோய்பிடித்தவர் என்றும் ஜனாதிபதியே கூறும்போது, இத்தகைய ஒரு நிலைமையை அரசு எதிர்பார்த்திருக்க வேண்டும்! எனவே அரசுக்கு இது தொடர்பாக மேலும் அதிகளவிலான பொறுப்பு இருக்கிறது.

இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுபற்றி வாய்ச்சவடாலடித்துவரும் அரசாங்க தரப்பினர், எல்லைப்புற திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தொடர்பாக அதே பழைய ஐ.தே.க. அரசுகளின் நடைமுறையையே கடைப்பிடிப்பார்களானால், புலிகளின் எல்லைப்புற கிராமங்கள் மீதான தாக்குதல்களை வெறும் இனக்கலவரங்களை தூண்டும் முயற்சிகளாக மட்டுமே பார்த்து, அதே கிளிப்பிள்ளைக் கண்டனங்களை வெளியிடுவதில் திருப்தி கண்டுகொள்வார்களானால், இவர்களாலும் கூட இந்த நாட்டின் எரிகின்ற இன்றைய பிரச்சினையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிட முடியாது.

புலிகளின் இத்தகைய தாக்குதல்கள் கலவரத்தை தூண்டும் நோக்கிலான நடவடிக்கை அல்லது அவர்களது இராணுவ பலவீனம் காரணமான நடவடிக்கை என்று கருதுவது அரசாங்கம் தன்னைத்தானே ஏமாற்றுவதுடன் சிங்கள மக்களது காதுக்குள் பூச்செருகும் வேலையாகும்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கடந்த கால அரசியல் தவறுகளை உணர்ந்து, சரியான வழிமுறையை கையாளும் அரசியல் நுண்திறனை அடைந்துவிட்டார்கள் என்ற எண்ணத்தை கடந்த சமாதான பேச்சுவார்த்தை கால கட்டத்தின் போது பலரும் வெளிப்படுத்தியிருந்தனர். வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்த வருட ஆரம்பத்தில் அமெரிக்கா சென்றிருந்த போது பல சந்தர்ப்பங்களில் இத்தகைய கருத்தை வெளியிட்டிருந்தார். பத்திரிகையாளர்கள் அஜித் சமரநாயக்கா, விக்டர் ஐவன், அரசியல் ஆய்வாளர் உயங்கொட, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தலைவர் சார்ள்ஸ் அபேசேகரா போன்ற பலரும் இத்தகைய கணிப்பீட்டையே வெளியிட்டிருந்தனர். ஆனால் இப்போது நடந்துள்ள சிங்கள மக்கள் மீதான கொலை போன்ற நடவடிக்கைகள் அந்த முதிர்ச்சியை அவர்கள் இன்னமும் அடையவில்லை என்பதைக் காட்டுவதாகவே உள்ளன.



புலிகள் தம்மை இன்னமும் ஒரு வெறும் கெரிலா குழுவாகவும், பிரபாகரன் தன்னை இன்னும் ஒரு வெறும் கெரிலா குழு தலைவராகவும் மட்டுமே கருதிக் கொண்டிருந்தால் நிலைமை வேறு.

ஆனால், புலிகள் தம்மை தமிழ் மக்களின் தலைமையாகவும், பிரபாகரனை தேசிய தலைவராகவும் கூறிக்கொள்ளுகின்ற அதே நேரத்தில் இவ்வாறு நடந்து கொள்வது, அவர்கள் சொல்லும் அந்த உயர்ந்த பொறுப்புகளை எவ்வகையிலும் அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது.

எல்லைப்புற, குடியேற்றவாத பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகள். அவை இராணுவ நடவடிக்கைகளுக்குரிய பிரச்சினைகளல்ல. பொலிஸ் நிலைய தாக்குதலோ, இராணுவ முகாம் மீதான தாக்குதலோ போன்ற வழிமுறையில் அணுகக்கூடிய பிரச்சினைகளுமல்ல.

எப்படி புலிகளை யுத்த முனையில் அணுக அரசு முயல்வது தவறானதோ அதே போன்ற தவறுதான் இதுவும்.

புலிகளின் இவ்வாறான நடவடிக்கைகளால் தமிழ் மீனவர்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்கைப் புலிகள் ஏற்படுத்த முடியுமாயினும், நீண்ட கால நோக்கில், தமிழ் மக்களின் விடுத்லைக்கு விரோதமான விளைவுகளையே இது ஏற்படுத்தும்.

இது, புலிகளுக்கும் பிரபாகரனுக்கும் அவசியம் தெரியவேண்டிய ஒரு உண்மை.

அதுவும் பிரபாகரனை பகவத் சிங்குக்கு ஒப்பிட்டு தொண்டமான் அவர்கள் பேசியுள்ள இந்த வேளையில் இது மிகவும் முக்கியமானது.

பகவத்சிங் இந்திய சுதந்திரப் போராட்டத்தை காந்தியவாதிகள் காட்டிக் கொடுத்த போது ஏற்பட்ட விரக்தியுடன் ஆயுத மேந்திய போராட்டத்தில் இறங்கிய பல்லாயிரம் இளைஞர்களில் ஒருவர். புலிகளின் ஆரம்ப கால கோட்பாடுகளை போலவே அவரது கோட்பாடுகளும் இருந்தன. "குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் மிகவும் வெறுப்புக்குள்ளான அரசு அதிகாரிகளுக்கு கொடுக்கும் மரண அடிமூலம் தடைகள் தகர்க்கப்படும்; மக்கள் கிளர்ந்து எழுவார்கள். நாம் அவர்களது முன்னணிப் படையினராக திகழ்ந்து அவ்வியக்கத்தை சோஷலிசப் பாதையில் திருப்பி விட வேண்டும்" என்று கருதினார் அவர். பிரபாகரன் சோஷலிசத்தை எப்படிப் பார்க்கின்றாரோ என்னவோ, புலிகளது ஆரம்பகால எழுத்துக்களும் சோஷலிசம் பற்றி கூறின என்பது மட்டும் உண்மை.

சட்டமன்றத்துள் குண்டுவைத்தபின் கைதான பகவத்சிங் பின்னர் வெள்ளை அரசால் தூக்கிலிடப்பட்டார். அவரைக் காப்பதற்காக காந்தி எந்த முயற்சியும் செய்யாதது மட்டுமல்ல, அவரை காப்பாற்ற முடியாது என்று கூறி காட்டிக் கொடுக்கவும் செய்தார்

எவ்வாறெனினும், இந்த 'பகவத்சிங்' ஒப்புமையில் ஒருவித நியாயம் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் பாவம் தொண்டமான் இது அவருக்குப் பெரிய ஒரு சிக்கலாகப் போய்விட்டது.

பிரபாகரனை இவ்வாறு குறிப்பிட்டதற்காக ஐ.தே.க. அவர் மீது நடவடிக்கை எடுக்க இருப்பதாகக் கேள்வி. (அவர் ஒரு ஐ.தே.க. தேசியப்பட்டியல் உறுப்பினர்)

ஆனால் தொண்டமான் இந்த விடயத்தில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் உறுதியாக இருக்கிறார்!

'சமாதானம் பேசிய படியே பிரபாகரனை கொலைகாரன் என்று சொல்லலாமா' என்று ஜனாதிபதியையும் மறைமுகமாக கண்டிக்கின்றார்.

டி.பி.விஜேதுங்கவுடன் முரண்பட்ட தொண்டமானின் அதே குரல் இப்போது கேட்கிறது.

இதை எந்த பேரத்திற்கு அவர் பயன்படுத்தப் போகிறார் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயம்.


- ஆனால் பிரபாகரன்

வரலாற்று நாயகர்களுடன் ஒப்பிடப்படுகிற ஒவ்வொரு கணமும் அவர் தனது பொறுப்புணர்வையும், முதிர்ச்சி மிக்க அரசியல் நடைமுறை பற்றியும் சிந்தித்துப்பார்ப்பாரா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# டொனமூர் கொமிஷன் முன்னால் பெண்கள்:

## மணமான பெண்களுக்கு வாக்குரிமை கோரிய பெண்கள் வாக்குரிமைச் சங்கம்

சென்ற இதழ் தொடர்ச்சி.

**டொக்டர் திருமதி மேரி ரத்தினம்:**
வாக்குரிமை விடயம் 1904 இலிருந்தே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அச்சமயத்தில் இலங்கையில் சுதேச தொழிலாளர்களுக்கு ஒரு யூனியன் (சங்கம்) இருந்தது. அப்போது இருந்த ஆங்கிலேய பிரெஞ்சு அங்கத்தவர்கள் கிறிஸ்தவ மத பெண்கள் சங்கத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அப்போதே பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென்பது விவாதத்திற்கு வந்தது. இப்போது 23 பெண்கள் சங்கங்கள் இருக்கின்றன. 1924 இல் பல பெண்கள் சங்கங்கள் இருந்தன. பின்னர் இச்சங்கங்களில் பல ஒன்றாக இணைக்கப்பட்டன.

**டொக்டர் நல்லம்மா சத்தியவாகீஸ்வரமய்யர்:**
இந்த இலங்கை பூராவும் உள்ள ஆஸ்பத்திரிகளில் பெண்களுக்கு மருத்துவம் செய்யப்படும் ஆஸ்பத்திரிகளின் நிலை மோசமாக உள்ளது. இலங்கையில் பிரசவ ஆஸ்பத்திரிகளை பார்த்தால் ஒன்று மட்டுமே கொழும்பில் உள்ளது. யாழ்ப்பாணத்தில் மிஷனைச் சேர்ந்த பிரசவ ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. மற்ற இடங்களில் எல்லாம் பொது ஆஸ்பத்திரிகள்தான் இருக்கின்றன. அவை சிலவற்றில் பிரசவம் பார்க்க முடியாது. இலங்கையின் பொது வசதி முறை தாறுமாறாக உள்ளது. இலங்கையில் பெண்களின் பழக்கவழக்கங்களும் மோசமான நிலையில் இருக்கிறது. அவர்கள் பொதுவாக பொது வைத்திய சாலைகளுக்கு போவது கூடக்கிடையாது.

**திருமதி இரத்தினம்:**
டொக்டர் நல்லம்மா சொன்னவற்றுடன் நானும் மேலதிகமாக சிலவற்றைக் கூறலாமா?

**டொனமூர்:**
சரி.

**திருமதி இரத்தினம்:**
இந்த ஆஸ்பத்திரியில் சராசரி 138 நோயாளிகள் வருகின்றனர். ஆனால் 82 படுக்கைகள் மட்டுமே இருக்கின்றன. சென்ற மாதம் 324 பிரசவ கேஸ்கள் நடந்தன. ஆனால் 82 படுக்கைகள் மட்டுமே இருந்தன. அதாவது, பெண்கள் பிரசவமாகி சராசரி ஐந்து அல்லது ஆறு நாட்களில் வெளியே அனுப்பப்பட்டுள்ளனர். 63 பேர் மூன்று நாட்களுள் வெளியே அனுப்பப்பட்டுள்ளனர். 75 பேர் நான்கு நாட்களுள் வெளியே அனுப்பப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் ஏழைகள். ஐந்து வருடங்களுக்கு முன் வைத்திய இலாகா அதிகாரிகள் ஒரு நிலத்தை வாங்கினார்கள். ஆனால் ஒரு பயனும் ஏற்படவில்லை. வைத்திய அதிகாரிகள் பொது வேலைத் திணைக்களத்தின் மீது பழியைப் போடுகிறார்கள் (சிரிப்பு). எங்களுக்கு வாக்குரிமை இருக்குமானால் இவ்வளவையும் நாங்களே பார்த்துக் கொள்ளுவோம் (மறுபடியும் சிரிப்பு).

**சேர் ஜாபரி பட்லர்:**
நீங்கள் இது தொடர்பாக சட்டசபை அங்கத்தவர்களோடு தொடர்பு கொண்டீர்களா? இந்தக் கொடிய விடயங்கள் சட்டசபையில் பெண்களாலேயே கொண்டுவரப்பட வேண்டுமென நான் நினைக்கிறேன்.

**டொக்டர் இரத்தினம்:**
அதனால்தான் நாங்கள் எங்களுக்கு வாக்குரிமை கொடுக்கும்படி கேட்கிறோம்.

**சேர் ஜாபரி பட்லர்:**
நீங்கள் இப்போது தான் இந்த அரசியல் வழியைத் தேடுகிறீர்கள். இது சட்டசபை அங்கத்தவர்களது தவறேயன்றி வேறில்லை. நாங்கள் வைத்திய இலாகாவின் மேல் தவறு என்று நினைத்திருந்தோம்.

**டொக்டர் ஷீல்ஸ்:**
சட்டசபை அங்கத்தினர்கள் பத்திரிகைகளை மட்டுமே வாசித்து வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறோம் (சிரிப்பு)

**டொனமூர்:**
பாராளுமன்ற அங்கத்தினர்கள் பத்திரிகைகளை வாசிப்பது போல சட்டசபை அங்கத்தினர்களும் வாசிக்கிறார்கள் (சிரிப்பு).

**சேர் மத்தேயூ காதன்:**
இந்தக் கூட்டத்தின் முக்கிய நோக்கம் இப்படிப்பல விடயங்களில் பெண்கள் ஊக்கம் எடுத்துக் கொள்வதையும் அவர்களின் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வழிகளைத் தேடுவதையும் கொண்டதாக இருக்கிறது என நான் அறிந்து கொண்டேன். அவர்களின் பிரச்சினைகளை எவரும் கண்டு கொள்ளவில்லை என்பதைத் தெரிந்து கொண்டதுடன் தமது குறைகளை சட்ட சபையில் பேசத் துணிந்துள்ளனர். சட்டசபையைச் சேர்ந்த ஆண்கள் தமது கோரிக்கைகளுடன் பெண்களுக்கான குறைகளையும் கோரியிருக்கலாம். ஆனால், பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டால் அனைத்தும் தீரும்.

**கூட்டம்:**
ஆமாம்.

**சேர் மத்தேயூ காதன்:**
நீங்கள் சட்டசபையில் தான் அங்கத்தவராக விரும்புகிறீர்கள் என நான் நினைக்கவில்லை.



டொக்டர் மேரி ரத்தினம்

> *"முதலில் நாங்கள் முனிசிபல் கவுன்சில், லோக்கல் போர்ட் இவைகளில் நுழைந்து கொள்ள விரும்புகிறோம். ஆரம்பத்தில் இது போதுமானது."*
>
> *–டொக்டர் மேரி ரத்தினம்*

**டொக்டர் இரத்தினம்:**
நாங்கள் முனிசிபல் கவுன்சில், லோக்கல் போர்ட் இவைகளில் நுழைந்து கொள்ள விரும்புகிறோம். ஆரம்பத்தில் இது போதுமானது.

**டொக்டர் ஷீல்ஸ்:**
நல்ல நிலைமையான வாழ்வைப் பெற விரும்புகிறீர்களா?

**செல்வி ஹேறன்ஸ்டர்:**
ஆமாம்.

**டொக்டர் ஷீல்ஸ்:**
அரசாங்க பள்ளிக்கூடங்களில் சமையல் வேலை சொல்லிக் கொடுக்கப்படுகிறதா?

**திருமதி டீ சில்வா:**
கிழக்கு தேசச் சமையல் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை. அத்துடன் சோறு கறி சமைக்கும் விதமும் சொல்லிக் கொடுக்கப்படவில்லை.

**டொக்டர் இரத்தினம்:**
அதுவும் கொழும்பில் மட்டும் தான் சொல்லிக் கொடுக்கப் படுகிறது.

**டொனமூர்:**
இச்சங்கம் கடந்த டிசம்பரில் ஆரம்பித்து இவ்வளவு வளர்ச்சி அடைந்திருப்பதைப்பற்றி நான் பாராட்டுகிறேன். இத்தனை அங்கத்தினர் இருப்பார்களென்று எவரும் எதிர்பார்க்கமாட்டார்கள்.

**திருமதி இரத்தினம்:**
சுமார் 200 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

**டொனமூர்:**
அங்கத்துவ விதியைப்பற்றி கொஞ்சம் கூறுகிறீர்களா? உங்கள் சங்கத்தில் எல்லா ஜாதியினரும் அங்கத்தினர் ஆகலாமா?

**டொக்டர் இரத்தினம்:**
எல்லா ஜாதியினரும் அங்கத்தினர் ஆகலாம்.

**டொனமூர்:**
முஸ்லீம்களும் கூடவா?

**திருமதி இரத்தினம்:**
ஆமாம் அவர்களும் கூடத்தான்.

**டொனமூர்:**
சரி, யாராவது முஸ்லீம் அங்கத்தினர்கள் இருக்கிறார்களா?

**திருமதி ஜியோடி சில்வா:**
வாக்குரிமை விடயத்தில் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டால் தாங்களும் இச்சங்கத்தில் சேருவதாக பல முஸ்லீம் பெண்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

**திருமதி குணசேகர:**
இங்கே இரண்டு மலேயா பெண்கள் அங்கத்தவர்களாகி இருக்கிறார்கள்,

**டொனமூர்:**
நீங்கள் என்னுடைய ஆர்வத்தை அதிகரிக்கிறீர்கள். சரி, இப்போது உங்களுக்கு வாக்குரிமை வழங்கிவிட்டால் நாட்டில் எந்தவொரு அதிருப்தியும் ஏற்படாதா?

**கூட்டம்:**
கிடையாது. இராது.

**டொனமூர்:**
நீங்கள் நாடு முழுவதற்கும் உரிமை கேட்பது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. நீங்கள் 1921இல் மிஸ்டர் தம்பிமுத்துவின் ஒத்துழைப்பை நன்றி கூறியதற்காக சந்தோசப்படுகிறேன். அவரைத்தவிர வேறு எவராவது உங்களை ஆதரித்திருக்கிறார்களா?

**திருமதி டீ சில்வா:**
இலங்கை காங்கிரஸ் ஆதரித்திருக்கிறது

**டொனமூர்:**
ஆனால் அது உத்தியோக பூர்வமாக அல்ல. இவ்விடயம் தேர்தல் காலங்களில் வெளியாக்கப்படவில்லையா?

**திருமதி டீ சில்வா:**
நான் அவ்வாறு நினைக்கவில்லை. எங்களுடைய நிலைமையை உங்களிடமே பொறுப்பளிக்கிறோம்.

**டொனமூர்:**
எங்களுடைய தீர்மானம் எதுவாயினும் நீங்கள் ஆமோதித்தே தீர வேண்டும் (சிரிப்பு).

**திருமதி டீ சில்வா:**
பெண்கள் ஆண்களுக்காக எவ்வளவு உழைக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

**டொனமூர்:**
நீங்கள் இது விடயத்தில் எங்களுடைய தீர்மானத்தை ஆமோதிப்பதோடு இல்லாமல் மற்றவர்களையும் அவ்வாறு செய்யச்செய்தல் வேண்டும்.

பெண்களே! நாங்கள் உங்களைப் பாராட்டுகிறோம் இதுதான் எங்களது கடைசி விசாரண்ணயாதலால் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய உங்களுக்கு எமது நன்றிகள். நாம் எமது விசாரணையை மிகுந்த சந்தோசத்துடன் செய்தோம். இன்று காலையுடன் எமது விசாரணைகள் முடிந்தன. சென்று வாருங்கள்.

மேற்படி சாட்சியத்தில் (12 பேர்கள் அடங்கிய பெண்கள் குழு) பெண்கள் வாக்குரிமைச் சங்கமானது சில பிற்போக்கான கோரிக்கைகளை முன்வைக்கின்றபோதும் அவை; குறிப்பிட்ட அந்த காலப்பகுதியில் அவ்வமைப்பின் கொள்ளளவு வெளிப்பாட்டு நிலை காரணமாகவே எனப்புரிந்து கொள்ள வேண்டுமேயன்றி இலகுவாக அவர்கள் மீது குற்றம் சுமத்திவிட முடியாது.

குமாரி ஜெயவர்த்தன தான் எழுதிய பல புத்தகங்களில் 'பெண்கள் வாக்குரிமைச் சங்கமானது சகல பெண்களுக்குமான வாக்குரிமையை கோரியிருந்தன' எனக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் மேற்படி சங்கம் டொனமூர் ஆணைக்குழு முன்னிலையில் அளித்த சாட்சியத்தின் மூலப்பிரதியை எடுத்து நோக்கினால் அக்கருத்து வலுவிழந்ததாக காணப்படுவதைக் காணலாம். **'பெண்கள் வாக்குரிமைச் சங்கம்', மணமான பெண்களுக்கான வாக்குரிமையை வலியுறுத்த முயற்சித்திருக்கிறது. ஆயினும் இவ்வலியுறுத்தலுக்கு பின்னால் 'மணமான பெண்களுக்கு மட்டுமே வாக்குரிமை தேவை' என்ற நோக்கம் இருந்திருக்காது என்றே தோன்றுகிறது.**

பெண்கள் வாக்குரிமைக்கு எதிரான ஆணாதிக்க சூழல் வலுப்பெற்றிருந்த அந்த நேரத்தில் ***மணமான பெண்களுக்காவது வாக்குரிமையைப் பெற முயற்சிப்போம்*** என்று கூட எண்ணியிருக்கலாம்.

வரும்

**என்.சரவணன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அனுருத்தவின் கனவு: யாழ்ப்பாணப் படையெடுப்பு!





புலிகள் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை நிராகரித்து சரியாக ஒரு மாதத்தின் பின், கடந்த 19ம் திகதி இலங்கை அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வடக்கின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட அனைத்து உயர் அதிகாரிகளையும் ஒரு மாநாட்டிற்கு அழைத்திருந்தார். அரசின் இராணுவ மூலோபாயத்தினையும் தந்திரோபாயத்தினையும் பற்றி ஆராய்ந்து முடிவெடுப்பதற்காகவே மாநாடு கூட்டப்படுகின்றது என்பது தெரிந்திருந்ததால் அழைக்கப்பட்ட அதிகாரிகள் புலிகளை நசுக்க தாம் தயாரித்த அடிப்படைத்திட்டத்துடன் சென்றிருந்தனர். இதில் முக்கியமானவர் இவ்வருட ஆரம்பத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட இராணுவத் திட்டமிடல் பிரிவின் இயக்குநர் தேவிந்த கஞபான (Director of Planning). முன்னர் வவுனியா பொறுப்பதிகாரியாக இருந்தவர். இலங்கை இராணுவத்தில் ஒரு திறமைசாலியாகப் பரவலாகக் கருதப்படுபவர். ஜேர்மனியின் புகழ்பெற்ற படைக்கல்லூரியில் (War College) முதன்மைச் சித்தியடைந்த முதலாவது ஆசியர். இங்கிலாந்தின் சிறப்புமிக்க சாண்ட் ஹேர்ஸ்ற் படைக்கல்லூரியிலும் உயர்சித்தி அடைந்தவர்.

இத்துடன் இராணுவத்தளபதி ஜெரி, அனைத்து நடவடிக்கைத் தளபதி (Overall Operations Commander) A.M.U. செனிவிரத்ன, மற்றும் வடக்கின் படைச்செயலணி 2இன் (Task Force 2) தளபதி கெமுனுகுலதுங்கா, மற்றும் ஆளணி இயக்குனர் பட்றிக் பெர்னாந்து ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். பிரதி அமைச்சரிடம் சமர்ப்பிப்பதற்காக இந்த அதிகாரிகள் கொண்டு சென்ற திட்டம் கிழக்கு மாகாணத்தை முதலில் இராணுவ ரீதியாக ஸ்திரப்படுத்தி பின்னர் வடக்கில் மெதுமெதுவாக முன்னேறுவது என்ற வகையில் அமைந்திருந்தது எனத் தெரிகிறது. கிழக்கின் காடுகளில் விசேட படைகளைக் கொண்டு புலிகளின் முகாம்கள், உணவுக் களஞ்சியங்கள், போக்குவரத்துத் தரிப்பு முகாம்கள் (Transit Camps) என்பனவற்றை தேடி அழிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்து செயல்படுத்த வேண்டும் என்பது இராணுவத்தின் எண்ணம். புலிகளின் கையில் கிழக்குப் போகாமல் தடுக்க உறுதியான நிரந்தர வழிவகை செய்தால் பிரபாகரனால் என்றும் தமிழ் ஈழம் அமைக்கும் வேலையை வெற்றிகரமாக செய்ய முடியாது. வடக்கினுள்ளேயே முடங்கி காலப்போக்கில் இராணுவ ரீதியான தேக்க நிலைக்குத் தள்ளப்பட வேண்டிவரும். அப்படியான ஒரு நிலை தோன்றும் போது இராணுவம் படிப்படியாகக் குடாநாட்டைக் கைப்பற்றலாம் என்பது தளபதிகள் பெரும்பாலானோரின் கருத்து. அத்துடன் அவர்களுடையது குறைந்த பட்சம் 3 - 4 ஆண்டுகளுக்கான திட்டம்.

தமது மூலோபாயத்தை விளக்கி விவாதிக்கச் சென்ற தளபதிகளுக்கு பிரதி அமைச்சர் கூறியதைக்கேட்டு அதிர்ச்சி.

யாழ்குடாநாட்டின் ஒரு பகுதியை குறிப்பிட்ட சில மாதங்களுக்குள் (திட்டவட்டமாக எத்தனை என தெரியவில்லை. ஓரிரு விடயமறிந்த வட்டாரங்கள் 2 மாதங்கள் என்கின்றன) கைப்பற்ற உடனடியாக நடவடிக்கைகளில் இறங்க முடியுமா? இது கேணல் ரத்வத்தையின் கேள்வி. பிரதியமைச்சர் குடாநாட்டை விரைவில் புலிகளிடமிருந்து கைப்பற்றி விடுவது என்ற திட்டவட்டமான முடிவுடனேயே இக்கேள்வியைத் தொடுக்கிறார் என்பது அங்கிருந்த தளபதிகளுக்குப் புரியவில்லை. யாழ் குடாநாட்டை பகுதியாகவோ, முழுமையாகவோ கைப்பற்ற பிரதியமைச்சர் தனக்குத் தெரிந்த ஒரு சில முன்னாள், இந்நாள் இராணுவ அதிகாரிகளின் உதவியுடன் ஒரு மேலோட்டமான திட்டத்தைத் தயார் பண்ணிக் 'கையில்' வைத்துக் கொண்டுதான் தம்முடன் பேசுகிறார் என்பது பல அதிகாரிகளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

யாழ்ப்பாணம் பிடிக்கும் இந்த விடயத்தை மனதிற் கொண்டே பிரதி அமைச்சர் அரசிடம் ஈழப்போரைச் சமாளிக்க ஒரு இரகசியத் திட்டம் உண்டெனக் கூறியிருந்தார். கேணல் ரத்வத்தையின் கேள்விக்கு பதில் அளிக்க வேண்டிய பொறுப்பு ஏ.எம்.யு.செனிவிரத்னவுக்கு. ஏனெனில் அவரே அனைத்து நடவடிக்கைத் தளபதி.

பிரதி அமைச்சர் வரையறை செய்த காலக்கெடுவிற்குள் இராணுவத்தால் யாழ்ப்பாணம் மீது ஒரு பாரிய நடவடிக்கை சாத்தியமில்லை எனப்பதிலிறுத்தார் ஏ.எம்.யு.செனிவிரத்ன. அதற்குரிய காரணங்களையும் அவர் பிரதியமைச்சருக்கு எடுத்து விளக்கினார். இராணுவத்தில் பல முக்கியஸ்தர்கள் - குறிப்பாக போர் முனை அனுபவம் உள்ளோர் - குடாநாட்டைப் பிடிப்பதில் பின்வரும் சிக்கல்கள் உண்டு எனக்கருதுகின்றனர்.

1. குடாநாட்டின் பெரும்பகுதி குடியிருப்புகளும் அதன் காரணமாக கட்டிடங்களும் நிறைந்து காணப்படுகின்றது. இவ்வாறான பகுதிகளினூடாக நகர்வதற்கு விசேட பயிற்சி பெற்ற படைகளும், கூடிய அளவு கனரகக் கவச வாகனங்களும் வேண்டும். கட்டிடத்திற்குக் கட்டிடம் சண்டை நடைபெற வேண்டுமாதலால் கனரக வாகனங்களின் அழிவும் அதிகளவு இருப்பதே காரணம். இரண்டாம் ஈழப்போர் நடைபெற்ற காலத்தில் கிழக்கில் அதிக கவனம் செலுத்தி வந்த இராணுவம், தன் விசேட படையணிகளை காட்டுச்சண்டையில் (Jungle Warfare) ஈடுபடுத்துவதற்கான சிறப்புப் பயிற்சியினை மட்டுமே வழங்கியிருந்தது. விசேட படையணிப பயிற்சித தளங்களிலும் காட்டுச் சண்டைப்பயிற்சி வழங்குவதே பிரதான இலக்காக இருந்து வந்துள்ளது. எனவே குடாநாடு போன்ற ஒரு கட்டிடம் செறிந்த பகுதிகளில் சண்டையிடுவதற்கான பயிற்சி பெற்ற விசேட துருப்புகள் இலங்கை இராணுவத்திடம் தற்சமயம் இல்லை என்றே கூறலாம். இந்தப் படையணிகள் முன் சென்றால் தான் சாதாரண படைகள் பின் சென்று கைப்பற்றப்பட்ட இடங்களை பலப்படுத்திப் பேண முடியும். உதாரணமாக அண்மையில் ரஷ்யாவில் பிரிவினைப் போரில் மூழ்கியுள்ள செச்னியாவின் தலைநகரான கொரொஸ்னியில் வீதிக்கு வீதி பிரிவினைவாத வீரர்களுடன் மோத விசேட ரஷ்ய துருப்புகளே பயன்படுத்தப்பட்டன. கட்டிடப்பகுதிச் சண்டைகளில் அழிவு கூடுதலாக இருப்பது வழக்கம். எனவே சாதாரணப்படைகளை முன்னுக்கு அனுப்புவது படுகொலைக் களத்தினுள் ஆட்டுமந்தையை அனுப்புவது போலாகும் என்பது பல விஷயமறிந்த இராணுவத்தளபதிகளின் கருத்து. கேணல் ரத்வத்த அளித்த காலக்கெடுவினுள் ஒரு பாரிய குடாநாட்டுப் படையெடுப்பிற்குப் போதிய விசேட படைகளைப் பயிற்றுவிக்க முடியாது.

இரண்டாவதாக, குடாநாட்டு போர் சழூநிலையில் புலிகளின் விமான எதிர்ப்புச் சுடுதிறன் காரணமாக ஏற்பட்டுள்ள மாற்றத்தின் விளைவுகள். கட்டிடம் செறிந்த பகுதிக்குள் (Built up area) மோதி முன்னேறுகையில் ஏற்படும் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்று காயம்பட்டோரை அகற்றல் (Casualty evacuation) அல்லது சுருக்கமாக CASEVAC ஆகும். இது துரிதமாக நடைபெறுவது படைவீரரின் மனோநிலை வீழ்ச்சி காணாமல் இருப்பதற்கு முக்கியம்.

இதற்கு உலங்குவானூர்திகள் அவசியம். கட்டிடம் செறிந்த ஒரு போர்முனையில் வாகனங்கள் மூலமாக காயம்பட்டோரை அகற்றல் சாத்தியமன்று. அத்தோடு ஒரு படையணியில் காயம்படடுக் கொண்டிருப்பவர்களுக்கு அதே படையணியைச் சேர்ந்த வீரர்களே தொடர்ந்து உதவவேண்டுமாயின் முன்னணியில் நின்று சண்டையிடும் வீரர் தொகை துரிதமாகக் குறைந்துவிடும். எனவே உலங்குவானூர்திகளின் இடையறாத சேவை கட்டிடப்பகுதிச் சண்டைகளில் இன்றியமையாத ஒன்று.

இலங்கை அரசிடம் பெருந்தொகையான உலங்கு வானூர்திகள் கிடையாது. கட்டிடப் பகுதிச் சண்டை நாம் ஏலவே குறிப்பிட்டது போல இருதரப்பினரும் மிகக்குறுகிய இடைவெளியில் நின்று மோதுகின்ற சண்டை. இந்தச் சூழலில் உலங்குவானூர்திகள் புலிகளின் விமான எதிர்ப்புத் தாக்குதல்களில் நாசமாகிட நிரம்ப வாய்ப்புண்டு. இதற்காகக் காயம் பட்டோரை அகற்றாமலும் இருக்க முடியாது. அகற்றாவிட்டால் சண்டைக்கு முன் செல்ல ஏனைய வீரர் மறுப்பர்.

மூன்றாவதாக, பிடித்த பிரதேசங்களை தக்க வைத்துக் கொள்வதற்குத் தேவையான படையணிகளின் பற்றாக்குறை. குடாநாட்டினுள் படையெடுப்பதற்கும் அங்கு தொடர்ந்து நிற்பதற்கும் பெரிய அளவில் படையணிகளை தற்போது உள்ள வடபகுதி முகாம்களிலிருந்தும், கிழக்கிலிருந்தும் எடுக்க வேண்டும். எடுத்தால் பல இராணுவ நிலைகளும் அரண்களும் பலவீனப்படும். இனி படையெடுப்பின் போது புலிகளின் பலம் கணிசமான அளவு நசுங்கவில்லை எனில் அவர்கள் மேற்படி பலவீனப்பட்ட நிலைகளையும், அரண்களையும் சுலபமாகவும் தொடர்ச்சியாகவும் அழிப்பதில் ஈடுபடுவர். இது இறுதியில் குடாநாட்டுப் படையெடுப்பின் நோக்கத்தையே நாசமாக்கிவிடும். இத்துடன் நாம் முன்னொரு கட்டுரையில் (கடற்புலிகள் பற்றி) குறிப்பிட்டது போல குடாநாட்டினுள் சண்டை பிடித்து முன்னேறும் அணிகளுக்கும் அவை புறப்பட்ட பிரதான இராணுவத்தளத்திற்கும் இடையில் ஒரு பிரதான வழங்கற்பாதை (MSR - Main Supply Route) இடையூறில்லாமல் பேணப்படல் அவசியம். இப்பாதை பாதுகாப்பாகப் பேணப்பட்டாலே முன்னணி வீரர்களுக்குத் தேவையான உணவு. (ஒருவருக்கு நாளொன்றிற்கு 2 கிலோவீதம்) துப்பாக்கி ரவைகள், எரிபொருள், தேவையாயின் குடிநீர், இன்னோரன்ன விடயங்களைத் தொடர்ந்து அனுப்பலாம்.



சுருக்கமாகச் சொன்னால் எதிரியின் பிரதேசத்தினுள் மோதி முன்னேறும் படையணிகளின் தொப்பூழ் கொடிதான் இந்த எம்.எஸ்.ஆர். குடாநாடு கட்டிடங்கள் மட்டுமல்லாது. வெளியாருக்கு மிகக்குழப்பமான, நுணுக்கமான சிற்றொழுங்கை அமைப்பை கொண்டது. இப்படியான ஒரு பகுதியினூடாக ஒரு எம்.எஸ்.ஆர்ஐ பேணுவது கடினம். எம்.எஸ்.ஆர் ஐ இடையிற் புகுந்து புலிகள் துண்டித்தால் முன்னணிப்படைகள் சரணாகதியடைய வேண்டியதுதான்.

நான்காவதாக, பெரிய படைநகர்வொன்றிற்கு ஏகப்பட்ட இராணுவத் தளபாடங்கள்; உணவு வகைகள், மருத்துவ வசதிகள் என பல விடயங்கள் தேவை. இவற்றை தென்னிலங்கையில் இருந்து தற்போது பெரும்பாலும் கடல் வழியாகவே கொண்டு செல்லலாம். ஆனால் புதிய கொள்வனவுகள் வந்து சேரும் வரை கடற்படை இதை முழுமூச்சாகவும் முழுப்பாதுகாப்புடனும் செய்தல் கடினம். ஏனென்பது யாவரும் அறிந்ததே.

இந்தப் பின்னணியில்தான் தளபதி ஏ.எம்.யு. செனிவிரத்ன பிரதி அமைச்சரின் குடாநாட்டுப் படையெடுப்பு யோசனை நடைமுறைப்படுத்தக் கூடியதல்ல என தகுந்த காரணங்களுடன் விளக்கினார். இது ரத்வத்தைக்குப் பிடிக்கவில்லை. வடக்கிலுள்ள செயலணி 2 இன் தளபதி கெமனு குலதுங்காவிடம் குடாநாட்டுப் படையெடுப்பு குறிப்பிட்ட காலத்தினுள் சாத்தியமா எனக்கேட்கப்பட்டது. அவரும் ஏ.எம்.யு. சொன்ன கருத்துக்களை உறுதிப்படுத்தும் வகையில் பதிலிறுத்தார். பிரதி அமைச்சர் ஒன்றும் கூறவில்லை. ஆளுக்கு நல்ல ஆத்திரம் ஏற்பட்டுவிட்டதென்று அவரது முகம் போன போக்கைக் கண்டு தளபதிகள் புரிந்து கொண்டனர். அத்துடன் மாநாட்டிலிருந்து திடீரென வெளிநடப்புச் செய்தார் கேணல் ரத்வத்த. அடுத்த நாள் (20.05.1995) யாரும் எதிர்பாராத வண்ணம் இலங்கை இராணுவத்தின் போர்முனைக் கட்டளைத்துறையில் திடீர் மாற்றங்கள் அறிவிக்கப்பட்டன. இதன்படி ஏ.எம்.யு.செனிவிரத்ன தொண்டர் படைத்தளபதியாகவும், கெமுனு குலதுங்கா படைத்துறைத் தலைமையகத்திற்கும் மாற்றம் செய்தனர். ஏ.எம்.யு. இன் இடத்திற்கு முன்னாள் வடபிராந்தியத் தளபதி மேஜர் ஜெனரல் றொகான் தலுவத்தை நியமனமானார். போர்முனைப்பொறுப்பிலிருந்து ஏ.எம்.யு. மாற்றப்பட்டதும் றொகான் தலுவத்த அவரது இடத்திற்கு நியமிக்கப்பட்டதும் படைகள் அதிருப்தியுடன் நோக்குகின்றன என்பது கண்கூடு. ஏனெனில் ஏ.எம்.யு. கொப்பேகடுவவைப் போல ஒரு சிறந்த போர்முனைத்தளபதி என்பது பல படையதிகாரிகள் மற்றும் சிங்கள இராணுவ அபிமானிகள் ஆகியோரின் பரவலான கருத்து.

( இத்திடீர் மாற்றம் பற்றிக் கருத்து வெளியிட்ட சிங்களப் பத்திரிகைகளிலும் இவ் அதிருப்தியைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் அவை இச்சம்பவத்தின் பின்னணியை ஏனோ அலசவில்லை)

ஆனால் றொகான் தலுவத்தை சற்று மென்போக்கானவர், இராணுவ விவகாரங்களில் உற்சாகமாகவும் உசாராகவும் முன்னணியில் நின்று செயல்படாத ஒரு நபர் என்ற பார்வை பரவலாக உண்டு. இதற்கு பூநகரி முகாம் வீழ்ச்சி பற்றி நியமிக்கப்பட்ட இராணுவ விசாரணை மன்றின் அறிக்கை பலராலும் சுட்டிக்காட்டப்படுகிறது. பூநகரியின் வீழ்ச்சிக்கு தலுவத்தையின் கவனக்குறைவே காரணம் எனவும், எனவே அவருக்கு இனி பதவி உயர்வு வழங்கக் கூடாதெனவும் அம் மன்று பரிந்துரைத்திருந்தது. அதன் காரணமாக தலுவத்த போர்முனையோடு நேரடித் தொடர்பில்லாத ஒரு வேலையில் போடப்பட்டிருந்தார். மேற்கண்ட மாற்றம் நடைபெற்ற போது ரஷ்யாவில் இராணுவத் தளபாடம் கொள்வனவு செய்யும் வேலையாக நின்றிருந்தார். இவரது இரத்த உறவினர் ஒருவர் எஸ்.எல்.எவ்.பீ. அமைப்பாளர். அத்துடன் இவர் ஒரு சாய்பாபா பக்தர்.

(குடாநாட்டிற்குத் தற்போது பொறுப்பதிகாரியாக இருக்கும் லால் வீரசூரிய Church of God என்ற கிறிஸ்தவ சபையில் ஒரு பகுதிநேரப் போதகர் - Lay preacher)

அத்துடன் பிரதியமைச்சர் தன் தனிப்பட்ட உதவியாளராக இருந்த கப்டன் கீர்த்தி ஹுலன்கமுவ என்பவரை பிரிகேடியராகப் பதவியுயர்வு கொடுத்துள்ளார். இவர் பல வருடங்களுக்கு முன்னர் படையிலிருந்து ஓய்வு பெற்றவர்.

இது போல ஐ.தே.க. இன் கீழ் ஓய்வுபெற்ற அதிகாரிகள் 12 பேர் மேஜர் ஜெனரல்களாக்ப் பதவி உயர்த்தப்பட்டு இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதுவும் படை வட்டாரங்களில் அவ்வளவு திருப்தியைக் கொடுக்கவில்லைப் போல் தெரிகிறது. இராணுவம் நெருக்கடியில் இருக்கும் போது இப்படியாக தமக்கு அரசியல் ரீதியாகச் சாதகமானவர்களை இட்டு நிரப்புவதில் பொ.ஐ.மு. அரசு கவனமெடுப்பது பல அதிகாரிகளுக்கு அவ்வளவு பிடிக்கவில்லை என்பதும் தெரிகிறது.

''நானும் ஒரு இராணுவ அதிகாரியாக (கேணல்) இருந்தவன் . புலிக்கு அடிப்பது எப்படியென்பது எனக்குத் தெரியும்'' என்பது பிரதியமைச்சரின் மனோநிலை போல் தெரிகிறது.

வடக்கில் ஒரு அடி அடித்தால் தன் வீர கௌரவத்தை நிலை நாட்டலாம் என அவர் எண்ணினார் போலும்.

ஆனால், தரவைக் குள தாக்குதலோடு அவரது கனவுகள் தவிடு பொடியாகத் தொடங்கி விட்டன.

**டி.சி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயங்கரவாதமும் போதைப்பொருள் கடத்தலும் சார்க் அங்கத்துவ நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றதென்றும், அதனை ஒழித்துக்கட்ட சார்க் நாடுகள் பூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும்' என்றும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் புதுடில்லியில் நடைபெற்ற எட்டாவது சார்க் மகாநாட்டில் பேசும் போது குறிப்பிட்டார்.

இலங்கை ஜனாதிபதி குறிப்பிட்ட பயங்கரவாதமும், இந்தியா அடிக்கடி குறிப்பிட்டு வரும் பயங்கரவாதமும் வேறு வேறானவையல்ல. 1950களில் கம்யூனிஸ்டுகள் குறித்து அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட கொடூரமான சித்திரத்தைப் போன்றதுதான் தற்போது பயங்கரவாதம் என்ற பதத்தால் உருவாக்கப்படும் சித்திரமும்.

உலகெங்கிலுமுள்ள தேசிய இனங்களது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள், மக்களது அதிகாரத்துக்கான போராட்டங்கள் ஆகியன பயங்கரவாதப் போராட்டங்களாகவே அமெரிக்காவினால் சித்திரிக்கப்பட்டு வருகிறது. அதே வழிமுறையையே இந்திய, இலங்கை ஆளும் வர்க்கங்களும் பின்பற்றுகின்றன என்பதை காஷ்மீரிய, பஞ்சாப் போராட்டங்கள் தெளிவுபடுத்துகின்றன.

அமெரிக்காவினால் பயங்கரவாதிகளாகக் குற்றம் சுமத்தப்பட்டு அமெரிக்காவின் லெக்ஸிங்டன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மூன்று பெண் கைதிகளது பேட்டி அமெரிக்கா குறிப்பிடும் பயங்கரவாதம் எது என்பதை தெளிவாக்குகிறது.

தமிழ் நாட்டிலிருந்து வெளியாகும் அரசியல் சமூக பொருளாதார ஆய்வு ஏடான நிறப்பிரிகையில் வெளியான பேட்டியொன்றிலிருந்து சில பகுதிகளும், கைதிகள் பற்றிய விபரங்களும் நன்றியுடன் மீள்பிரசுரமாகின்றன.

அரசியல் கைதிகளுக்கான பிரத்தியேகமான லெக்ஸிங்டன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள லிண்டா இவான்ஸ், லாரா வைட் ஹார்ன், சூஸன் தோஸன்பர்க் என்ற மூன்று லெஸ்பியன்களின் பேட்டி இது. பேட்டி எடுத்தவர் யாரென்று தெரியவில்லை.

1985 ஆம் ஆண்டிலிருந்து சிறையில் இந்த மூவரும் உள்ளனர். 'அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்த்து, விமர்சித்து, மாற்ற முயன்றதற்காக' இவர்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். மேலும் 1983 - 85 காலகட்டத்தில் நடந்த அமெரிக்க இராணுவ தளபாட நிலையங்கள் மீதான தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்ற தலைமறைவு அமைப்புகளுடன் 'இவர்களுக்குத் தொடர்புண்டு' என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த மூவருடன் ஆலன் பெர்க்மன், மரிலின் பக், டிம் ப்ளங்க் ஆகிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இரண்டரை வருட சிறைவாசத்துக்குப் பின்பு அமெரிக்க அரசாங்கம் இவர்கள் மீது குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்துள்ளது. சூஸன் தோஸன் பர்க், டிம் ப்ளங்க், ஆலன் பெர்க்மன் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெறப்பட்டுவிட்டன. 1985 ஆம் ஆண்டு கிரனடா மீது அமெரிக்க இராணுவம் படையெடுத்ததைக் கண்டிக்கும் வகையில் அமெரிக்கத் தலைமைச் செயலகம் அருகில் வெடிகுண்டு வைத்த குற்றத்தை லாரா, லிண்டா, மரிலின் ஆகியோர் ஒப்புக்கொண்டுவிட்டனர். இதனால், ஏற்கெனவே 70 வருட சிறைத்தண்டனை பெற்ற மரிலினுக்கு இன்னும் பத்துவருடம் கடுங்காவல்; இன்னும் ஐந்து வருடம் கடுங்காவலைச் சேர்த்து லிண்டாவுக்கு 40 வருடம் தண்டனை; லாராவுக்கு 20 வருட கடுங்காவல்! சூஸன், டிம் ப்ளங்க் இருவருக்கும் வெடிகுண்டுகள் போலி அடையாள அட்டைகள், ஆயுதங்கள் வைத்திருந்த குற்றத்திற்காக ஏற்கெனவே 58 வருட தண்டனை. ஆலன் பெர்க்மன் மட்டும் அடுத்த ஜூனில் விடுதலை செய்யப்படுவார் என்று அறிவிக்கப்பட்டது. லிண்டா, லாரா, சூஸன் பற்றிய சில குறிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன. இந்தக் குறிப்பும் மொழி பெயர்ப்பும் நாகர்ஜூனன்.

### குறிப்புகள்

*லிண்டா:* 1947 இல் பிறந்தவர். 1967 முதல் அமெரிக்க ஏகாதிபத்திய - எதிர்ப்பு இயக்கங்களில் ஈடுபாடு கொண்டுள்ளவர். அமெரிக்கா வியட்நாமில் செய்த யுத்தத்தை எதிர்ப்பதில் முன் நின்ற மாணவி. 1969 இல் வியட்நாமுக்குப் போய் போர்க் கைதிகள் பரிமாற்றத்தின் போது பார்வையாளராக இருந்தவர். தெரு நாடக இயக்கம், பெண்களுக்கேயான இசைக்கும் இயக்கம் ஆகியவற்றில் ங்கெடுத்தவர். பெண்கள் உரிமை இயக்கத்திலும் லெஸ்பியன் குழுக்களின் விவாதங்களிலும் பங்கெடுப்பவர். குக்ளக்ஸ் க்ளான் போன்ற வெள்ளை நிறவெறி அமைப்புக்களை எதிர்த்து கறுப்பு இன சிகானோ/ மெக்ஸிகானோ இன அமைப்புக்களை ஒருங்கிணைப்பதில் ஈடுபட்டவர். சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளுக்காகவும் போராடுபவர். 1985 மே 11 அன்று இவர் கைது செய்யப்பட்டார். தேடப்பட்டு வந்த ஒருவரைப் பாதுகாத்துப் புகலிடம் தந்ததற்காகவும் நான்கு துப்பாக்கிகளை போலி அடையாள அட்டை கொண்டு வாங்கியதற்காகவும் தண்டிக்கப்பட்டார்.

*லாரா:* ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சிகரச் செயற்பாடுகளில் கடந்த இருபது வருடங்களாக ஈடுபட்டு வருபவர் கருப்பின மக்களின் உரிமைகளுக்காகவும், ப்யுர்டோ ரிக்கோவின் சுயநிர்ணய உரிமைக்காகவும் பெண்கள் தன்புணர்ச்சியாளர்கள் ஆகியோரின் போராட்டங்களிலும் களத்தில் நின்று வந்தவர். பாஸ்டன் நகரத்தில் கறுப்பின மக்கள் மீது நடத்தப்பட்ட வெள்ளை நிறவெறி அட்டகாசங்களை எதிர்ப்பதில் துணை நின்றவர். அமெரிக்க உள்நாட்டு உளவு - நிறுவனமான FBI - யின் இரகசிய நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியவர். 1975 இல் வியட்நாமுக்குச் சென்ற வந்தவர். 1985 இல் கைது செய்யப்பட்ட இவர், தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

*சூஸன்:* 19‾5 ஆம் வருடம் நியூயார்க்கில் பிறந்த இவர், பள்ளி நாட்களில் Black Panther கட்சியில் ஈடுபாடு காட்டிவந்தார். பின்பு வியட்நாமில் யுத்த எதிர்ப்பு மற்றும் பெண்கள் இயக்கங்களில் ஈடுபாடு காட்டினார். 1976 இல் கியூபாவுக்குப் போய் அங்கே சுகாதார மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கெடுத்துக்கொண்டார். சீன மருத்துவ முறையான அங்குபஞ்சரை முறையாகக் கற்று மாற்று மருத்துவராகப் பணிபுரிந்தார். 1985 இல் கைது செய்யப்பட்டார்.



**கேள்வி:** நானும் களச்செயலில் ஈடுபடும் ஒரு பெண்தான். ஆனால் இதுவரை உங்களில் யாரைப் பற்றியும் கேள்விப்பட்டதே இல்லையே!

**லிண்டா:** ''அமெரிக்காவில் அரசியல் கைதிகள் கிடையாது'' என்று அரசாங்கம் அடிக்கடி கூறிவருகிறது. எங்கள் செயல்பாடுகளுக்கான அரசியல் நோக்கங்களை இந்த அரசாங்கம் அங்கீகரிப்பதில்லை. மேலும் நாங்கள் சார்ந்துள்ள இயக்கங்கள் , அமைப்புக்களுக்கான அரசியல் - சமுதாய அடிப்படைகளையே இந்த அரசாங்கம் மறுத்து வந்துள்ளது என்பதை உங்களைப் போன்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, இந்த சிறையின் கட்டமைப்பைப் பாருங்கள்: இங்கேயுள்ள அரசியல் கைதிகளைச் சந்திக்க அவர்களுடைய உறவினர்களுக்கோ நண்பர்களுக்கோ அனுமதி கிடையாது. அரசியல் - கைதிகளின் அறைகள் அடிக்கடி மாற்றப்படும்; கடிதங்கள் தணிக்கை செய்யப்படும். எல்லாவற்றுக்கும் மேலாக தனிமைச் சிறையிலும் நாங்கள்

**பத்துப் பதினைந்து வருடங்களாக அடைத்து வைக்கப்பட்டுள்ள இவர்களைப் பற்றி யாருமே அக்கறைப்படுவதில்லை என்றால் அதற்கு நிறவெறிதான் காரணம்? வெள்ளை இனத்தவர்களில் முற்போக்காளர்களாக இருப்பவர்கள் கறுப்பின மக்களின், ப்யுர்ட்டோ ரிக்கோ இன மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிப்பதில்லை. இது வருந்தத்தக்க விஷயம்.**

அடைக்கப்படுகிறோம். இந்தச் சூழ்நிலையில் வாழ்கிற எங்களைப் பற்றி நீங்கள் தெரிந்திராதது ஆச்சரியமல்ல. அதே சமயத்தில் நமது இயக்கங்கள் அரசியல் கைதிகள் பற்றிக் கவலைப்பட்டதில்லை என்பதையும் இங்கே கூறியாக வேண்டும். இதற்குக் காரணம் நிறவெறி என்று தான் கூறுவேன். அமெரிக்காவின் பெரும்பான்மையான அரசியல் கைதிகள், போர்க் கைதிகள் எப்போதுமே கறுப்பு இனத்தவராகவோ, ப்யுர்ட்டோ ரிக்கோ இனத்தவராகவோ இருந்து வந்துள்ளனர். **பத்துப் பதினைந்து வருடங்களாக அடைத்து வைக்கப்பட்டுள்ள இவர்களைப் பற்றி யாருமே அக்கறைப்படுவதில்லை என்றால் அதற்கு நிறவெறிதான் காரணம்? வெள்ளை இனத்தவர்களில் முற்போக்காளர்களாக இருப்பவர்கள் கறுப்பின மக்களின், ப்யுர்ட்டோ ரிக்கோ இன மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிப்பதில்லை. இது வருந்தத்தக்க விஷயம்.**

அரசியல் கைதிகளுக்குத் தாங்கள் வழங்கி வந்த ஆதரவைப் பலர் வாபஸ் பெற்றுக் கொண்டு விடுகிற சூழல் இப்போதிருக்கிறது. இதற்குக் காரணம் செயற்பாடுகள் குறித்து நம்மிடையே இருக்கிற வித்தியாசங்கள்தான். இப்படி ஆதரவு வாபஸ் பெறப்படுவதால் தமக்கிடையே பொய்யான முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டு விடுகின்றனர். நாம் அனைவரும் சமுதாய மாற்றத்துக்காகவும் வெகுஜன நீதிக்காகவும் போராடுகிறோம் என்கிற பட்சத்தில், நமக்கிடையிலான வித்தியாசங்கள் தந்திரோபாய ரீதியானவை (Tectical) மட்டுமே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**லாரா:** நாட்டின் சிறைகளில் யார், யார் எதற்காக இருக்கிறார்கள் என்பது பற்றி இடதுசாரி மற்றும் முற்போக்கு இயக்கங்கள் வெகுகாலமாகவே கவலைப்பட்டதில்லை. இப்படிக் கவனிக்கப்படாமல் போயிருப்பவர்களில் அரசியல் கைதிகளும் போர்க்கைதிகளும் அடக்கம்.

உதாரணமாக, எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்ச்சி இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் உங்களில் ஒருவருக்கு எய்ட்ஸ் கைதிகள் பற்றி ஏதாவது தெரியுமா? கிடையாது. Gay Community News பத்திரிகையின் மைக் ரீகில் ஒருவரைத் தவிர எத்தனை பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் சிறைப்பக்கம் வந்து இங்குள்ள கைதிகளின் தன்புணர்ச்சியாளர்கள் படுகிற கொடுமைகளை எழுதியிருக்கிறார்கள்?

இந்த நாடே அடைக்கப்பட்டிருக்கிற கைதிகளை மறக்க முயற்சித்து வருகிறது என்பேன். அரசியல் கைதிகளைப் பற்றிய மறதியோ இன்னும் பன்மடங்காக இருக்கிறது! இதற்கெல்லாம் காரணம், எங்களைப் போன்றவர்கள் இந்த அமைப்பை நடுங்க வைப்பவர்களாக இருப்பது தான். நாங்கள் யார் என்று வெளியில் தெரியாமல் செய்வதில் இந்த அரசு - அமைப்பானது மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. 'குற்றவாளிகள், பயங்கரவாதிகள்' என்றெல்லாம் நாங்கள் அழைக்கப்படுவதும் இதனால்தான்.

**எங்களை மக்கள் இன்னும் கேட்கிற நிலை உருவாகவில்லை. எங்கேயாவது செய்தித் தலைப்பு ஒன்றில் படித்திருப்பார்கள், அவ்வளவுதான்!... சிறையில் அடைக்கப்பட்ட புரட்சிவாதிகளைப் பற்றிய செய்திகள் வெளிவராமல் இருப்பதில் அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்கிறது; அரசாங்கத்தின் இந்தச் செயல்பாட்டை ஓர் எதிர்ப்புரட்சி உத்தியாகக் கொள்ளலாம். இப்படி அரசியல் கைதிகளைத் தனிமைப்படுத்தி அழிப்பது, இக்கைதிகள் சார்ந்துள்ள அரசியல் இயக்கங்களின் அடிப்படைகளையே கரைத்து விடுவது என்பதுதான்.**

**சூஸன்:** இப்போது களச்செயலில் ஈடுபட விரும்பும் உங்களைப் போன்றவர்கள் கடந்த இருபது ஆண்டுகளின் எதிர்ப்பு பற்றிய வரலாற்றை (History of resistence) மீட்டெடுக்க வேண்டிய தேவையை உங்கள் கேள்வி சுட்டுகிறது. மேலும், பேசப்படுகிற விஷயங்களாக முக்கியத்துவம் பெறுவது எவை எவை என்பதை அரசாங்கமும் வெகுஜன தொடர்பு சாதனங்களும் தீர்மானம் செய்து கொண்டிருக்கும் வரை எங்களுடைய போராட்ட அனுபவங்கள் எல்லாமே தொலைந்து போய்விடுகிற அபாயம் இருந்து கொண்டுதான் இருக்கும்.

எங்களை மக்கள் இன்னும் கேட்கிற நிலை உருவாகவில்லை. எங்கேயாவது செய்தித் தலைப்பு ஒன்றில் படித்திருப்பார்கள், அவ்வளவுதான்!... சிறையில் அடைக்கப்பட்ட புரட்சிவாதிகளைப் பற்றிய செய்திகள் வெளிவராமல் இருப்பதில் அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்கிறது; அரசாங்கத்தில் இந்தச் செயல்பாட்டை ஓர் எதிர்ப்புரட்சி உத்தியாகக் கொள்ளலாம். உதாரணமாக ஆறுவருடங்களாக அவ்வப்போது சிறையில் தான் இருந்திருக்கிறேன். இதில் பாதி நாள் தனிமைச்சிறைதான். சிறைச்சாலைக்கு என்னுடைய உறவினர்களும் நண்பர்களும் அடிக்கடி வர முடியாது. அவர்கள் வசிக்கிற இடத்திலிருந்து இச்சிறைச்சாலை ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் தூரத்தில் இருப்பதுதான் இதற்குக் காரணம் . அமெரிக்காவிலுள்ள முக்கிய அரசியல் கைதிகளான 100 - 150 பேரின் அனுபவமும் இப்படித்தான். இப்படி அரசியல் கைதிகளைத் தனிமைப்படுத்தி அழிப்பது, இக்கைதிகள் சார்ந்துள்ள அரசியல் இயக்கங்களின் அடிப்படைகளையே கரைத்து விடுவது என்பதுதான்.

**நாங்கள் செய்ததாக அரசாங்கம் அறிவித்த விஷயங்கள் கட்டுக்கதைதான். ஆனாலும், நிறவெறி, பாலியல் - ஒடுக்குமுறை, ஏகாதிபத்தியம் ஆகியவற்றை அதீதமான எனது இந்த உடலின் ஒவ்வொரு திசுவும் எதிர்த்துக் கொண்டுதான் இருக்கும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை 'நீதி' என்பது அவர்களின் ஏகபோக விஷயமாகும்; புரட்சிகரச்செயல்பாடுகள் எல்லாமே அவர்களுக்கு 'பயங்கரவாத வன்முறை'யாகவே தெரியும்.**

**கேள்வி:** உங்கள் குற்றங்களாகக் கூறப்படும் செயல்களில் நீங்கள் ஈடுபட்டீர்களா? ஆம் என்றால் அதற்கான காரணம் என்ன என்று கூறுவீர்களா?


**லிண்டா:** அமெரிக்காவில் புரட்சி ஒன்று தோன்றுவதற்காகவும் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்காகவும் நான் என்று ஆதரவு அளிப்பேன். அவ்வித ஆதரவை அளிக்க விழைகிற ஆயுதரீதியான இயக்கத்தில் பங்கு பெற்றேன் என்பதைச் சொல்லிக் கொள்வதில் நான் பெருமையடைகிறேன். ஆனால் இந்த அரசாங்கம் எங்கள் செயல்பாடுகள், அத்தனையையும் தீர்த்துக்கட்டியது.




அதற்காக எங்களைப் 'பயங்கரவாதிகள்' என்று பெயர் சூட்டி அழைத்தது; எங்கள் நோக்கமும் செயல்பாடுகளும் மக்களைக் கொல்வதுதான்' என்று பொய்ப் பிரச்சாரம் செய்தது; சமுதாயத்துக்கு நாங்கள் எதிரிகள் என்றும் சொல்லிப்பார்த்தது.

இதற்கெல்லாம் மாறாக, கடந்த இருபது ஆண்டுகளாக எங்கள் இயக்கங்களின் ஆயுத நடவடிக்கைகளைப் பார்த்தால் உங்களுக்கு ஒரு விஷயம் பிடிபடும். இந்தச் செயல்கள் அத்தனையுமே மனித உயிர்களைக் கொல்வதைக் கூடியவரையில் தவிர்த்தே வந்துள்ளன. ஆனால் இந்த அரசாங்கத்தின் செயல்பாடுகளைப் பாருங்கள்.

உலகெங்கும் கூலிப்படைகளையும் சாவுக்குழுக்களையும் ஊக்குவிப்பதுதான் இந்த பயங்கரவாத அரசாங்கத்தின் முக்கிய பணி. நிகரகுவாவில் காண்ட்ராக்கள், அங்கோலாவில் யுனிட்டா (UNITA) அமைப்பு, பாலஸ்தீனர்களை வதைக்கும் இஸ்ரேல் அரசாங்கம்...... இப்படி எல்லோருக்கும் அமெரிக்க அரசாங்கம் உதவி செய்யவில்லையா! இதுதவிர இங்கேயுள்ள கறுப்பு இன மக்களின் மீதான, மூன்றாம் உலக நாட்டுமக்களின் மீதான தினசரி போலீஸ் ஒடுக்குமுறை நடக்கவில்லையா! 1985 இல் (MOVE) என்ற ஃபிலடெல்ஃபியாவிலுள்ள கறுப்பு இனமக்களின் குடியிருப்பின் மீது இந்த அரசாங்கம் விமானத் தாக்குதல் நடாத்தி அதில் 11 பேர் இறந்து போனது நினைவில் இல்லையா!





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அமெரிக்காவில் அரசியல் கைதிகளுக்கான சிறையிலிருந்து

# மூன்று பெண் கைதிகள் பேசுகிறார்கள்



**என்னைப் பொறுத்தவரை *1960 களில் சமாதான* ஆர்வலராகவும் (Peace activist) *1970களில் அரசியல்* ஈடுபாட்டுடனும் 1980களில் வளர்ந்து கொண்டிருந்த தலைமறைவு எதிர்ப்பு இயக்கத்தில் பங்கு பெற்றும் இருந்துள்ளேன். என் வாழ்க்கை பூராவுமே இப்படிப் புரட்சிவாதியாகவே கழித்திருக்கிறேன். ஆக, ஏகாதிபத்தியத்தை புரட்சிகர ரீதியில் எதிர்த்த குற்றத்தை எப்போதுமே நான் செய்து வந்துள்ளவள்தான்.**

**லாரா:** நாங்கள் செய்ததாக அரசாங்கம் அறிவித்த விஷயங்கள் கட்டுக்கதைதான். ஆனாலும், நிறவெறி, பாலியல் - ஒடுக்குமுறை, ஏகாதிபத்தியம் ஆகியவற்றை அதீதமான எனது இந்த உடலின் ஒவ்வொரு திசுவும் எதிர்த்துக் கொண்டுதான் இருக்கும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை 'நீதி' என்பது அவர்களின் ஏகபோக விஷயமாகும்; புரட்சிகரச்செயல்பாடுகள் எல்லாமே அவர்களுக்கு 'பயங்கரவாத வன்முறை'யாகவே தெரியும்.

**சூஸன்:** இன்றைய பல பிரச்சினைகள் அமைப்பு ரீதியானவை என்று தான் கருதுகிறேன். இந்த சமுதாய அமைப்பை மாற்றி இதிலிருந்து மீள்வதற்கு நானும் சரி, பிறரும் சரி, பல்வேறுவகையான வழிமுறைகளைக் கையாண்டு பார்க்கிறோம். இங்கேதான் அரசு என்கிற அம்மைப்பை எதிர்க்க வேண்டிய தேவைக்கு உள்ளாகிறோம்.

என்னைப் பொறுத்தவரை 1960 களில் சமாதான ஆர்வலராகவும் (Peace activist) 1970களில் அரசியல் ஈடுபாட்டுடனும் 1980களில் வளர்ந்து கொண்டிருந்த தலைமறைவு எதிர்ப்பு இயக்கத்தில் பங்கு பெற்றும் இருந்துள்ளேன். என் வாழ்க்கை பூராவுமே இப்ப

**உலகெங்கும் ஏகாதிபத்தியம் தனது இராணுவ பலத்தைக் காட்டியே தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது. எங்கெல்லாம் மக்கள் சமுதாய மாற்றத்துக்காகப் போராடுகிறார்களோ அங்கெல்லாம் வன்முறையைக் கிளப்பிவிட்டு ஏகாதிபத்தியம் மிரட்டுகிறது. இந்தச் சூழ்நிலையில் மக்களை ஒடுக்கிக் கொல்லுகிற அமைப்பைத் தோற்கடிக்க எல்லா வழிமுறைகளும் பயன்படுத்தப்பட்டாக வேண்டும். இங்கே போராட்டம் என்பதே தற்காப்புப் போராட்டம் தான்; மக்கள் அதிகாரத்துக்காகவும் சுயநிர்ணய உரிமைக்கானதுமான போராட்டம்தான்.**

'டிப் புரட்சிவாதியாகவே கழித்திருக்கிறேன். ஆக, ஏகாதிபத்தியத்தை புரட்சிகர ரீதியில் எதிர்த்த குற்றத்தை எப்போதுமே நான் செய்து வந்துள்ளவள்தான்.

அரசாங்கம் எங்களைப் போன்றவர்களைப் பற்றிய பொய்யான பிரச்சாரத்தைச் செய்து வருகிறது. எங்களைப் 'பயங்கரவாதிகள்' என்று முத்திரை குத்த முயல்கிறது. ஆனால் உண்மையில் நாங்கள் பயங்கரவாதிகள் அல்லர். 1950களில் அமெரிக்காவில் கம்யூனிஸ்ட் என்பது எப்படி ஒரு கெட்டவார்த்தையாக ஆக்கப்பட்டதோ அதைப் போல இன்று 1980, 90களில் 'பயங்கரவாதிகள்' இருக்கிறார்கள்! இதெல்லாம் உண்மை தானா என்பதை நீங்கள் பரிசோதித்துக் கொள்ளலாம்.

உங்கள் கேள்விக்கான நேரடியான பதிலை நான் சொல்லவில்லை என்று நினைக்க வேண்டாம். சிறையில் அடைக்கப்பட்ட புரட்சிவாதி யாருமே தனது புரட்சிகரப் பணிகள் பற்றிய எல்லா விபரங்களையும் கூற மாட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா!

**கேள்வி:** நமது 'எஜமானர்களின் வீடாகிய' அரசு அமைப்பை அதே எஜமானர்களின் கருவியாகிய வன்முறையால் தகர்க்க முடியாதென்று கூறுகிறார்கிறார்கள்! ஆக, வன்முறை என்பது பற்றிய உங்களுடைய நிலைப்பாடு தான் என்ன?

**லிண்டா:** வன்முறை தொடர்பான இக்கேள்வி அமைக்கப்பட்டுள்ள விதத்திலேயே பிரச்சினை இருக்கிறது. இங்கே பிரச்சினை வன்முறை பற்றியது மட்டுமல்ல; பிரச்சினையானது இங்கு அரசியல் மற்றும் அதிகாரம் தொடர்பானது. உலகெங்கும் ஏகாதிபத்தியம் தனது இராணுவ பலத்தைக் காட்டியே தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்கிறது. எங்கெல்லாம் மக்கள் சமுதாய மாற்றத்துக்காகப் போராடுகிறார்களோ அங்கெல்லாம் வன்முறையைக் கிளப்பிவிட்டு ஏகாதிபத்தியம் மிரட்டுகிறது. இந்தச் சூழ்நிலையில் மக்களை ஒடுக்கிக் கொல்லுகிற

**'வன்முறை' என்பதை ஒரே ஒரு வகையானது என்று கூறமுடியாது. எனவே அது 'எஜமானர்களுடைய கருவியாக' மட்டுமே கருதப்பட முடியாது. அதே சமயத்தில் அமெரிக்க அரசாங்கத்தைப் போலவே மனித உயிர்களைப் பற்றி புரட்சியாளர்களும் கவலைப் படாமலிருந்தால் அது தவறு என்பதையும் சொல்ல விரும்புகிறேன். ஒடுக்கப்பட்ட மக்கள் தமது விடுதலைக்காக 'வன்முறை' உட்பட்ட பல வழிகளில் போராட முற்பட்டால் அதை ஆதரிப்பது நமது கடமையாகும்.**

அமைப்பைத் தோற்கடிக்க எல்லா வழிமுறைகளும் பயன்படுத்தப்பட்டாக வேண்டும். இங்கே போராட்டம் என்பதே தற்காப்புப் போராட்டம் தான்; மக்கள் அதிகாரத்துக்காகவும் சுயநிர்ணய உரிமைக்கானதுமான போராட்டம்தான்.

ஆக, 'வன்முறை' என்பது வெறும் வழிமுறை குறித்த பிரச்சினையல்ல. இப்படிப் பிரச்சினையைக் குறுக்கினால் புரட்சிகர இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்பி விடுவதற்கான சாத்தியக் கூறுகளை நம்மால் பார்க்கவே முடியாது; மக்கள் அமைப்புக்களைக் கட்டி, ஒடுக்கப்பட்ட மனிதக்குழுக்களுக்கான அதிகாரத்துக்கான போராட்டத்தை நடத்துவதற்கான திட்டத்தை தயாரித்து, மக்களை அதற்கான பணியில் ஈடுபட வைப்பதிலுள்ள பிரச்சினைகளை நம்மால் பார்க்கவே முடியாது.

சீனப்புரட்சியின் முழக்கம் ஒன்றுதான் இங்கே நினைவுக்கு வருகிறது.

***"வெகுஜனப் போராட்டம் இல்லாமல் புரட்சி என்பதில்லை.***
***ஆயுதப் போராட்டம் இல்லாமல் வெற்றி 'ன்பதில்லை"***

லாரா: 'வன்முறை' என்பதை ஒரே ஒரு வகையானது என்று கூறமுடியாது. எனவே அது 'எஜமானர்களுடைய கருவியாக' மட்டுமே கருதப்பட முடியாது. அதே சமயத்தில் அமெரிக்க அரசாங்கத்தைப் போலவே மனித உயிர்களைப் பற்றி புரட்சியாளர்களும் கவலைப் படாமலிருந்தால் அது தவறு என்பதையும் சொல்ல விரும்புகிறேன். ஒடுக்கப்பட்ட மக்கள் தமது விடுதலைக்காக 'வன்முறை' உட்பட்ட பல வழிகளில் போராட முற்பட்டால் அதை ஆதரிப்பது நமது கடமையாகும்.

'வன்முறை' பற்றிக் கேட்கும் உங்களிடம் ஓர் எதிர்க்கேள்வி: அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்ட ஆப்ரிக்க அடிமைகள் தமது எஜமானர்களைக் கொன்று போட்டதை 'வன்முறை' என்று கூறி நீங்கள் எதிர்ப்பீர்களா? எனவே நமது விடுதலைக்காக நாம் எவ்வாறு மனிதாபிமானத்துடன் போராடுகிறோம் என்பது மட்டுமே இங்கே முக்கியம். நமது போராட்ட வழிமுறைகள் மற்றும் நமது இலக்கு விமர்சன ரீதியாக இருக்க வேண்டியது மிக அவசியம். அதே சமயத்தில் வெற்றியை நோக்கி நமது போராட்டம் இருக்க வேண்டும் என்றால் அதிகாரத்தை நோக்கியதாக அது அமைய வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக ஆப்பிரிக்க அமெரிக்கப் பெண்களுக்கு எதிரான வன்முறைக்குச் சாட்சியாக நான் இருந்து வந்திருக்கின்றேன். இந்த சூழ்நிலையை மாற்ற முடியாமல் போகுமேயானால் இந்த அமைப்பு ரீதியான வன்முறையை ஏற்றுக்கொண்டதாகிவிடும். இச்சூழ்நிலையை மாற்றுவதற்கு வெறும் அகிம்சா ரீதியான போராட்டங்கள் போதாது என்பதில் எனக்குத் துளியும் சந்தேகமில்லை.

**கேள்வி:** ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றியது ஏன்?

**லிண்டா:** துவக்கத்தில் ஒரு சமாதானப் பிரியையாக போர் - எதிர்ப்பு இயக்கத்தில் இருந்தேன். அகிம்சா ரீதியாகவே இந்தச் சமுதாயம் மாறும், மாறமுடியும் என்று பகற்கனவு கண்டு கொண்டிருந்தேன். பென்டகன் (Pentagon) அருகே நடத்தப் பெற்ற போராட்டத்தில் எனக்கு சரியான தடியடிவீச்சும் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சும் கிடைத்தது. அப்போதுதான் இந்த சமுதாய அமைப்பு வன்முறையைக் கொண்டே ஒவ்வொரு தளத்திலும் தன்னை நிலைநிறுத்திக் கட்டமைத்துக் கெள்கிறது என்று எனக்குப் புரிய ஆரம்பித்தது. போருக்கு எதிர்ப்புக் காட்டுபவர்கள் அடிக்கப்படுவதையும் வெள்ளையற்ற நிற இன மக்கள் இங்கே ஒடுக்கப்படுவதையும் கொலை செய்யப்படுவதையும் வியட்நாமில் மக்களுக்கு எதிராக அமெரிக்க இராணுவம் நடாத்திய போரையும் என்னால் இணைத்துப் பார்க்க முடிந்தது. இதற்கெல்லாம் எதிராக கறுப்பு இன, வியட்நாமியப் பெண்கள் நடாத்திய போராட்டத்தின் மூலம் அவர்களுக்குக் கிடைத்த மனோபலம் என்னை ஆச்சரியப்பட வைத்தது. அப்படித் தான் எனக்கு ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வந்தது. மார்க்ஸ், எக்ஸ், சேகுவாரா, ஹோசிமின் போன்றவர்களின் எழுத்துக்களும் செயல்களும் எனது ஆர்வத்தை இன்னும் தூண்டின. Black Panthers கட்சி அலுவலகத்தின் மீதும் அக்கட்சி உறுப்பினர்கள் மீதும் அமெரிக்க பொலிஸார் நடாத்திய தாக்குதல்களைக் கண்டு இன்னும் ஆத்திரமடைந்தேன். இந்த அமைப்பை நிலைகுலையச் செய்கிற எந்த ஒரு போராட்டத்தின் மீதும் அமெரிக்க அரசாங்கம் கடுமையான அடக்கு முறையை ஏவிவிடுவதைப் பார்த்தேன்; புரிந்து கொண்டேன். இதன் மூலம் எங்களையும் எங்கள் தோழர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கான அவசியத்தைப் புரிந்து கொண்டேன்.

**லாரா:** 1970களில் கறுப்பு இன மக்கள் மீது நடத்தப்பட்ட கடுமையான தாக்குதல்களைப் பார்த்த பின்பே நான் ஆயுதப் போராட்டத்தின் ஆதரவாளராக மாறினேன். Black Panther கட்சித் தலைவர் ஃப்ரெட் ஹாம்ப்டன் கொலை செய்யப்பட்டதும் என்னை வெகுவாக பாதித்துவிட்டது. அமெரிக்க அரசாங்கம் இங்கே ஒடுக்கப்பட்டுள்ள இனங்களுக்கு மனித உரிமைகளை ஒரு போதும் வழங்காது என்பதை நான் இப்போது புரிந்து கொண்டேன். மேலும் போராட்டம் என்பது வெற்றியை இலக்காக வைத்து இயங்க வேண்டும் என்பதையும் அதற்கான வழிமுறைகள் பல்வேறு வகைப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதையும் அப்போது புரிந்து கொண்டேன்.

**சூஸன்:** கறுப்பு இன மக்களின் மீது இந்த அமைப்பு தொடுத்துள்ள வன்முறையை, குறிப்பாக நியூயோர்க் நகரத்திலுள்ள தெற்கு ப்ராங்க்ஸ் (South Bron) பகுதியில் அரசாங்கம் செய்த இரசாயன இனக்கொலையை சாட்சியாக இருந்து பார்த்து வருகிறேன். அங்குபங்சர் மருத்துவர் என்ற முறையில் சொல்கிறேன், இங்கே கட்டவிழ்த்து விடப்பட்ட கொடிய நோய்களை எங்களால் எதிர்த்துப் போராட முடியாமல் போயிற்று. இதையெல்லாம் பார்த்த பின்பு தான் ஆயுதப் போராட்டத்தின் தேவையை உணர்ந்து கொள்ள என்னால் முடிந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை:

## அரசியல் யாப்பு சீர்திருத்தங்களும் மலையக மக்களும்—5

## பெரி சுந்தரத்துக்கு கல்வீச்சு!

பீ.ஏ.காதர்

*1931 – அரச சபை தேர்தல்*

டொனமூர் யாப்பின்படி முதலாவது அரசசபை (State council) 1931 இல் அமைக்கப்பட்டது. இது 61 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. இவர்களுள் 50 பேர் தொகுதிவாரியாக சர்வஜன வாக்குரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். 8 பேர் சிறுபான்மையினரின் நலனை பாதுகாப்பதற்காக தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். (4 ஐரோப்பியர், பறங்கியர், மலேயர், இந்திய வர்த்தகர்) பிரதம காரியதரிசி, சட்டமா அதிபர், நிதிக்காரியதரிசி ஆகிய மூன்று உத்தியோகத்தர் (சபையில் வாக்களிக்கும் உரிமையற்றவர்) இச்சபையில் இடம் பெற்றனர்.

1931 சனத்தொகையில் 15.4 சத வீதத்தினரான மலையக மக்களுக்கு 50 தொகுதிவாரி பிரதிநிதித்துவத்தில் 7 அல்லது எட்டு பேரை தெரிவுசெய்யும் வாய்ப்பு இருந்திருக்க வேண்டும். ஆனால் வாக்குரிமை கட்டுப்பாடுகள் தொகுதிகள் நியாயமற்ற முறையில் பிரிக்கப்பட்டமை போன்ற காரணங்களால் மூன்று அங்கத்தவர்களே தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் வெள்ளைக்கார தோட்டத்துரை.

முன்னர் கூறிய வாக்குரிமைச் சட்டத்தின்படி தேவையான வதிவிட தகைமையை நிரூபிப்பதற்கு தோட்ட தொழிலாளரை ஊக்குவிக்கவும் நெறிப்படுத்தவும் எந்த ஒரு அமைப்பும் பலம் பெற்றுத் திகழவில்லை. கல்வியறிவற்ற தொழிலாளரால் அது முடியவில்லை எனவே தோட்டத் தொழிலாளரை விட நகர்ப்புற இந்தியர்களின் வாக்கே விகிதாசாரத்தில் அதிகமாக இருந்தது.

இத்தேர்தலில் நடேச ஐயர் போட்டியிடவில்லை. அவரது கட்டுப்பணத்தை செலுத்துவதாக ஒத்துக்கொண்ட கங்காணிமார் பெரி சுந்தரத்தை வெற்றி பெறச் செய்வதற்காக கடைசி நேரத்தில் காலைவாரிவிட்டதால் பொருளாதார வசதியற்ற ஐயரால் போட்டியிட முடியாமற் போய்விட்டது.

***1931 அரச சபையில் இடம் பெற்ற இந்திய- மலையகத்தில் தெரிவான பிரதிநிதிகள்***

***1. பெரி.சுந்தரம் - ஹட்டன் தொகுதியில் தெரிவானார்***

***2. எஸ்.பி. வைத்திலிங்கம் - தலவாக்கொலை தொகுதியில் தெரிவானார்.***

***3. எ. பெலோஸ் கோர்டன் - பண்டாரவளை தொகுதியில் தெரிவானார்.***

***4. ஐ.எக்ஸ். பெரைரா நியமன உறுப்பினர்***

இவர்களில் பெரி. சுந்தரம் அவர்கள் தொழில், கைத்தொழில், வர்த்தக அமைச்சராகவும் கடமையாற்றினார்.

*1936 – 2வது அரச சபை தேர்தல்*

ஐந்து வருட கால முடிவில் 1936ம் ஆண்டு இரண்டாவது அரசசபை தேர்தல் நடைபெற்றது. 1931ல் ஒரு லட்சமாக இருந்த இந்திய - மலையக வாக்காளர் தொகை 1936இல் 1,45,000 மாக அதிகரித்தது. இத்தேர்தலில் பெரி சுந்தரம் போட்டியிடவில்லை. அப்போது நிலவிய பொருளாதார நெருக்கடியின் போது அவர் தொழில் மந்திரியாக இருக்கும் வேளையில் தான் தோட்ட தொழிலாளரின் சம்பளம் குறைக்கப்பட்டது. இதனால் தோட்ட தொழிலாளரின் ஆத்திரத்திற்கு அவர் ஆளானார். ஹட்டனில் வைத்து அவர் மக்களின் கல்வீச்சுக்கு உள்ளானார். எனவே அவர் தேர்தலில் வெற்றிபெறக்கூடிய நிலைமை இருக்கவில்லை.

1936 அரச சபையில் இந்திய - மலையகத்திலிருந்து தெரிவான பிரதிநிதிகளாக பின்வருவோர் திகழ்ந்தனர்.

1. கோ.நடேச ஐயர் - ஹட்டனிலிருந்து தெரிவானார்.
2. எஸ்.பி.வைத்திலிங்கம் - தலவாக்கலையிலிருந்து தெரிவானார்.
3. டேனியல் டயஸ் குணசேகர - பண்டாரவளையிலிருந்து தெரிவானார்
4. ஐ.எக்ஸ்.பெரைரா - நியமன அங்கத்தவர்.

இவர்களைவிட இடதுசாரி தலைவர்களான என்.எம். பெரேரா ரூவன்வெல்ல ஆசனத்தில் இருந்தும், பிலிப் குணவர்த்தன அவிசாவளை தொகுதியிலிருந்தும் தெரிவாயினர்.

மலையக தமிழ் மக்களது வாக்குகளே இவர்களது வெற்றிக்கு பெரிதும் காரணமாயிருந்தது.

இதன் பின்னர் 1947வரை இரண்டாம் உலக மகாயுத்தம் காரணமாக தேர்தல் நடைபெறவில்லை. அரச சபையின் ஆயுள் காலம் நீடிக்கப்பட்டது.

டொனமூர் சீர்திருத்தத்தின் பின்னர் சோல்பரி அரசியல் யாப்பு வரையபபடும் வரை நிகழ்ந்த முக்கிய விடயங்களை இனி சுருக்கமாகப் பார்க்கலாம்.

முப்பதுகளில் தொழிற்சங்க தலைமை இரண்டாக பிளவுபட்டது. மூத்த தொழிற்சங்க தலைவர் ஏ.ஈ.குணசிங்க இந்தியருக்கெதிரான இனவாதத்தை கக்கத் தொடங்கினார். துறைமுக- வெள்ளவத்தை நெசவாலை மலையாள தொழிலாளருக்கு எதிராக அவர் உயர்த்திய போர்க்கொடி தொழிலாள வர்க்க ஐக்கியத்தில் பிளவை ஏற்படுத்தியது.

என்.எம். பெரேரா , பிலிப் குணவர்த்தன, கொல்வின் ஆர்டீ சில்வா, எஸ்.ஈ.விக்கிரமசிங்க தலைமையில் உருவான இடதுசாரி இயக்கம் தொழிலாள வர்க்க ஐக்கியத்தைப் பாதுகாத்தது.

1930களில் ஏற்பட்ட உலக பொருளாதார நெருக்கடி இலங்கையையும் பாதித்தது. இக்காலப்பகுதியில் ஐரோப்பிய நாடுகளிலும் இனவாதக் கருத்துக்கள் செல்வாக்கு செலுத்தின. (உதாரணம்: ஜேர்மனியில் ஹிட்லரின் நாசிசம்) இலங்கையிலும் ஆரிய- திராவிட இனவாத கருத்துக்கள் தலைதூக்கின. இந்தியருக்கெதிரான அலை கிளப்பப்பட்டது. 1936ல் 26 சதவீதமாக அரசாங்க இலாகாக்களில் பணிபுரிந்த இந்திய ஊழியர்களின் தொகை 1939ல் 19 வீதமாகக் குறைந்தது. 1939ல் தொடர்புகள் சாதன வேலைகள் அமைச்சர் ஜே.எல் கொத்தலாவலையின் வற்புறுத்தலால் சுமார் 2,500 இந்திய அரச ஊழியர்கள் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டனர்.

நிலைமை பாராதூரமாக இருந்தபடியால் 'இந்தியர் விவகாரம்' பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்திய தேசிய காங்கிரஸ் பண்டிட் ஜவகர்லால் நேருவை இலங்கைக்கு 1939ல் அனுப்பி வைத்தது. அவர் இலங்கை தலைவர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தை தோல்வியுற்றது. நேருவின் ஆலோசனைப்படி இலங்கையிலிருந்து இந்தியர் அமைப்புகள் ஒன்றிணைக்கப்பட்டு இலங்கை இந்திய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது.

இலங்கையில் இந்தியர் எதிர்ப்பு போக்கிற்கு பதிலடியாக 1939 ஓகஸ்ட் 1ம் திகதி பயிற்றப்படாத தொழிலாளர் வெளியேற்றத் தடைச் சட்டத்தை இந்தியா நிறைவேற்றியதன் மூலம் இந்தியாவிலிருந்து தொழிலாளர் இறக்குமதி செய்வது தடைப்பட்டது. இதனால் இலங்கையில் மலையக தொழிலாளர் நிலைபெறும் போக்கு அதிகரித்தது.

ஏ.ஈ. குணசிங்கவுடன் தொழிலாளர் இயக்கத்தில் இணைந்திருந்த நடேச ஐயர், குணசிங்கவின் இந்தி எதிர்ப்புணர்வினால் முரண்பட்டு கொழும்பு - நகர்ப்புற இந்திய வம்சாவளி தொழிலாளரது நலனைக் கவனிப்பதற்காக 'இலங்கை - இந்திய தொழிலாளர் சம்மேளனத்தையும்'' தோட்ட தொழிலாளரது நலனைக் கவனிப்பதற்காக ''அகில இலங்கை இந்திய தோட்ட தொழிலாளர் சம்மேளனத்தையும்'' 1929ல் உருவாக்கினார்.

1930களில் மலையக மக்கள் தொழிற்சங்கங்களில் ஸ்தாபனப்படுத்தப்பட்டனர். 1929ல் உருவாக்கப்பட்ட நடேச ஐயரின் ''அகில இலங்கை இந்திய தோட்ட தொழிலாளர் சம்மேளனம்'' அவர் அரசசபையில் அங்கத்துவம் வகிக்காத 1931 - 36 காலப்பகுதியில் ஹட்டனை மையமாகக் கொண்டு வளர்ந்தது. லங்கா சமசமாஜக்கட்சி தனது தொழிற்சங்கத்தை தோட்டப்புறங்களில் 30களின் பிற்பகுதியில் ஆரம்பித்தது. இலங்கை இந்திய காங்கிரஸ் தனது தொழிற்சங்கத்தை (இலங்கை இந்திய காங்கிரஸ் லேபர் யூனியன்) 1940 மார்ச் மாதம் அங்குரார்ப்பணம் செய்தது.

மானிங் சீர்திருத்தத்தின் முதலாவது சட்டசபை தேர்தல் நடைபெற்ற அதே ஆண்டில் 1921 ல் இலங்கை தேசிய காங்கிரசை விட்டு அதன் ஸ்தாபகர் பொன் அருணாசலம் வெளியேறியமை மேல் வர்க்கத்தினரிடையே ஏற்பட்ட இனப்பிளவின் வெளிப்பாடாக அமைந்தது. 1930களில் இவ் இனப்பிளவு மேலும் ஆழமானது. 1936 நவம்பர் மாதம் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க சிங்கள மகாசபையை அமைத்தார். 1944 ஓகஸ்ட் மாதம் அகில இலங்கை தமிழர் காங்கிரஸ் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையில் உருவானது.

1924ல் உருவான யாழ்ப்பாண இளைஞர் கழகம் 1931 டொனமூர் தேர்தலை பகிஷ்கரித்தது. இதனால் 1934 இடைத்தேர்தல் ஒன்று நடைபெறும் வரை வடக்கின் பிரதிநிதித்துவம் அரசசபையில் முழுமையாக இருக்கவில்லை. 1934 இடைத்தேர்தலில் பருத்தித்துறை தொகுதியில் போட்டியிட்டு ஜீ.ஜீ.பொன்னம்பலம் தெரிவானார். இவர் அரசசபை இந்திய வம்சாவளியினரது வாக்குரிமையைக் கட்டுப்படுத்தும் 1931 ஓடர் - இன் - கவுன்சில் சட்டத்தை நிறைவேற்றியதனை எதிர்த்து தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது கருத்து வெளியிட்டார். 1937ல் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை முன்வைத்தார்.

1940 முல்லோயா கோவிந்தனின் துப்பாக்கி சூட்டு சம்பவம் அரசியல் யாப்பில் ஒரு நெருக்கடியைத் தோற்றுவித்தது.

இக்காலப்பகுதியில் மலையக மக்களைப் பாதித்த மிக முக்கிய அரசியல் நடவடிக்கை அவர்கள் உள்ளூராட்சி தேர்தலில் வாக்களிப்பதிலிருந்து தடுக்கப்பட்டமையாகும். 1889 கிராம கமிட்டி சட்டம் - இல .13 ( the village committee ordiance - 13) பின்னர் 1924ல் திருத்தியமைக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி கிராமிய சமூகத்தின் அங்கமாக இல்லை என்ற காரணம் காட்டப்பட்டு ஐரோப்பியர்களுக்கும் , பறங்கியருக்கும், இந்தியருக்கும் கிராமசபை தேர்தலில் வாக்களிக்கும்

→15

# கிராமத்துக் குறிப்புகள்: 3

## சாமி வரும்

அழைத்துப்போக
எத்தனை நாள்-
பாட்டி புலம்புவாள்
நாள் முழுக்க-
ஊருக்குப் போய்
லெட்டர் போடும்
உத்தேசத்தைச்
சொல்லிப் போவார்
தஞ்சாவூர்க்காரர் -
கூடத்தில் சிந்திய
தித்திப்புத்துகள்களை
முகர்ந்து ரசிக்கும்
எறும்பு வரிசை
உச்சிவகிடு தரையில் பட
கும்பிட்டுப் கும்பிட்டு
கூனிப் போன பவானியக்கா
தபால்காரனைப்
பார்த்துப் பார்த்து
சோர்ந்து போவாள் -
இரண்டாந்தார
கோமதி நினைப்பில்
கற்பூரத் தட்டில்
சுட்டுக்கொள்வார்
குருக்கள் மாமா -
மேளவாத்தியக்
கச்சேரி இருக்க
இருட்டு வேலியைத்
தாண்டி நின்று
மருண்டுபார்க்கும்
இளம் விதவை -
ஜென்னல் கம்பியில்
பட்டுத் தெறிக்கும்
வெளிச்ச வீச்சில்
பயந்து கத்தும்
தொட்டில் குழந்தை-
குதிரைவாகனச்
சாமிவரும் குதூகலமாய் -

## வாத்தி வரும்

ஆகாயம் மொத்தமும்
எனக்கேயென
சத்தம் போடுவான் முருகேசு-
பெரியவீட்டுப்பிள்ளையின்
உரத்த குரல்
உடலை உலுக்க
பாட்டு சொல்லித்தராத
பாட்டியை நினைத்து
முருகேசு கையை
முறுக்கிக் கிள்ளுவாள்
ராசாத்தி-
அழுக்குக் கிழிசலை
மறைத்துக் கொண்டு
மேட்டுவீட்டு
பாலுப் பயலுக்கு
பழிப்பு காட்டுவான்
சன்னாசி-
பட்டுத்தாவணி
பளபளப்பு காட்ட
வந்து நிற்கும்
வினிதாவைச் சுற்றி
வியந்து பார்க்கும்
பல கண்கள் -
அடிவாங்கக் காத்திருக்கும்
அவலம் நினைத்து
காற்றிலாடும் தண்டவாளம் -
கிழக்குத் திசையில்
சூரியன் வெளுத்து
உடலைத் தழுவும்
இளஞ்சூடாய் -
பழைய சைக்கிளை
அழுத்தி அழுத்திக்கால் வலிக்க
இறங்கிவருவார்
வாத்தியார் சார்

## யுத்தம் வரும்

பசியை மறந்து
என் தேசமென்று
கையுயர்த்தும்
ஏழை ஜெனங்கள்
வல்லரசுகள்
ஆயுதங்களைத்
தூக்கிகொள்ளும் -
புத்தியாளர்கள்
புதியவேகத்தோடு
புறப்பட்டு வருவர் -
விடியுமென்று
விழித்தேயிருக்கும்
நடுத்தரம் -
அரசு எந்திரங்கள்
ஆணைகளைத்
துப்பும் அவசரமாய்-
ஆட்சியாளர்கள்
அடுத்த தேர்தலுக்கு
ஆயத்தப்படுவர்-
நாளைவரும் வெள்ளம்
மறந்து
நட்டாற்றுக் குடிசையில்
கனவு காணும்
பேசாத ஜெனங்கள்-
தலைப்புச் செய்திகளில்
பெரியர் சிறியராவர்
சிரியர் பெரியராவர் -
பதுக்கிவைக்கக்
கிடங்குகளைக்
கட்டிமுடிக்கும் வியாபாரக்
கும்பல் -
ஆபீஸ் நேரத்தில்
ஒன்றுக்குப் போவது
தேசத்துரோகமென்று
பைல் மனிதர்கள்
நெளிந்து கொண்டிருப்பர் -

நா.விசுவநாதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டக்களப்பில் நவீன நாடக (இயற்பண்பு சாரா) முயற்சிகள் பற்றிப் பேசும் போது கலாநிதி சி. மௌனகுரு, வெ.தவராசா, நேசராசா போன்றவர்களையே குறிப்பிட்டுக் கூறலாம். இவர்களை விட நாடக ஆசிரியர்கள் நாடக இயக்குனர்கள் இருந்தாலும் அவர்கள் மரபுவழி நாடகங்களையோ, இயற்பண்பு நாடகங்களையோ, மனோரதிய நாடகங்களையோதான் படைக்கின்றனர். இவர்களில் இருந்து வித்தியாசப்பட்டவர்கள் தான் மேற்குறிப்பிட்டவர்கள்.

'மங்கையராய் பிறப்பதற்கே' எனும் இந்நாடகம் சாவதேச பெண்கள் தினத்தை ஒட்டி மார்ச் 11 அன்று ஆசிரியர் கலாசாலையில் நிகழ்த்தப்பட்டது. இதனை வெ.தவராசா எழுதியும் இயக்கியும் இருந்தார். குறியீட்டு ரீதியாக பெண்ணிலை பற்றிப் பேசுகின்றது.

பட்டன. இதனை நாடக கரு சம்பந்தமானது. நாடக நிகழ்த்துகை சம்பந்தமானது என இரண்டாகப் பிரித்து நோக்கலாம்.

நாடக கருவை எடுத்துக் கொண்டால் நாடகத்துக்கான கருவை தேர்ந்தெடுக்கும் போது அது எந்தச் சமூகத்தில் நிகழ்த்தப்படப்போகின்றது என்பதும் முக்கியம். தாய்வழி சமூக அமைப்பையுடைய மாமியார் வீட்டில் தங்குவது மரபில்லை. பெண் வீட்டில் மாப்பிள்ளை தங்கி ஆறு மாதம் சோறும் சாப்பிடும் வழக்கம் தான் இங்குண்டு.

இதை விடுத்து வேறொரு சமூகத்தின் பெண் பிரச்சினை பற்றிப் பேசும்போது அதனை ஒரு பரிதாப நிலையோடு தான் நோக்குவர். எனவே இவ்வகை தன்மையிலான தாக்கத்திலிருந்து ஆசிரியர் விடுபட்டு மட்டக்களப்பில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன என்பதை கருவாகக் கொண்டிருப்



# மங்கையராய்ப் பிறுபபதறகே....
# நாடகம் சில குறிப்புகள்

—சீவரத்தினம்

தந்தை இல்லாது தாயின் வளர்ப்பில் வளரும் தன் மகளை தாயும் அவள் அண்ணனுமாகச் சேர்ந்து சீதனங்கள் கொடுத்து ஒருத்தனுக்கு கட்டிவைக்கின்றனர். மாமியாரின் ஆளுமை, வீட்டில் இருக்கும் மருமகளை அக்குடும்பமே வேலைக்காரியாய் நடத்தப்படும் நிலைக்கு கொண்டு செல்கின்றது. அவள் கர்ப்பமுற்றபோது அவளின் விருப்பமின்றியே அதனை அழித்தும் விடுகின்றனர். இதனால் அவள் மனவேதனைக்குள்ளாகி மிக விரக்தியாக இருக்கும் போது அவளின் அம்மாவும் அண்ணனும் அவளைப் பார்க்க வந்து அவளைக்கண்டு பேதலித்துப் போகின்றனர். அவர்களின் கேள்விகளுக்கு எந்தவித பதிலுமளிக்காமல் எல்லோரையும் எல்லாவற்றையும் தூக்கியெறிந்துவிட்டு அவளுக்கென்றொரு பாதையை தேர்ந்தெடுத்துக் கொண்டு செல்வதுடன் நாடகம் முடிகின்றது.

இக்கரு உரையாடலாலும், பாட்டுக்களாலும் குறியீடுகளாலும் நிகழ்த்தப்பட்டது. குறியீடுகளைப் பொறுத்தவரை மாப்பிள்ளையை ஒரு அரசனுக்குரிய தன்மைபோன்று ஒப்பனை செய்து மரியாதைக்குரிய இசை ஒலிக்க அழைத்துவரப்பட்டு அமரச் செய்தலும், மாப்பிள்ளையின் தாய் பெண்காரர்களிடமிருந்து சீதனம் பெறுவதை வலைபோட்டு இழுத்தெடுப்பதாகவும் கலியாணத்தில் தாலி கட்டும் போது அமங்கல வாத்திய ஒலியின் மூலம் அவளின் உரிமை இறந்ததாக அறிவிப்பதும், தாலி கட்டல் என்பது பெண்ணின் வாய், கை, கால் என்பவற்றையே கட்டுதல் என்பன பாராட்டும்படியான குறியீட்டு உத்தியாக கையாளப்பட்டு இருந்தது.

உரையாடல் சொற்சுருக்கமானதாக இருந்தது. நடனங்கள் பாரதி, தேசிய விநாயகம் பிள்ளை என்பவர்களின் பாடல்களின் பின்னணியில் ஆடப்பட்டது. அரங்கு முழுமையுமே மேடையாக பயன்படுத்தப்பட்டிருந்தது நடிகர்கள் தமது நாடக பார்வையாளர்களுடனும் உரையாடினர்.

இவ்வாறு நல்ல கற்பனை வளம்மிக்க அம்சங்களைக் கொண்டிருந்த போதும் நாடகம் நிகழ்த்திய இடம், காலம், பொருள் என்ற அடிப்படையில் சில குறைபாடுகளும் தென்பாராயின் காத்திரமானதாக அமைந்திருக்கும்.

பாத்திர வார்ப்பில் மாமியார் பாத்திரம் மிக ஆளுமையுள்ள எல்லோரையும் கட்டுப்படுத்துகின்ற பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளது. அவள் கணவன், மகன், மகள், அவளின் கட்டளைக்கு கீழ்ப்படியும் அப்பாவிகள். இவ்வகையான பாத்திரப்படைப்பு பெண்ணிலைவாதத்தையே கேள்விக்குள்ளாக்குகின்றது. ஏனெனில் பெண்ணுக்கு பெண் எதிரியாகவே இங்கு காட்டப்படுகின்றது. இதனால் ஆசிரியர் தன் ஆண்நிலைவாத நோக்கை நியாயப்படுத்துகின்றார் போலும். அத்துடன் மாமியார் மென்மைத் தன்மையுடையவராக அமைகின்றபோது பெண் அடக்குமுறை இல்லை என்றாகிவிடுகின்றது. எனவே பெண்விடுதலை பற்றிப் பேசப்படும் இந்நாளில் அதுவும் சர்வதேச பெண்கள் தினத்தன்று இவ்வகையிலான நாடகம் அத்தினத்துக்கு எவ்வகையிலும் பொருத்தப்பாடானது அல்ல.

அடுத்ததாக நிகழ்த்துகை சம்மந்தமாக பார்க்கின்ற போது நடிப்பு, பாடல், இசை, நடனம், ஒப்பனை என்பன சுமாராக அமைந்திருந்தது. சில காட்சிகள் பிரச்சார ரீதியானதாக அமையும் அபாயத்துக்கு இட்டுச் சென்றது. ''கலையில் பிரச்சாரம் என்பது அதன் அழகியல் அம்சங்களுக்கும் அதன் உள்ளடக்கத்துக்குமிடையில் இருக்கின்ற விகிதாசாரத்தைப் பொறுத்ததாகும்''. இங்கு விகிதாசார சமத்துவம் நிலவியது எனக்கூறலாம்.

குறியீடுகளை பயன்படுத்திய விதத்திலும் நெறியாளர் சிறிது மாற்றம் செய்திருப்பாராயின் நாடகத் தொடர்பை எளிமைப்படுத்தியிருக்க முடியும். உதாரணத்துக்கு மாப்பிள்ளையை கூட்டிவரும் காட்சியை எடுத்துக் கொண்டால் மாப்பிள்ளைக்கான ஒப்பனை ஒரு அதிகாரத்துக்குரிய தன்மையிலானது. பின்னணி இசையும் அவ்வாறே. இவ்வாறு இரண்டையும் குறியீடாகக் கொடுக்கும் போது குறியீட்டுக்கு அந்தக்கணம் அர்த்தம் இல்லாமல் போகின்றது. ஏனெனில் மாப்பிள்ளை மேடைக்கு வந்து அமர்ந்து திருமணத்துக்கான ஏற்பாடுகள் நடக்கும்வரை அது என்ன காட்சி என்பதை விளங்கிக் கலாசார ரீதியானதாகக் காட்டி இசையை அதிகாரத்தை உணர்த்தும் குறியீட்டுத்தன்மையில் பயன்படுத்தியிருக்கலாம். அல்லது ஒப்பனையை குறியீடாக்கி இசையை வழமையான பாணியில் பயன்படுத்தியிருக்கலாம். இதில் ஏதாவது ஒரு தன்மையில் காட்சி அமைக்கப்படும்போது நாடகத்துடனான தொடர்பும் இறுக்கமும் அதிகமாகும்.

இதுபோன்றே தாலிகட்டும் போதும் அமங்கல ஒலி இசைக்க அவள் வாய், கை, கால் என்பன கட்டப்படுகின்றது. திருமணத்தின் போது அமங்கல வாத்தியம் எந்தளவு பொருத்தப்பாடானது என்பதையும் கவனிக்க வேண்டும். அந்த இசை அவளின் உரிமைகள் இறந்ததைக் குறித்தாலும் மறுபக்கம் திருமணம் ஒரு துக்ககரமான நிகழ்வு ஆதலால் அதை வெறுக்க வேண்டும் என்ற ஒரு நிலைக்கும் இட்டுச் செல்கின்றது. இது ஒரு விரும்பத்தகாத போக்காகும். உண்மையில் அவள் திருமணத்துக்கு முன்பு சுதந்திரமுள்ளவளாக இருந்தாளா? இல்லை.

அப்படியிருக்க திருமணத்தின்போதுதான் அவளின் உரிமைகள் அடக்கப்படுகின்றன எனக்காட்டுவது பொருத்தப்பாடானது அல்ல. அதாவது பெண்ணை அடிமைப்படுத்தல் என்பதில் ஒரு நிகழ்வை மையப்படுத்தி ஒருவர் மேல் பொறுப்பற்ற முறையில் பழியைப் போடுவது யதார்த்தமல்ல. இவ்விடயம் பண்பாட்டு ரீதியாக மிக நுட்பமாக காட்டப்பட வேண்டியவையாகும்.

முடிவாக கூறுமிடத்து கரு. நிகழ்த்துகை என சில குறைகள் தென்பட்டாலும் நெறியாளரின் கற்பனை வளம்மிக்க குறியீட்டு உத்தியாலும், காட்சியமைப்புக்களாலும், அரங்கப்பயன்பாட்டாலும், பாத்திர உரையாடலாலும், நாடகம் சோடை போக விடாமல் காப்பாற்றிவிட்டார். மட்டக்களப்பில் இவ்வாறான முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவை. வெ.தவராசா மட்டக்களப்புக்கு எதிர்காலத்தில் நல்ல நவீன நாடகங்களை தரக்கூடிய வளம் அவருக்குண்டு என்பது இந்நாடகத்தின் மூலம் அவர் எமகுணர்த்தியுள்ளார்.

# ஐரோப்பிய தமிழ் நாடக அரங்கம்: தரமான பிரதிக்குத் தட்டுப்பாடு

சமீப நாட்களுக்கு முன் பாரிஸ்சில் மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நாடக விழா நடந்தேறியது. நான்கு நாடகங்கள் மேடையேறின. நாடக ஆர்வலர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. நல்ல நடிகர்களையும் ஒரு பரந்த வட்டத்தையும் கொண்டு இயங்கும் மகாஜனாவுக்கு ஏன் இக்கெதி? இக்கேள்வி என்னுள். இன்னும் பலருள். நாடக இலக்கிய உலகில் ஓர் தனித்துவமான இடத்தை ஈழத்தில் தக்க வைத்துக் கொண்டிருந்த மகாஜனாவுக்கு பாரிஸ்சில் கூட கணேசலிங்கம், சாம்சன், சிவாநந்தம், யோகராஜா போன்ற திறன் மிக்க நடிகர்களும், ஓசை மனோ, கலைச் செல்வன் போன்ற நாடக அரங்க அறிதல் கொண்ட நெறியாள்கையாளர்களும் அடக்கம். இவ்வாறான நாடக பார்வை நிரம்பப் பெற்ற இவ்வட்டத்தினால் ஏன் தரமான மேடை நாடகங்களை தரமுடியவில்லை? அன்றைய நான்கு நாடகங்களில் 'இடைவெளி'' எனும் நாடகம் ஒன்றைத்தவிர ஏனையவை தோல்வி நிலையையே காட்டிநின்றது. இது பற்றி இக்கலைஞர்களோடு பேசிய போது இந்நாடக அரங்கத் தோல்விக்கு முக்கிய காரணியாக இருப்பது நாடகப் பிரதியில் உள்ள குறைபாடுகளே என்பது தெரியவந்தது. தரமான நாடகப் பிரதிகளை தேடி அலைதல் என்பதும் உருவாக்குதல் என்பதும், பல சவால்களையும், எதிர்ப்புக்களையும் தாண்டுதல் என்பதும் புகலிட தமிழ் நாடக கலைஞர்கள் மத்தியில் இமாலய வேலைத்திட்டமாகவே உள்ளது. 'இடைவெளி' நாடகம் தரம் மிக்க வெளிப்பாட்டுத் தன்மையை காட்டியமைக்குக் காரணம், நாடகப் பிரதியின் உள்ளடக்கம். இந்நாடகப்பிரதி சுபைர் ஹமீட்டினால் எழுதப் பெற்று எழுபதுகளின் முற்பகுதியில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மேடையேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



இவ்வாறே பாரிஸ்சில் மேடையேற்றப்பட்ட லண்டன் அவைக்காற்றுக் கழகத்தின் நாடக விழா பற்றிய கலந்துரையாடலின் போது 20 வருடங்களாக ஒரு குறிப்பிட்ட நாடகங்களையே தொடர்ந்து நடாத்துகிறீர்கள். புதிய நாடகங்களை மேடையேற்றும் உத்தேசமே இல்லையா? என்ற வினாவின் போதும் ''தரமிக்க நாடகப் பிரதிகள் எங்களுக்கு கிடைக்கவில்லை'' என்ற பதிலே வெளிப்பட்டது. இப்பதில்கள் நாடக தயாரிப்பாளர்களிடம் உள்ள 'ரெடிமேட்'' பதில்களா அல்லது நிஜம் அதுதானா? இந்நிலை பற்றி ஆராயும் போது ஒரு விடயம் கவனத்தில் படுகின்றது. நாடக உள்ளடக்கத்தில் இவர்கள் ஒரு குறிப்பிட்ட கருத்தாக்க வடிவத்தை நிராகரிப்பதும், இவை கொண்ட மொழிபெயர்ப்பு, மற்றும் தழுவல் நாடகப் பிரதிகளிலிருந்து தப்பி விலகிஓடும் தன்மையையும் வெளிப்படையாக உணர முடிகின்றது.

இந்நிலையானது மகிழ்ச்சிக்குரிய ஒன்றல்ல. அனேகமாக தமிழில் மொழி மாற்றம் செய்யப்படுகின்றவைகளும், மொழி மாற்றம் அல்லது தழுவல் நிலை கொண்ட வடிவங்களை உருவாக்கக்கூடியதுமான நாடகப் பிரதிகள் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், ஒரு குறிப்பிட்ட தத்துவார்த்த உணர்வுகளையும், பண்புகளையும் பிரதிபலிப்பனவாகவும் அமைந்து விடுகின்றன. இவ்வாறான உள்ளடக்கப்பிரதிகளை ஐரோப்பா புகலிட நாடுகளில் மேடையேற்றவிளையும் போது கலைஞர்கள் பலத்த நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாகி விடுகின்றனர். அடக்கப்படும் மனிதத்திற்கு எதிராக குரல் கொடுக்க விளையும் இக்கலைஞர்களை இங்கே மனிதம் வேறு ''வடிவத்தில்'' அடக்கிவிடத் துணியும் என்கின்ற பயமும் இவர்களிடம் நிலவுகின்றது. இந்த 'தமிழ்பேசும்' ஒரு குறிப்பிட்ட அடக்குமுறையானது ஐரோப்பா தமிழ் நாடக அரங்கத்துறையில் அடாவடித்தனமான சட்டம்பித்தனம் பெற்ற ஒரு நிறுவன அமைப்பு வடிவமாக கட்டமைக்கப்பட்டுவிட்டது. அதுவும் குறிப்பாக பிரான்ஸ், அவுஸ்ரேலியா, டென்மார்க், ஜேர்மன் ஆகிய இடங்களில் இவர்களின் நலன் சார்ந்தவர்களின் வீர தீரங்க்ளையும் இவர்கள் ''கொள்கைகளையும் ''(!) பிரதிபலிக்கும் கூத்துக்களை மாத்திமே அரங்கேற்ற முடியும். இல்லையெனில் இவர்களை திருப்திப் படுத்தக்கூடியவகையில் வாழைப்பழம் + நல்லெண்ணெய் என்ற வடிவத்தில் கொடுத்து சந்தோஷம் அடைய வேண்டியதே இறுதியாக மிஞ்சுகிறது. இத்தற்கு மாவை நித்தியானந்தனோ, பாலேந்திராவோ, தாசீசியஸ்சோ, மகாஜனாவோ விதிவிலக்கல்ல. இப்பரிதாபகரமான நிலை மாற்றத்துக்குள்ளாக்கப்படும் ஆயின் ஐரோப்பிய தமிழ் நாடக அரங்கம் ஓர் சிறப்பான எதிர்காலத்தை எய்த முடியும்.

அதுவரைக்கும் குறைந்த பட்சம் இந்நாடகத் தயாரிப்பாளர்கள் புகலிட தமிழர் மத்தியில் நிலவும் குறைந்த பட்ச ஜனநாயக உரிமைகளை பயன்படுத்தி புதிய தேடல்களையும், நவீன பரிசோதனைகளையும் நாடக அரங்கத்துறையில் செய்திடல் அவசியம். நவீன நாடகத்துறையில் புதிய தாக்கத்தினை கொடுத்த ஒகஸ்தோ போல், டென்னிஸ் வில்லியம், ஆங்கார் ஓயில்ட் போன்றவர்களின் நாடகப்பிரதிகளை படிப்பதும் அவற்றினை தமிழில் தழுவல் நிலை கொண்டு தயாரிப்பதும் பயன் சார்ந்த நல்முயற்சியாகும். அத்தோடு நாடக அரங்கத்துறையில் ஆர்வம் கொண்ட கலைஞர்களுக்கு நாடகப் பட்டறைகளை ஒழுங்கு செய்வதும், அதற்கூடாக புதிய பரிமாணங்களை புகட்டுவதும இன்றியமையாததாகின்றது.

துடைப்பான்

*அவுஸ்திரேலியாவிலிருந்து*

# பாப்பா பாரதி

தமிழில் குழந்தைகளுக்கான வீடியோ ஒன்று மே மாத இறுதியில் வெளிவர உள்ளது. 45 நிமிட நீளம் கொண்ட ''பாப்பா பாரதி'' என்னும் இவ்வீடியோ, அவுஸ்ரேலியாவில் மெல்பன் நகரில் வாழும் கலைஞர்கள் பலரின் கூட்டு முயற்சியால் உருவாகியுள்ளது. இதனை மாவை நித்தியானந்தன் , சீ.எஸ். யோகானந்தன் ஆகியோர் நெறிப்படுத்தி உள்ளார்கள். மெல்பனிலுள்ள தமிழ்ப் பாடசாலையான ''பாரதி பள்ளி''யினால் இவ்வீடியோ வெளியிடப்பட இருக்கிறது.

இந்த வீடியோவில் குழந்தைகளைக் கவரும் தன்மையுள்ள பல அம்சங்கள் இடம்பெறுகின்றன. இனிமையான பல பாடல்கள், சுவையான கதைகள், நாடகங்கள் ஆகியனவும் இதில் உள்ளன.

பிற மொழிகள் பலவற்றில் மிகவும் வளர்ச்சி பெற்றுள்ள குழந்தைகளுக்கான வீடியோத் துறை, தமிழில் இன்னும் வளர்ச்சி குன்றிய நிலையிலேயே உள்ளது. இந்த வகையில் ''பாப்பா பாரதி''யை ஒரு முன்னோடியான முயற்சியாகக் கருதலாம். இந்த வீடியோ குறிப்பாகப் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழப்பிள்ளைகளுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும்.

உலகின் பல்வேறு நகரங்களிலும் மே மாத இறுதியில் இந்த வீடியோவைப் பெற முடியும். இதற்காக விற்பனைப் பிரதிநிதிகள் பல நாடுகளிலும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். நேரடியாகத் தொடர்பு கொள்ள விரும்புவோர் **BHARATHY ACCADEMY, P.O.BOX: 1357, CLAYTON SOUTH, VICTORIA 3169, AUSTRALIA** என்ற முகவரிக்கு எழுதலாம். இந்த வீடியோவின் அவுஸ்ரேலிய விலை 11 டொலர் 50 சதம். வெளியீட்டுக்கு முன்னதாகவே உறுதி செய்வோருக்கு, சலுகை விலையான $ 9.90 க்குக் கிடைக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற 16 சிறுகதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது மலையகப் பரிசுக்கதைகள் என்ற நூல்.

மலையக மக்களிடையே தமது இனத்துவ அடையாளம் குறித்த சமூக உணர்வு மேற்கிளம்பிய 1950களின் இறுதியில் பதுளையிலிருந்து வெளியான 'கலை ஒளி' சஞ்சிகையை வெளியிட்டவர் முத்தையாபிள்ளை அவர்கள்.

அச்சஞ்சிகையினூடாக மலையக மக்களின் கல்வி, கலை, கலாசாரம், அவர்களுடைய தனித்துவம் தொடர்பான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த உழைத்தவர். அவருடைய நினைவாக நடாத்தப் பெற்ற சிறுகதைப் பேட்டியில் பரிசு பெற்ற சிறுகதைகளின் தொகுப்பு இது.

இத்தொகுப்பில் மலையகத்தின் மூத்த எழுத்தாளரான அல் அஸூமத்தின் சிறுகதையுமுண்டு. அறிமுக எழுத்தாளர்களது சிறுகதைகளும் உண்டு. இத்தொகுப்பின் இன்னொரு விசேடம் ஐந்து பெண் எழுத்தாளர்களது ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளது தான்.

இத்தொகுப்பு சிறந்த செய்நேர்த்தியையும், கலா அனுபவத்தையும் கொண்ட, காலாதி காலத்திற்கும் நின்று நிலைக்கும் படைப்பாக இல்லாமலிருக்கலாம். ஆனால் கல்வியறிவும் வசதி வாய்ப்புக்களுமற்ற அவர்களது நூற்றாண்டுக்கு மேலான அடிமை வாழ்க்கையை நம்கண் முன் கொண்டு வந்து காட்டுகிறது. அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், சிக்கல்களையும், மிக எளிமையாக வெளிப்படுத்துகிறது. அவர்களுடைய அறியாமை, மூடநம்பிக்கை, இலகுவில் ஏமாந்து போகும் வெகுளித்தனம் அவர்கள் மீது சவாரி விடுவதற்கு எப்படி வாய்ப்பாகிறது என்பதை விபரிக்கிறது. சுருங்கச் சொன்னால் ரத்தமும் சதையுமான அவர்களுடைய வாழ்க்கை சத்தியத்தோடு படைக்கப்பட்டிருக்கிறது. இதனால் சில இடங்களில் பிரச்சாரமாகவும், கோஷங்களாவும் அவை தென்படக்கூடும். அதற்கு அவர்களைக் குறை கூற முடியுமா?

இத்தொகுப்பிலிருந்து சுகந்தி வெள்ளைய கவுண்டர் என்ற பெண் எழுத்தாளர் எழுதிய சிறுகதையை இங்கு தருகிறோம். இது அவரது முதற்சிறுகதை.



காலை சூரியன் முகிற் போர்வைக்குள் இருந்து சோம்பலாய் எட்டிப் பார்த்தான். தேயிலை தளிர்களில் வெண்பனி முத்துக்களை வானமங்கை இறைத்து விட்டிருந்தாள். சில்லென்று வீசிய காற்றில் யூக்கிலிப்பிட்ஸ் மரங்களின் வாசனையும் சேர்ந்து வீசியது.

''சரசு அப்ப நா மலைக்கு போறேன். ஒன்பது மணிக்கு தேத்தண்ணி கொண்டு வந்துரு. தம்பி பயலை தனியா வுட்டுட்டு நீ எங்கெட்டும் புள்ளைகளோடை வெளையாட போயிராத. வீட்டையும் கவனமா பாத்துக்க என்னா.''

இப்படி அடுக்கடுக்காய் வந்த கட்டளைகளுக்கு சரி சரி என்ற பாவனையில் தலையாட்டினாள் சரசு. சரசுக்கு ஐந்து வயதுதான் ஆகிறது. எண்ணையே கண்டிராத பரட்டைத் தலையும், எப்போதும் ஒழுகிக் கொண்டிருக்கும் மூக்கும் சரசு இன்னும் தனது தேவைகளை நிறைவேற்றி கொள்ள தெரியாத சின்னவள் என்பதை தெளிவாக்கி கொண்டிருந்தது.

''அப்ப நா போயிட்டு வாரேன். தேத்தண்ணி கொண்டு வர மறந்துறாத'' என்று கூறியபடி குறுக்குப்பாதையில் இறங்கி மலையை நோக்கி நடக்கத் தொடங்கினான் மூக்கன்.

தந்தையின் தலை எப்போதும் மறையும் என்று பார்த்துக் கொண்டிருந்த சரசு ''ஏ சின்னபொண்ணு வா மாங்கொட்ட எத்தி வெள்ளையாடலாம்'' என்று அடுத்த வீட்டுச் சிறுமியை அழைத்தாள்.

பாதையின் ஓரத்தில் தன்னிச்சையாய் வளர்ந்திருந்த மூக்குத்தி பூக்களும், மஞ்சள் பூக்களும் பனித்துளியில் ஒளிந்து பளிச்செனறிருந்தது. பாதையொட்டி சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும் ஓடையில் நண்டுகளும் தவளைகளும் துள்ளிக்கொண்டிருந்தன.

ஆனால், மூக்கையனின் மனமோ இவ்வற்புதக் காட்சிகளில் படியவில்லை. சோகம் அவன் மனதில் மண்டிக்கிடந்தது. தூரத்தே தெரிந்த தேயிலை மலையில் பெண்கள் கொழுந்து பறிப்பது தெரிந்தது. அப்பெண்களைப் பார்க்கும் போது தன் மனைவியின் முகமும் அவன் மனத்திரையில் வந்து நிழலாடியது.

ராமாயி அன்றும் வழமைபோல் காலையிலே எழுந்த கணவனின் தேவைகளை நிறைவேற்றி தனது பிள்ளைகளான சரசு, ராமு இருவரையும் பிள்ளை மடுவத்தில் விட்டுவிட்டு மலைக்குப் போனாள். மூக்கனுக்கு அன்று கவாத்து வெட்டும் வேலை. ஒரு நிரை வெட்டி அடுத்த நிரை தேயிலையை வெட்டுவதற்குக் குனிந்தபோது, அடுத்த நிரையில் கவாத்து வெட்டிக்கொண்டிருந்த ராமையா, ''மூக்கையா அண்ணே அங்க பாருங்க நம்ம சின்னதம்பி மாதிரி யாரோ பணிய ரோட்டுல ஓடி வாராங்க'' என்றான். ''அட நம்ம சின்னதம்பி தான், ஏ இப்படி மூச்சிரைக்க ஓடி வாரான்'' என்று கேள்விக் குறியோடு பணிய ரோட்டை நோக்கினான் மூக்கன்.

ஓடி வந்த சின்னதம்பி மூக்கன் அருகில் வந்து ''அண்ணே ஓங்க பெஞ்சாதி ஒம்பதா நம்பர் மலையில கொழுந்து எடுக்கையில மயங்கி விழுந்து பேச்சி மூச்சில்லாம கெடக்கையும் ஆளுகயெல்லா வீட்டுல தூக்கி வந்து போட்டு இருக்காங்க'' என்று மூச்சிரைக்கக் கூறினான்.

இதைக் கேட்ட மூக்கனுக்கு மனம் பதறியது. ''ஐயோ ராமாயிக்கு என்னாச்சு'' என்று அரற்றியபடி ஓட்டமும் நடையுமாக வீட்டையடைந்தான்.

அங்கே லயத்தில் மூக்கன் வீட்டு வாசலின் முன்னால் வேடிக்கை பார்ப்பதற்காக ஒரு கூட்டம் குழுமியிருந்தது. மூக்கன் அந்தக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு வீட்டினுள் நுழைந்தான். அங்கே ஸ்தோப்பு என்று சொல்லப்படும் முன்னறையில் ராமாயியை ஒரு சாக்கில் கிடத்தியிருந்தார்கள். மூக்கன் அவள் அருகில் சென்று அமர்ந்து கொண்டு ''ராமாயி ஒனக்கு என்னாச்சு? காலையில கூட நல்லாதானே இருந்த'' என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டான், ராமாயிக்கு மயக்கம் தெளிந்திருந்தாலும் கண்கள் விட்டத்தை வெளித்து நோக்கியபடி இருந்தன. வாய் ஏதேதோ உளறியபடி இருந்தது.

'அது ஒன்னுமில்லப்பா. ராமாயி எதையோ பாத்து பயந்துருக்கு. நம்ம பூசாரி முனியாண்டிய கூப்புட்டு விபூதி புடிச்சு போட்டா எல்லா சரியாயிரும்'' என்றாள் பக்கத்தில் அமர்ந்திருந்த நல்லம்மா கிழவி. சுற்றியிருந்த பெண்கள் கூட்டத்திலும் இந்தக் கருத்து ஆமோதிக்கப்பட்டது, மூக்கையனுக்கும் நல்லம்மா கிழவி சொல்வது சரியென்றே மனதுக்குப்பட்டது.

அன்று இரவு மூக்கையன் வீட்டில் ஓர் அறையில் பெண்களும் ஆண்களுமாக ஏழு எட்டு பேர் அமர்ந்திருந்தார்கள். நடுவில் ராமாயியை படுக்க வைத்திருந்தார்கள். முனியாண்டி பூசாரி அவள் அருகில் அமர்ந்து கொண்டு ''டுண், டுண், டுண்...'' என்ற தாள ஒலிக்கேற்ப உடுக்கையை அடித்தபடி தலையை முன்னும், பின்னும் வெட்டி வெட்டி இழுத்தும் சுழற்றியும் அருள் ஆடினார். அவரின் முன்னால் ஒரு தட்டில் விபூதியும் அதன் பக்கத்தில் எலுமிச்சைப்பழமும் இருந்தன.

முனியாண்டி பூசாரியின் அருள் ஆட்டத்தை சுற்றியிருந்தவர்கள் பயபக்தியோடு பார்த்துக்கொண்டிருந்தனர்.

நேரம் ஆக ஆக பூசாரியின் அருள் ஆட்டமும் உடுக்கை சத்தத்தின் வேகமும் கூடிக்கொண்டே சென்றது.

'பக்கத்தில் இருந்த சன்னாசிக் கிழவர் ''இப்படி ஆடிக்கிட்டிருந்தா எப்புடி நீ யாரு காடனா, மாடனா, வெள்ளாவி கருப்பனா இல்ல ரோத முனியா சொல்லு'' என்று அதட்டினார்.

ஏய் என்னையாடா யாருன்னு கேக்கிற? நா தாண்டா மாடசாமி'' என்ற அருள் ஆட்டத்தினூடே கூறினார் பூசாரி.

மூக்கனும் சுற்றியிருந்தோரும் தங்கள் குலதெய்வம் மாடசாமிதான் பூசாரியின் மேல் வந்திருக்கிறது என்று எண்ணிக்கொண்டனர்.

'' ஆ உன்ன பாத்துதான் ராமாயி பயந்துருக்கா நீ எதுக்காக இங்க வந்துருக்க. உனக்கு இஷ்டமானதை வாங்கிதாரன் கோழியா, கெடாவா, கள்ளா, சாராயமா, இல்ல பட்டுதுணியா என்னா வேணம் கேளு என்றார் மீண்டும் சன்னாசி கிழவர்.

'டேய் எனக்கு பச்சை முட்டையும், வெட கோழியும் படைச்சின்னா நா போய்யிருவண்டா! இல்னேனா இந்த பெண்ணை விட்டு நா கொண்ட இட சேரமாட்டெண்டா'' என்று கோபக்குரலோடு கூறியபடி பக்கத்தில் வைத்திருந்த எலுமிச்சை பழத்தை எடுத்து வாயில் வைத்து நரநரவென்று கடித்தார் பூசாரி.

உடனே சன்னாசி கிழவர், சாமி மலையேறப்போகுது என்று கூறியபடி விபூதி தட்டை எடுத்து பூசாரியிடம் கொடுக்க அவர் அருள் ஆடிக்கொண்டே விபூதியை பிடியாய் அள்ளி ராமாயின் தலையில் போட்டார். பின்னர் சிறிது சிறிதாக அவரின் அருள் ஆட்டம் தணிந்தது. சுற்றியிருந்தவர்களும் அவரிடம் விபூதி வாங்கிக் கொண்டார்கள்.


மற்ற நாட்களில் இந்நேரமெல்லாம் சாராய தவறணையில் போய் தண்ணி அடித்துவிட்டு அங்கேயே விழுந்துகிடக்கும் ஆண்களில் பூசாரியும் ஒருவர் என்று அங்கு கூடியிருந்தவர்கள் அறிந்தவர்களாயினும், இந்த சமயத்தில் பூசாரி அவர்கள் கண்ணுக்கு நடமாடும் தெய்வமாகத் தெரிந்தார்.

சன்னாசி கிழவர் தொண்டையை செருமிக்கொண்டு ''எம்ப்பா மூக்கா, நம்ம குலதெய்வம் மாடசாமிதா வந்திருக்குது. கேட்டத நாம குறைவில்லாம செஞ்சா அது பெரிய மனசு பண்ணிப் போயிரும். அதனால நாளைக்கு நீ டவுனுக்கு போயி பூசாரி எண்னென்ன சாமான் சொல்றாறோ அதெல்லாம் வாங்கிட்டு வந்துரு என்னா'' என்றார். பூசாரி சொல்லும் சாமான் பட்டியலில் சாராயமும் இருக்கும். அதில் நமக்கும் ஒரு பங்கு கிடைக்கும் என்று மனதினுள் நினைத்துக் கொண்டார்.

மூக்கனும் ''சரி அப்புடியே செஞ்சிறேன்'',என்றான்.

அடுத்த நாள் காலை, ''ராமாயி எழுந்திருச்சி இந்த தண்ணிய குடிபுள்ள நேத்துலேர்ந்து நீ ஒன்னுமே சாப்புடல'' என்று கூறியபடி ராமாயியை எழுப்பிய மூக்கனுக்கு தூக்கி வாரிப்போட்டது.

''ஐயோ ராமாயி எங்களையெல்லாம் அனாதையாக் கிட்டு போயிட்டியா'' . என்ற மூக்கனின் அலறல் அந்த லயத்தை ஒட்டியிருந்த தேயிலை மலைகளில் பட்டு எதிரொலித்தது. மூடநம்பிக்கை ராமாயியின் உயிரை மட்டும் குடித்ததோடு ஓய்ந்து விடுமா? காலம் தான் இதற்குப் பதில் சொல்லவேண்டும்.




**- சுகந்தி வெள்ளைய கவுண்டர்**




**நூல்: சுவாமி விபுலானந்தர்**
**- காலமும் கருத்தும்**

**நூலாசிரியர்: கலாநிதி சி.மௌனகுரு**


**வெளியீடு: விபுலம் வெளியீட்டாளர்**

**விலை: 50/=**

''சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு விழா பெரு விழாவாக நடந்த முடிந்துள்ளது. அறிந்தோருக்கு நினைவுகூரலாகவும், அறியாதோருக்கு அறிமுகமாகவும் அவ்விழா அமைந்தது விழா தந்த பயன்கள் பல.

சுவாமிகளின் வெளிவந்த, வராத எழுத்துக்களை மீண்டும் கொணரும் முயற்சி, சுவாமிகள் பற்றிய புதிய தகவல்கள் என்பன அவற்றுட் சில.

நூற்றாண்டு விழாவில் சுவாமிகளை அகவயமாகவும் (Subjective) , புறவயமாகவும் (Objective) நின்று அணுகிய எழுத்துக்களும் வெளியாயின. ஒரு வரலாற்று நாயகரை இவ்வண்ணம் அணுகும் இயல்பை நாம் வரலாற்றிலே காணுகின்றோம். சுவாமியவர்களைப் புறவயமாக அணுக எடுத்த முயற்சிகளின் பயனே இக்கட்டுரைகளாகும்'' என்கிறார் **நூலாசிரியர் கலாநிதி மௌனகுரு.**




**நூல்: தமிழ் மாறன் கட்டுரைகள்**
**- சர்வதேச அரசியல் சட்ட மனித உரிமைகள் சிந்தனைகள்**

**நூலாசிரியர்: வி.ரி.தமிழ்மாறன்**

**வெளியீடு: தர்ஷனா வெளியீட்டாளர்**

**விலை : 80/=**

'தற்காலத்தில் பலரையும் ஈர்ப்புச் செய்துவருவதும் சமூ[illegible]துக்குப் பயன் விளைவிப்பதுமான விடயங்களே இந்நூ[illegible] எடுத்தாளப்பட்டுள்ளன. பல்வேறுபட்ட கருத்தியல்கள் பற்றி இக்கட்டுரைகள் ஆராய்கின்றன. சர்வதேசச் சட்டம், மனித உரிமைகள் சட்டம், சர்வதேச அரசியலும் உறவுகளும் என்பவற்றிலான கட்டுரையாசிரியரின் இயல்பான ஈடுபாடு அவரை இவ்விதம் பக்கச் சார்பற்றும் நடுவுநிலை பிறழாத நிலைப்பாட்டினின்றும் எழுதத் தூண்டியிருக்கலாம். சுருக்கமாக அதேவேளை இலகுவான நடையில் விடயங்களைத் தந்துள்ளார்.''

**பேராசிரியர் பேட்ரம் பஸ்தியாம்பிள்ளை**



**நூல்: குரோட்டன் அழகு**
**- கவிதைத் தொகுப்பு**

**நூலாசிரியர்: டீன் கபூர்**

**வெளியீடு: முனைப்பு**

**விலை: 60/=**

''சகட்டுமேனிக்கு புகைப்படங்களைப் பிடித்துத் தள்ளும் ஓர் ஆரம்பநிலை புகைப்படப்பிடிப்பாளனை டீன்கபூர் எனக்கு ஞாபகப்படுத்துவது உண்டு. ஆரம்பநிலை புகைப்படப்பிடிப்பாளனின் துருதுருத்த விரல்கள் சும்மா இருப்பதில்லை. ஏன் எதற்கு என்ற காரண காரியங்களைத் தாண்டி அவன் இயங்குவதுண்டு. எதையேனும் காட்சிப்படுத்துதல் அவனுக்கு முக்கியமாகி விடுகின்றது. இலக்கு அவனுக்கு இரண்டாம் பட்சமாகிவிடுகின்றது. கருத்துப் புலப்படாத வெறும் காட்சிகளைக் கொண்ட புகைப்படங்கள் அவனிடமிருந்து கிடைக்கின்றன''

**உமாவரதராஜன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்றாம் ஈழ யுத்தமும் முஸ்லிம்களும்

## சில அவதானங்கள்

மூன்றாவது ஈழப்போரின் ஆரம்பம் வட கிழக்கினை தாயகமாகக் கொண்ட முஸ்லீம்களையும் ஏனைய பிரதேச முஸ்லீம்களையும் எவ்வாறு பாதித்துள்ளது என்பது பற்றிய ஒரு அவதானிப்பே இந்தச் சிறு கட்டுரையாகும்.

ஏற்கெனவே இடம்பெற்ற தமிழ் - முஸ்லீம் இனமோதல்களும், புலிகளின் 'விரட்டியடிப்பும்' ஏற்படுத்தியிருந்த பகைமைகளும், பரஸ்பர நம்பிக்கையீனங்களும் விலகிப் போகிற நிலை அண்மைக் காலங்களில் தென்பட்டது. 'சமாதானத்தீர்வு' வேண்டி அரசின் மீது அழுத்தம் முஸ்லீம்கள் பக்கமிருந்தும் பிரயோகிக்கப்பட்டது. 'முஸ்லீம்களின் ஏக கட்சியாகக் கணிக்கப்படுகிற முஸ்லீம் காங்கிரஸும் கூடுதல் அதிகாரத்துடனான சமஷ்டித் தீர்வினை ஆதரித்திருந்தது. இவ்வாறான சாதகப் போக்கில் ஏற்பட்ட திடீர்மாற்றம் எல்லாப் பக்கத்தினதும் தீர்வு முயற்சிகளை மீள்பரிசீலிக்கவைத்துள்ளது.

அரசபடைகளுத்கெதிரான புலிகளின் மூன்றாவது போர்தொடுப்பின் பின் கணிசமானளவு முஸ்லீம்கள் உயிர், உடைமைகள் இழந்தும், அச்சுறுத்தல்களுக்குள்ளாகியும் இருப்பது ஒரு வருத்தமான நிலையையே தோற்றுவிக்கிறது. அண்மையில் 98%ற்கும் அதிகமாக முஸ்லீம்களைக் கொண்ட புல்மோட்டைக் கிராமத்துச் சம்பவம் முஸ்லீம்களை பலவழிகளில் சிந்திக்க வைத்துள்ளது. 'ஒன்றுமேயற்றி'ருக்கும் சிறுபான்மை முஸ்லீம்களை புலிகள் பகடைக்காய்களாக்க எண்ணியுள்ளனரா? யுத்தப்போக்கை, முஸ்லீம்களை ஈடுபடுத்துவதன் மூலம் திசைதிருப்ப எண்ணியுள்ளனரா? முஸ்லீம் பகுதிகளிலிருந்து அரச படைகளைத் தாக்கியதன் விளைவு அப்பகுதி முஸ்லீம்களை இன்று புலம்பெயரச் செய்திருக்கிறது. மூன்றாம் போரில் முதலாவதாகப் புலம்பெயர்ந்தது முஸ்லீம்கள் என்பதும் இங்கு குறித்துக் காட்டப்படவேண்டியது.

இவ்வாறான தாக்குதல்களை செய்து தங்களது 'அரணை' பலப்படுத்திக் கொள்வதா? அல்லது முஸ்லீம்களின் ஆதரவு தங்களுக்கிருக்கிறது என்பதைக் காட்டி ..... அவர்களையும் யுத்தத்திற்கு முகம் கொடுக்கச் செய்வதா...? இந்த இரண்டாவது நிலைப்பாட்டையே அரசபடையும் ஊகித்து தாக்கியிருப்பதுபோல் படுகிறது. அது போதாதென்று தென்னிலங்கை இனவாதப் பத்திரிகைகள் சில "முஸ்லீம்களிடையே சில ஆயுதக்குழுக்கள்" தோன்றியுள்ளதாக விஷமப்பிரச்சாரத்திலும் ஈடுபட்டுள்ளன.

மூதூர்ப்பகுதி பள்ளிவாசலொன்றுக்கு ஆயுதங்களுடன் சென்ற சில புலி உறுப்பினர்கள் "முன்னரைப்போல் ஏதும் நடந்து, தமிழர்களைத் தாக்கினால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்கவரும், இப்போது எல்லாமே எங்கள் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. இதை எல்லாப் பள்ளிகளிலும் அறிவியுங்கள்..." என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். அவ்வூர்ப்பகுதி முஸ்லீம்களை தொப்பி அணிந்து நடமாடுமாறு இராணுவமும் பணித்துள்ளது. புலிகள் சிலவேளை தொப்பி அணிந்து தாக்கினால் திருப்பித்தாக்கப்படுவது முஸ்லீம்களாகவே இருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. கொழும்பில் முஸ்லீம் பெண்ணைப் போல் உடையணிந்த ஒரு தமிழ் யுவதியை கைத்துப்பாக்கியுடன் கைது செய்திருப்பதாகவும் ஓர் ஊர்ஜிதமற்ற செய்தி வெளிவந்துள்ளது.



முஸ்லீம்களைப் பயன்படுத்தி புலிகள் எவ்வாறு ஓர் அதிருப்திநிலையை ஏற்படுத்துகின்றனரோ, அவ்வாறே இராணுவத்தினரும் முஸ்லீம்களைப் பயன்படுத்துகின்றனர். தமிழ் மக்களையும், தமிழ்க் கிராமங்களையும் தாக்குகிற சில அடாவடித்தனமான செயல்களுக்காக் முஸ்லீம் பிரதேசங்களிலுள்ள முஸ்லீம் பொலிஸாரை முன்னுக்கு அனுப்பிவிடுவதாகத் தெரிகிறது.

ஏறாவூர்ப் பொலிஸ் நிலையததைச் சேர்ந்த முஸ்லீம் பொலிஸாரே தமிழ்க்கிராமமொன்றைத் தாக்கியதாக அண்மையில் வெளிவந்த செய்தியை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

கிழக்கு மாகாணத்தின் சில பகுதுகளில் வழமைக்குத் திரும்பியிருந்த சில விடயங்கள் மீண்டும் பழைய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது, தமிழ்ப் பிரதேசங்களூடாக ஏனைய பிரதேசங்களுக்கு தொழில் காரணமாகப் பயணம் செய்யும் முஸ்லீம்கள் பழையபடி வாரத்தில் ஓரிரு நாட்களே இராணுவ பாதுகாப்புடன் பயணம் செய்யவேண்டிய இக்கட்டான நிலைக்கு உள்ளாகியுள்ளனர். இவ்வாறான ஒரு நிலை தமிழ் மக்களுக்கு இன்னும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் போரினால் ஏற்பட்டுள்ள ஒரு வகை அச்ச உணர்வின் இன்னொரு பிரதிபலிப்பாக கிழக்குப் பல்கலைக்கழ விடயத்தைக் குறிப்பிடலாம்: வந்தாறுமூலைக்கு மாற்றப்பட்டிருக்கும் பீடங்களுக்கு விரிவுரைகளுக்குச் செல்ல முஸ்லீம் மாணவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர் புலிகளால் ஏற்பட்ட அச்ச உணர்வு, இதற்குக்காரணம். அண்மைக்காலத்தில் ஏற்பட்ட ஒரு புரிந்துணர்வால் இவ் அச்ச உணர்வு தகர்ந்த நிலையிலிருந்தது. எனினும் மேற்கூறியது போன்ற சில வேண்டாத நிகழ்வுகள் முஸ்லீம்கள் தொடர்பான புலிகளது நிலைப்பாட்டை மீண்டும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

பழைய வரலாற்று வடுக்கள் இன்னும் ஆறாத நிலையில் முஸ்லீம்களைப் பாதிக்கின்ற புதிய உத்திகள் மீண்டும் மீண்டும் பல அப்பாவி உயிர்களையே காவு கொள்ளும்.

புலிகளாயினும் சரி, அரச படைகளாயினும் சரி அப்பாவி மக்களை பலிகொள்கிற அல்லது பலிகொடுக்கிற நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும்.

இதை எழுதிக்கொண்டிருக்கிற போது மூதூரிலிருந்து கிடைத்த செய்திகளும் கவலை தருகின்றன. புலிகள் அறிவித்திருப்பது போல் "இந்த யுத்தம் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையேதான்..." இராணுவத்தைச் சேர்ந்தவர் என்ற நிலையில் ஒருவர் கொல்லப்பட, முஸ்லீமைக் கொன்றுவிட்டார்கள் என்ற நிலையில் பதட்டம் ஏற்பட்டுள்ளது. வேண்டாத இதனை தொடக்கி வைத்தவர்கள் எண்ணிக்கையற்ற அப்பாவி மக்களின் உயிர்களுக்கு எவ்வித உத்தரவாதமுமளிக்கப் போவதில்லை.

மூன்றாம் ஈழயுத்தத்தின் பின்னான நிகழ்வுகள் முஸ்லீம் மக்களில் ஏற்படுத்தியிருக்கும் ஐயப்பாடுகள் தீர்க்கப்படவேண்டியது போராட்டச் சூழலுக்கு ஒரு திருப்புமுனையாக அமையும். இல்லையேல் அப்பாவிகளைக் காவுகொடுக்கிற யுத்தம் எந்தத் தீர்வுகளுமின்றியே அந்நியப்பட்டுப்போகலாம்.

இது சம்பந்தமான் விடயத்தில் எல்லாத்தரப்பினரும் நன்கு யோசித்துச் செயலாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

பாதுஷா

# பாலம்

மூன்றாம் ஈழ யுத்தம் ஆரம்பித்த பின் முதன் முறையாக ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க கடந்த மே 22ம் திகதி தொலைக் காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். இப்பத்தியை எழுதப்பேனாவைக் கையிலெடுத்த போது நாட்டு மக்களுக்குச் செய்தி விடுப்பதற்காக ரூபவாஹினியில் பிற்பகல் 10.20 மணிக்குத் தோன்றவிருப்பதாக அறிவிப்பு வந்ததால், இதனை எழுத முன் அந்த உரையை கேட்டுவிட்டு எழுதுவதாக முடிவெடுத்தேன்.

இந்த உரையினைப்பற்றி பேசுவதற்கு முன்பாக, முதலிலேயே கூறவேண்டிய ஒன்று உண்டு. அதாவது, நாடொன்றின் அரச தலைவரொருவர் நாட்டு மக்களுக்குச் செய்தி விடுப்பது, மக்கள் துயில் கொள்ளும் நேரத்திலன்றி, மக்கள் விழித்திருக்கும் நேரத்திலாக இருக்க வேண்டும் என்பதாகும்.

எவ்வாறெனினும், ஜனாதிபதி விடுத்த செய்தி ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட செய்தியாக இல்லாதபோதும், நாட்டு மக்களுக்கு விடுத்த அச்செய்தியைச் செவிமடுத்த போது எனக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (S.L.F.P) 1994 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நுகேகொடையில் நடத்திய பொதுக் கூட்டமொன்றில் முன் வைத்த சுலோகமொன்று ஞாபகத்திற்கு வந்தது.

அதாவது "பயஙகரவாதத்திற்கு யுத்தம்! இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு!"

என்பதே அதுவாகும். அந்தப் பிரபல்யமான சுலோகத்தை அன்று முன்நின்று வைத்தவர்களது நிலைக்கே ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க இன்று வந்து சேர்ந்துள்ளார். ஆனால் தனது பேச்சில் அதனை மறைத்துக் கொண்டே 'எமது போராட்டம் சமாதானத்திற்கானது" எனவும், "தமிழ் மக்களின் உரிமைகளுக்கானது" எனவும் தெரிவிக்கிறார்.

அவரது பேச்சைப் பார்த்தால், இதுவரை காலமும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் தொடர்பாகச் செயற்பட்ட தமிழ்க்கட்சிகள், இயக்கங்கள் அனைத்தையும் விட, இந்நாட்டுத் தமிழ், முஸ்லீம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கப் போவது அரசாங்கம் அன்றிச் சந்திரிகா எனும் காரணியே (Factor) என்றுதான் தோன்றுகிறது. வெளிப்பார்வைக்கு எல்லாம் மிகவும் திருப்திகரமானதாக தோன்றினாலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியின் உள்ளடக்கத்தை நுணுகி ஆராய்ந்து பார்த்தால் உண்மையில் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு அரசாங்கத்திலோ அல்லது இந்தச்செய்தியிலோ வழங்கப்பட்டுள்ள இடம் மிகவும் அற்ப சொற்பமானதே ஆகும்.

இராணுவத்தினைப் பிரதானப்படுத்திய ஜனாதிபதியின் இந்தச் செய்தியில் அவர் முக்கியமாக அழைப்பு விடுத்து விளித்தது, போர் நாட்டங்கொண்டவர்களையே அன்றி தமிழ் மக்களையோ அவர்களது கட்சிகளையோ அல்ல! ஒருவேளை வடபகுதியில் இராணுவம் போர் புரியும் போது சாதாரண அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டால் அவர்களின் சிதைந்த உடல்களை எண்ணிக் கணக்கிடுவதுதான் இக்கட்சிகளது வேலை என்று அவர் கருதினாரோ என்னவோ! எவ்வாறாயினும் தமிழ்க் கட்சிகளதும், இயக்கங்களதும் பிரதிநிதிகள் சேர்ந்து ஆணைக்குழு ஒன்றை அமைக்க முடிவெடுத்துள்ளன.

இப்போதுள்ள யுத்தம் ஒருவகை போட்டியாகவே நடத்தப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தானே தமிழ் மக்களின் ஏக



பிரதிநிதிகள் எனக்கூறுகிறது. அரசாங்கமோ, தானே தமிழ் மக்களின் பாதுகாவலன் எனத்தெரிவிக்கிறது. இந்த நிலைமை இப்போது மிக வளர்ச்சியடைந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அன்று, தமிழ் மக்களைக் கேடயமாகப் பாவித்தது. அரசாங்கமோ இன்று தமிழ் மக்களைத் தனது கேடயமாகப் பாவிக்கிறது.

இன்னொரு புறம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி பொதுச் செயலாளர் (தலைவர்) டக்ளஸ் தேவானந்தா ஏனைய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார். இந்நாட்டில் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் நிலை நிறுத்தவே இச்சந்திப்பு எனக் கூறப்படுகிறது. அவர்கள் தமிழ்ப் படைப் பிரிவொன்றை (Tamil regiment) உருவாக்குவது தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளனர். இவ்வாறு இலங்கை இராணுவத்தினுள் தமிழ்ப் படைப்பிரிவொன்றைக் கட்டியெழுப்புவதென்ற கோரிக்கையின் உள்நோக்கம், அரச அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்வதற்காக என்பதைவிடத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்தொழிப்பதே என்பது வெளிப்படை. ஆனால் இந்தியாவோ அல்லது பிற நாடுகளோ இன அடிப்படையில் படைப்பிரிவுகளை இவ்வாறான குறுகிய நோக்கங்களுடன் அமைக்கவில்லை. அந்நாடுகள் அரசை மீள் வடிவு அமைப்புச் (Re struture) செய்யும் நோக்கிலேயே இனரீதியிலான படைப்பிரிவுகளைக் கட்டியெழுப்பின.

எவ்வாறெனினும், அநேக தமிழ்க் கட்சிகள், இயக்கங்களுக்கு உள்ள சிக்கல், அவர்களுக்கு தம்மால் ஒரு பிரபாகரனாக ஆக முடியவில்லையே என்பதால் ஏற்பட்டுள்ள மனப்பிறழ்வாகும்! (பைத்தியமாகும்)

அதனை அவர்கள் ஓரிரு தடவைகள் அல்ல. தமது நடவடிக்கைகளால் ஆயிரம் தடவைகளுக்கு மேலாக நிரூபித்துள்ளனர். இதற்கு அண்மையில் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற சம்பவமொன்று இன்னொரு புது உதாரணம் ஆகும். பொதுவாக உயர் நீதிமன்றத்தினுள் நுழையும் அனைவரும் சோதனையிடப்பட்டே உட்செல்ல அனுமதிக்கப்படுவது வழக்கம். அண்மையில் உயர்நீதிமன்றம் சென்ற டக்களஸ் தேவானந்தாவையும் அவருடன் கூடச் சென்றவர்களையும் சோதனையிட்டதற்காக உயர் நீதிமன்றப் பாதுகாப்பு அதிகாரிகள், டக்ளஸ் தேவானந்தாவுடன் கூடச்சென்றவர்களிடமிருந்து அடி வாங்க வேண்டியிருந்தது.

பிரபாகரனிற்கு "ஜனநாயகத்துடன் சமாதானம்" பற்றிப் போதிக்கும் கட்சித் தலைவர் ஒருவர் தென் பகுதியிலுள்ள நீதிமன்றம் ஒன்றினுள் நடந்து கொண்ட விதமே இதுவாகும்.

பிரபாகரன் அரசாங்கத்துடன் செய்து கொண்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஒரு தலைப்பட்சமாக முடிவுக்குக் கொண்டு வந்து, மீண்டும் யுத்தம் ஒன்றை நோக்கிச் சென்றுள்ளார். அவரது எதிர்கால நடவடிக்கைகள் எப்படி அமையப் போகின்றன என்று நமக்குத் தெரியாது. ஆனாலும் பிரபாகரன் இதுவரை புரிந்த யுத்தங்களைவிடப் பாரியளவு மக்கள் அழிவுக் காலகட்டம் ஒன்றிற்கான அறிகுறிகள் தற்போதே தெரிய வந்துள்ளன. இனப்பிரச்சினை தொடர்பாக, பிரபாகரன் போன்ற போர் நாட்டங்கொண்ட ஒருவருக்கு மாற்று வேலைத்திட்டம் ஒன்று (Alternate programme) இல்லை. அவருக்கு இருப்பதெல்லாம் போர் உணர்வுகள் கலந்த, உரிமைகளை வென்றெடுக்கும் சிந்தனைக் குவியல் ஒன்று மட்டுமே ஆகும். அப்போர் நாட்டத்தைத் தோல்வியுறச் செய்யும் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் பதில் உபாயகமாகவுள்ளது யுத்தமும், அரசியல் தீர்வும் ஆகும். அவர் கூறியபடி இன்னும் இரண்டு, மூன்று வாரங்களில் அரசியல் தீர்வு ஒன்று வெளிவரவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் அம்மாற்று வேலைத்திட்டத்திற்கு பதிலான பிரபாகரனின் தீர்வானது போர் நாட்டங் கொண்டதாகவே இருக்குமென நம்புவதற்கே அதிக இடமுண்டு. அவ்வாறு நடைபெறுமாயின்...... பிரபாகரனது வரலாறு அவரை பாசிசவாதியாகவா? அல்லது தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடியவராகவா? எழுதப்படும் என்பது எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும்.

நிஷாந்த எழுதுவது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பத்திரிகையாளர்கள் கைது! பிரேமதாச காலத்தின் மீள் வருகை?



மே மாதம் 24ம் திகதி 'ஹிரு' பத்திரிகையாளர்கள் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார்கள்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான 'அலரிமாளிகையில்' 5.0 ஏவுகணைகளை (Five Zero Miisile) பொருத்தப்பட்டிருக்கும் செய்தி அறிந்த ஹிரு பத்திரிகையாளர்கள் 24ம் திகதி மதியம் 12 மணியளவில் அந்த இடம் நோக்கிச் சென்றனர். பத்திரிகையாளர் அடையாள அட்டையையும்கொடுத்தாகிவிட்டது.

அந்த அடையாள அட்டையைப் பார்த்த அதிகாரி ''இந்த அடையாள அட்டையை யார் கணக்கில் எடுக்கிறது. யாரும் இது மாதிரி செய்யலாமே'' என்றார்.

சில மணித்தியாலங்களின் பின் இவர்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார்கள். கமராவிலிருந்த பிலிம் சுருளும் பொலிஸாரால் கழற்றி எறியப்பட்டது.

யாளர்கள் சிசிர யாபாவும், சுசந்தவும் அலரி மாளிகையின் பின்புறத்தில் அமைந்துள்ள டுப்ளிகேஷன் வீதிவழியாகச் சென்று அங்கிருந்து பாதுகாப்பு அதிகாரி ஒருவரிடம் புகைப்படமெடுப்பதற்கு அனுமதி கேட்டிருந்தனர்.

''அனுமதியெடுக்க உள்ளே போக வேண்டும்'' வாருங்கள் எனக்கூறி அழைத்துச் சென்ற அவ்வதிகாரி அவர்களை உள்ளே அழைத்துச் சென்று விசாரணை செய்திருக்கின்றார்.

''எந்தப் பத்திரிகை.... ஏன் புகைப்படம் எடுக்கவேண்டும்'' என்ற அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த பிறகு, இன்னொரு அதிகாரி அங்கு வந்து ''அந்த கெமராவை இப்படிக்கொடு...'' என பலாத்காரமாக பறித்துச் சென்றார். அந்த அதிகாரி அங்கிருந்து நகர்ந்ததும் இன்னொருவர் வந்து ஊர், பேர் என்பவற்றை விசாரிக்கத் தொடங்கினார். பொலிஸாரிடம் அரசாங்க தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பத்திரிகை

இச்சம்பவம் தொடர்பாக ஹிருவினால் சர்வதேச உள்நாட்டு, வெளிநாட்டு மனித உரிமை நிறுவனங்கள், பத்திரிகைச் சுதந்திரம் தொடர்பான நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அறிவிக்கப்பட்டு, அவர்கள் கொடுத்த அழுத்தத்தினால் மாலை 7.00 மணியளவில் இருவரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் சில நிபந்தனைகள். எப்போது அழைத்தாலும் பொலிஸ் நிலையத்துக்கு சமூகமளித்து அறிக்கை தர வேண்டும். நீதிமன்ற ஆணை கிடைக்கப்பட்டால் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.

இப்பத்திரிகையாளர்கள் தங்களது பத்திரிகையாளர் அடையாள அட்டையைக் காட்டி அறிமுகப்படுத்தியிருக்கின்றனர். தங்களது தேவையையும் தெளிவுபடுத்தியிருக்கின்றனர் என்றபோதும் ஏமாற்றி அழைத்துச் சென்று தடுத்து வைத்ததுமில்லாமல் கமராவைப் பறித்து அதிலிருந்து பிலிம் சுருளை கழற்றி வீசி தங்கள் அடாவடித்தனத்தையும் காட்டியிருக்கின்றனர். இந்த சம்பவத்தைப் பற்றி கைது செய்யப்பட்டிருந்த ''ஹிரு'' பத்திரிகையாளர் 'சிசிர யாபா' சொன்னது நினைவுக்கு வருகிறது.

''நாங்கள் சிங்களவர் என்ற போதும் பத்திரிகையாளராக இல்லாமலிருந்தால் நிலைமை வேறு. பத்திரிகையாளராக இருந்தாலும் தமிழ் இனத்தவராக இருந்தால் நிலைமை எல்லாவற்றையும் விட மோசமாக இருந்திருக்கும். இந்நிலைமை எமக்கு பிரேமதாசாவின் காலத்தை நினைவு படுத்துகிறது. யுத்தத்தை காரணம் காட்டி பத்திரிகையாளர்களை சிறைக்கூட்டுக்குத் தள்ளுவதற்கு அரசாங்கத்துக்கு உரிமை இல்லை. அப்படித்தான் முடிவு செய்தால் பத்திரிகை சுதந்திரத்தின் பேரால் நாங்கள் பலமாக அதனை எதிர்க்கத் தயார்!

# முகத்துவாரம்: கடற்கரையில் கிடந்த சடலம்!

மே 19ம் திகதி வெள்ளிக்கிழமை முகத்துவாரம் கடற்கரையில் கால்கள் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு தமிழ் இளைஞரின் சடலம் காணப்பட்டது. இவ்விளைஞர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஜெயந்தன் (வயது 23) என இனம் காணப்பட்டுள்ளார். குடும்பத்தில் ஒரே மகனான இவர். கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டப்படிப்பை படித்துக் கொண்டிருந்த மாணவராவார்.

நீலநிற கோடுகள் போட்ட ஹிப்ஸ் சாரம் அணிந்திருக்கக் காணப்பட்ட இவ்விளைஞரின் அதே ஹிப்ஸ் சாறத்தினால் கிழிக்கப்பட்ட துண்டினால் கால்கள் கட்டப்பட்டிருந்தது. இவரின் தலையின் பின்புறமாகவே சுடப்பட்டிருக்கிறார். வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையிலேயே இவர் முகத்துவாரம் கடற்கரைக்கு கொண்டு வந்து சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் எனக்கருதப்படுகிறது. ஏனெனில் காலை வேளையிலும் இவரின் தலையில் பின்புறம் ர்த்தம் கசிந்து கொண்டிருந்தது.

அதுமட்டுமன்றி அதிகாலை வேளையிலேயே அவ்விடத்தில் துப்பாக்கி சத்தங்களும் அம்மா என்ற சத்தமுமே கேட்டதாக அயலில் உள்ள பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். இதைவிட இவ்விளைஞரின் உடம்பெங்கும் நாலைந்து நாட்களுக்கு முன்னர் தாக்கப்பட்ட தழும்புகளும் காணப்பட்டன.

இவ்விளைஞர் சுட்டுக்கொல்லப்படுவதற்கு முன் 13ம் திகதி சிவில் உடைதரித்து வந்தவர்கள் இவரது வீட்டைத்தட்டி இன்னொரு விலாசத்தை கேட்டிருக்கிறார்கள். அப்படியே வீட்டுக்குள் புகுந்து சோதனை செய்துவிட்டு போனதன் பின் 10 நிமிடங்கள் கழித்து மீண்டும் வந்து இவ்விளைஞனை அழைத்துச் சென்றதாகவும் தெரிகிறது. வந்தவர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் என்றும் இவர் ஏதாவது ஒரு தமிழ் இயக்கமொன்றைச் சேர்ந்தவராக இருக்கலாமென்றும் கூறப்படுகின்றது.

இம்முகத்துவாரம் கடற்கரைப் பிரதேசம் ஐ.தே.க. அரசின் காலத்தின் போது சிங்கள இளைஞர் யுவதிகளின் கறுப்புத்துணியினால் கண்களும் கைகளும் கட்டப்பட்ட நூற்றுக்கணக்கான பிரேதங்களை உள்வாங்கிய பிரதேசம் என்பதை யாரும் இலகுவாய் மறந்திருக்கமாட்டார்கள்.

இந்தப் புதிய அரசு பதவியேற்பதற்கு சில நாட்களுக்கு முன்னரும் ஆண்உறுப்பு சிதைக்கப்பட்டு கண்கள் கட்டப்பட்டு சுடப்பட்ட ஒரு தமிழ் இளைஞரின் உடல் பல நாட்களாக இக்கடற்கரையில் கிடக்கக் காணப்பட்டது தெரிந்ததே.

மதிப்புக்குரிய தமிழ் இயக்கங்களுக்கும் இம் முகத்துவாரம் கடற்கரையின் மகிமை தெரியும். 1989 இல் கோட்டைக் கல்லாறு ரகுவில் தொடங்கி இன்னும் பல தமிழ் இளைஞர்கள் இயக்கங்களினால் இக்கடற்கரையில் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முந்திய காலத்தில் சிவில் உடையில் வருவோரால் பல இளைஞர்கள் தூக்கிச் செல்லப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் நீலிக்கண்ணீர் வடிக்கும் சந்திரிகா அரசு இன்று தொட்ங்கியுள்ள இக்கொலைக்கு என்ன சொல்லப்போகிறது. இது தான் கொழும்பில் ஆரம்பமோ?

# தமிழ்ப் பத்திரிகையாளனா? ஓடடா!

என்.சரவணன்

''பத்திரிகையா? உமக்கு இதுபற்றி சொன்னது யார்? இங்கொன்றையும் படமெடுக்க விடமுடியாது. போ... போ... கொஞ்சம் நில்! (பக்கத்திலிருந்த இன்னொரு பொலிஸ் அதிகாரியைப்பார்த்து) இவனை விசாரித்து தகவல்களை எடுத்துவிட்டு அனுப்புங்கள்....''

இப்படித்தான் ஒரு கொலைச் சம்பவம் பற்றி தகவல் சேகரிக்கச் சென்றிருந்த இடத்தில் முகத்துவார பொலிஸ் பொறுப்பதிகாரி ஜயதிலக நடந்து கொண்டார்.

மே மாதம் 19 ம்திகதி முற்பகல் 1.30 மணியளவில் சரிநிகர் அலுவலகத்துக்கு எமது வாசகர் ஒருவர் தொலைபேசி மூலம், முகத்துவார கடற்கரையில் ஒரு தமிழ் இளைஞன் சுடப்பட்டு இறந்திருப்பதாகவும் சடலம் இன்னமும் அதே இடத்தில் இருப்பதாகவும், அரச படையினராலேயே இது நடந்திருக்கலாம் என்றும் உடனடியாக வந்து மேலதிக தகவல்களைப் பெற முயற்சிக்குமாறும் வேண்டினார்.

சம்பவ இடத்துக்குப் போவதற்கு முன்னர் ஹிரு பத்திரிகைக்கும் இச்செய்தி பற்றி அறிவித்த போது அவர்கள் தங்கள் நிருபர்கள் எவரும் அலுவலகத்தில் இல்லை என்றும் முடிந்தால் நான் எடுக்கும் தகவல்கள் புகைப்படங்களை தங்களுக்கும் தருமாறும் கேட்டிருந்தனர்.

சரிநிகரின் சகோதர சிங்களப் பத்திரிகையான யுக்திய பத்திரிகையின் ஆசிரியரையும் கண்டு இச்செய்தி பற்றி அறிவித்தேன். அவரும் தங்களுக்கு இதுபற்றி முன்னமே தெரிந்திருந்தால் இன்னும் சுகமாக இருந்திருக்குமென்றும் தான் அலுவலகத்துக்கு உடனடியாக இதுபற்றி அறிவிப்பதாகவும் கூறினார்.

நான் முகத்துவாரம் சென்றடைந்த போது மாலை 3.00 மணி முகத்துவாரத்தில் காக்கை தீவுக் கடற்கரைக்குச் சென்று சடலம் இருந்த இடத்தை அடைந்த போது அங்கு ஏற்கெனவே வந்திருந்த பொலிஸார் மூவர் சடலத்தை பரிசோதித்துக்கொண்டிருந்தனர். பொதுமக்கள் குழுமி நின்றிருந்தனர்.

பின் தலையில் சுடப்பட்டிருந்த அச்சடலத்தின் கால்கள் சாரத்துணியால் கட்டப்பட்டிருந்தது. உடம்பில் சாரம் மட்டுமே அணிந்த கறுத்த தடித்த உடலாக அது இருந்தது. தலையைச் சூழ சிதறிய இரத்தக் கறைகள் மண்ணோடு ஒட்டியிருந்தது. வாய் திறந்து மூக்கிலிருந்து இரத்தம் வெளியில் தள்ளக் காணப்பட்டது.

நான் அங்கிருந்த பொலிஸ் அதிகாரியிடம் எனது பத்திரிகையாளர் அடையாள அட்



டையைக்காட்டி என்னை அறிமுகப்படுத்தி நான் இச்சம்பவம் பற்றி தகவல் சேகரிப்பதற்காகவும் புகைப்படம் பிடிக்கவந்திருப்பதாகவும் கூறினேன்.

அந்த பொலிஸ் அதிகாரியோ

''யார் இங்கு உம்மை வரச்சொன்னது? எப்படி இந்த தகவல் கிடைத்தது'' எனக்கேட்டார்.

''எங்களுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பேரிலேயே இங்கு வந்திருக்கிறோம்.....''

''மஜிஸ்ரேட்டில் இருந்து வந்து விசாரணை செய்யும் வரை இங்கு ஒன்றையும் செய்ய விட முடியாது.''

அப்படியான சம்பிரதாயங்கள் ஒன்றும் இல்லை என்பதை நான் உணர்வேன். ஆயினும் அதை அந்த இடத்தில் விவாதித்தேனானால் எனது கடமைக்கு அது தடையாக அமையலாம் என்ற நிலையில்

''பரவாயில்லை மஜிஸ்ரேட்டார் வரும்வரை நான் காத்திருக்கிறேன்'' என்று கூறிக் காத்திருக்க ஆரம்பித்தேன்.

நேரம் போய்க்கொண்டிருந்தது. மணி 3.45 அந்த கடற்கரை மணலில் புழுதிபறக்க வேகமாக வந்து நின்றது ஒரு பஜிரோ. அதிலிருந்து வெறித்தனமாக இறங்கினார் முகத்துவாரப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜயதிலக. இறங்கிய வேகத்திலேயே

''உங்களுக்கெல்லாம் இங்கு என்னவேலை ஓடுங்கடா எல்லோரும்'' என்று மூர்க்கமாகப் பாய்ந்தார்.

குழுமியிருந்த எல்லோரும் அந்த இடத்தை விட்டு ஓட்டமெடுத்தனர்; நடுவில் இருந்த என்னைத்தவிர. நான் சுற்றிலும் பார்த்தேன். அந்த இடத்தில் பொலிஸாரை விட நான் மட்டுமே இருந்தேன்.

''இவன் யார் இங்கிருக்கிறான்''

என்று மற்றப் பொலிஸ் அதிகாரியைப் பார்த்து அவர் வினாவினார்.

அந்த அதிகாரியும்

''யாரோ பத்திரிகையாளராம். தகவல் சேகரிக்க வந்துள்ளாராம்''

என்றார்.

பொறுப்பதிகாரி, என்னை நோக்கி

'உம்மை யார் இங்க வரச்சொன்னது? இங்கொன்றையும் படமெடுக்க விடமுடியாது. போ!... போ!... கொஞ்சம் நில்! உனது பெயர் என்ன?

''சரவணன்''

''எங்கே அடையாள அட்டையைக் காட்டு''

அரசாங்கத் தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பத்திரிகையாளர் அடையாள அட்டையைக் காட்டினேன்

'இவனிடமிருந்து வாக்குமூலமொன்றை எடுத்து விட்டனுப்பு'' என்று மற்ற அதிகாரியை நோக்கி ஆணையிட்டார்.

அவர் என்னிடம் மீண்டும் அடையாள அட்டையை பெற்றுக்கொண்டு

''என். சரவணன் என்றால் 'என்'னுக்கு அர்த்தமென்ன?''


''நடராசா''

''உனது விலாசத்தை சொல்லு''

அஃதயும் கூறினேன்.

''சரிபோ'' என்றார் அந்த அதிகாரி

நான் அவரை நோக்கி கூறினேன்:



''நான் இங்கு நடந்த சம்பவத்தைப் பற்றி தகவல் சேகரிக்க வந்தேன். ஆனால் எனது கடமையை செய்யவும் விடாத நீங்கள் என்னிடமிருந்து எனது தனிப்பட்ட தகவல்களை எடுத்துவிட்டீர்கள்'' என்றேன். அதற்கு அந்த அதிகாரி ஏளனத்துடனும் ஆத்திரமாகவும்

''ஆங்....... என்ன சொன்னீர்?''

என்றார்

நான் மீண்டும் சொன்னதைச் சொல்ல முடியாத மௌனியாக, எனக்கு நடந்ததை எண்ணி ஆத்திரமடைந்த போதும், எனது இயலாமையை நினைத்து வருந்திக்கொண்டே இடத்தைவிட்டு நடக்கத்தொடங்கினேன்.

தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சனங்களில் சிலர் என்னிடம் நடந்ததை விசாரித்தனர். நான் சுருக்கமாக கூறிய போது,

''பத்திரிகையாளரான உங்களுக்கே இந்தக் கதியென்றால் எங்கள் நிலைமையை எண்ணிப்பாருங்கள்'' என்றார் ஒருவர்.

நான் தனியாக வந்திருந்ததும். நான் தமிழனென்பதையும் விளங்கிக்கொண்ட அவர்களுக்கு ஏறிமிதிப்பதில் கஷ்டமாக இருக்கவில்லை என்பதில் சந்தேகமே இல்லை. சரிநிகருக்கு மாத்திரமல்ல இலங்கையில் சுதந்திரமாக இயங்க விரும்பும் சகல தமிழ்ப்பத்திரிகையாளர்களும் எதிர்நோக்கும் நிலைமை இதுதான்.

யுத்தகால செய்திகள் எதனையும் பத்திரிகைகளுக்கு வெளியிட கூடாது எனும் தீர்மானத்தை கொண்டு வர முயற்சி எடுத்து வரும் இந்த சூழ்நிலையிலேயே மேற்படி தகவல் சேகரிப்புக்கு இடைஞ்சலாக பொலிஸ் அதிகாரிகள் நடந்த கொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

என்னை எனது கடமையை செய்யவும் விடாமல் எனது தனிப்பட்ட தகவல்களை அதிகார மிரட்டலின் மூலமாகவே பெற்றிருக்கிறார்கள். குறிப்பிட்ட அந்தப் பொலிஸ் அதிகாரிகளின் வெறித்தனமான செய்கைகளின் மூலம் எனது தனிப்பட்ட தகவல்களை பெற்றுக்கொண்டது எனது உயிருக்கான அச்சுறுத்தலாகக் கருதுகிறேன். அவர்கள் என்னை விசாரித்த தொனி. தங்களால்

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையக மக்கள் முன்னணிக்கும் புரியாத கணக்கு!
## (50%+25%<75%)

"ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி விடயத்தில் சரியான தீர்வைத்தராவிட்டால் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்வோம்"

இவ்வாறு பல தடவைகள் அறிக்கை விட்டுக் கொண்டிருந்தவர் மலையக மக்கள் முன்னணி தலைவரும் பிரதிஅமைச்சருமான சந்திரசேகரன்.

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி மலையக மக்களுக்காகவே ஜேர்மன் அரசாங்கம் கட்டித்தந்த கல்லூரி. பிரேமதாச காலத்தின் போது இத மலையக மக்களுக்கு 50% அனுமதி போதுமானதென்றும், 25% சிங்கள மாணவர்களுக்கும், 25% தமிழ் பேசும் மாணவர்களுக்கும் என்றும் வகுக்கப்பட்டது. மலையக மக்களுக்கென்று ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி மட்டுமே உள்ளது குறிப்பிடத்தக்கது. அதுவும் அரசாங்கம் கட்டித்தந்ததல்ல.

மாணவர்கள் மத்தியில் எழுந்த சில சச்சரவுகளைக் காரணம் காட்டி ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியை மூடியே சில ஆண்டுகள் வைத்திருந்தனர். அந்நேரத்தில் தொடர்ந்தும் நிதி வழங்கிக் கொண்டிருந்த ஜேர்மன் அரசு நிதியை நிறுத்த ஆலோசித்த வேளையிலேயே அரசு இக்கல்லூரியை மீண்டும் திறக்க திட்டமிட்டுள்ளது என்றபோதும் மலையக மக்களுக்கான 100% இடம் கொடுக்காமலிருக்க முயன்றபோது மலையக மக்கள் முன்னணி தலையிட்டது. 100% மலையக மாணவர்களை அனுமதிக்காவிட்டால் அரசாங்கத்திலிருந்து விலகிக் கொள்வதாகவும் தெரிவித்திருந்தது.

அரசாங்கம் இவ்விடயத்தை அரச கருமமொழிகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த போதும் அவ்வாணைக்குழுவின் முடிவு வெளியாகுமுன்பே அது விடயத்தில் அரசாங்கம் தனது முடிவை அறிவித்தது. அம்முடிவின்படி 25% சிங்கள மாணவர்கள் என்றும், 75% தமிழ் பேசும் மாணவர்கள் என்ற சரியான ஒரு தீர்வை வழங்கிவிட்டதாக தெரிவித்தது. அத்துடன் புதிய கல்வி ஆண்டுக்கான மாணவர்களின் விண்ணப்பங்களையும் கோரியிருந்தது. ஆனால் இது ஏற்கனவே இருந்த முறையிலிருந்து எந்தவித மாற்றங்களையும் கொண்டதல்ல என்பதை யாவரும் அறிவர்.

இதில் இவ்வளவு பெரிய சுத்துமாத்து இருப்பதை எவருக்குமே இலகுவாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்போது மலையக மக்கள் முன்னணியோ அரசின் இம்முடிவை பாராட்டும் வகையில் நடந்துகொள்கிறது.

அரசாங்கத்தின் முடிவையடுத்து மலையக மக்கள் முன்னணி தாம் சொன்னதைப் போல் அரசாங்கத்திலிருந்து விலகுவது தமது பதவிக்கான ஆபத்துதான். ஆனால் அம்முடிவுக்கு எதிராக தொடர்ந்தும் போராடாமல் பின்வாங்கியது மட்டுமல்லாமல் அம்முடிவை பாராட்டவும் செய்வது மலையக மக்களுக்கும் மாணவர் சமூகத்திற்கும் ஆற்றும் பெரும் துரோகமாகும்!

# அரசியல் தீர்வு இல்லையா? உதவி கிடையாது!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ள யுத்தத்திற்கு தேவையான வெளிநாட்டு உதவியை பெற்றுக்கொள்ள எடுத்த பிரயத்தனம் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியளிக்கவில்லையெனவும், யுத்த உதவி வழங்குவதானால் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டுமென அந்நாடுகள் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

தற்போது இலங்கை அரசாங்கத்திற்கு யுத்த உதவி வழங்க முன்வந்துள்ளவை முஸ்லீம் நாடுகள் மட்டுமேயாகும். பாதுகாப்பு குறித்த அக்கறையே அவை உதவி வழங்கக் காரணமேயன்றி இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான அக்கறையல்ல என அறியப்படுகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினையின் மூல வேரானது தொடர்ந்தும் பதவிக்கு வந்த அரசுகளினால் 1958, 1965, 1987 போன்ற வருடங்களில் தமிழ் மக்களுக்கு ஒப்புக்கொண்ட அதிகாரப் பகிர்வை வழங்காதது எனவும், அப்பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கம் வழங்கும் தீர்வைப் பார்க்காது யுத்த உதவி வழங்குவதைப் பரிசீலிக்க முடியாது என அயலிலுள்ள முன்னணி வரிசை நாடொன்று தெரிவித்துள்ளதாக இராஜதந்திரத் தகவல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

ஐரோப்பிய பொருளாதார சமூகங்களின் கூட்டமைப்பும் (EEC), அமெரிக்க நாடுகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை முன்வைக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளதாக மேற்கூறிய தகவல் வட்டாரங்கள் மேலும் குறிப்பிடுகின்றன.

இதே சமயம் இந்திய கடற்படை பாக்கு நீரிணையில் கடற்பாதுகாப்பு வளையமொன்றை ஏற்படுத்தியுள்ளதாக இந்நாட்டுச் செய்திப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ள செய்திகள், முழுமையான பொய்யென இந்தியச் செய்திப் பத்திரிகைகள் தெரிவித்துள்ள அதே சமயம், இந்திய அரசாங்கம் இது தொடர்பாக செய்தி அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

இந்நாட்டுத் தமிழ் அரசியல் கட்சிகள் பலவற்றிடமும் வெளிநாட்டு உதவி பெறும் பிரச்சினை தொடர்பாகக் கேட்ட போது போதிய அளவு சுயாட்சி அதிகாரங்களைக் கொண்ட அரசியல் தீர்வொன்றை முன்வைக்காது, எந்த நாடாவது இலங்கை அரசாங்கத்திற்கு யுத்த உதவிகளை வழங்குவதை தாம் எதிர்ப்பதாக அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்வாறு கொழும்பிலிருந்து வரும் பத்திரிகை ஒன்றின் செய்திக்குறிப்பு கூறுகிறது.

# கொல்ல வந்தாராம்!

ஜனாதிபதிச் செயலக, அலரி மாளிகைச் சுற்றாடலில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய தமிழ் யுவதிகள் நால்வரை ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவு கைது செய்து இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளது.

கைது செய்யப்பட்ட இவ் யுவதிகள் நால்வரையும் விசாரணை செய்தபோது இருவரிடம் இருந்து ஜனாதிபதி செயலக, அலரி மாளிகை ஆகியவற்றின் அமைப்பு உட்பட்ட முழுக் கட்டிட நிர்மாணமும் கிடைத்ததாக ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவின் சிரேஸ்ட அதிகாரியொருவர் கூறினார்.

இப்பகுதியினுள் நடமாடிய, கட்டிடங்களைப் பார்த்தபடி அங்குமிங்கும் திரிந்த இத் தமிழ் யுவதிகள் தொடர்பாகக் கிடைக்கப் பெற்ற தகவல்களின் மீதே ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவு இந்நால்வரையும் கைது செய்துள்ளது.

17 வயதிற்கும், 20 வயதிற்கும் இடைப்பட்ட இவ் யுவதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினரெனவும், யாழ்ப்பாணத்திலிருந்து வந்த இவர்கள் கொழும்பில் அறைகளை வாடகைக்கு எடுத்து அமர்ந்துள்ளதாகவும் விசாரணைகளின் போது வெளிவந்துள்ளது.

ஜனாதிபதி உட்பட, அமைச்சர்கள் சிலரையும் படுகொலை செய்யும் திட்டத்தைச் செயற்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் யுவதிகள் குழுவொன்று தற்போது கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இரகசிய தகவல் பிரிவுகளுக்கு ஏற்கெனவே தகவல் கிடைத்திருந்தது.

இக்காரணத்தால் ஜனாதிபதி செயலக, அலரி மாளிகை பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும், அதற்காக நவீன உபகரணங்கள் உபயோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்களை புலிகள் என்ற முத்திரை குத்துவதில் சற்றும் சளைக்காத பொலிஸார் இருக்கும் வரை, யாழ்ப்பாணத்திலிருந்து வந்து சேரும் எவருக்கும் ஒரே கதிதான். ஆயுதங்களை வாங்கி குவிக்கவும், அரசாங்க அமைச்சர்களும் ஜனாதிபதியும் வீட்டுக்குள்ளேயே பொழுதைப் போக்கவும் இதைத்தவிர சுகமான சாட்டு வேறென்ன கிடைக்கப்போகிறது?

# ஸ்..ஸ்..இரகசியம்!

வட கிழக்கு யுத்தத்தில் பாதுகாப்புப் படைகளில் உபயோகத்திற்காக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள புதிய வகையான ஆயுத உபகரணங்களை வட கிழக்குப் பிரதேசங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இஸ்ரேலிலிருந்தும், சீனாவிலிருந்தும் கடந்த வாரம் இலங்கைக்குக் கிடைத்த இவ் ஆயுத உபகரணங்களினுள் ஏவுகணைத் தாக்குதல்களைத் தவிர்க்கப் பாவிக்கக் கூடிய ஆயுத உபகரணங்கள் உள்ளதாக பாதுகாப்புத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாயுதங்கள் வட கிழக்கிற்கு சகல பாதுகாப்பு ஒழுங்குகளின் கீழ் அனுப்பப்படும் எனவும், அவ்வாறு அனுப்பப்படும் முறையை பாதுகாப்புக் காரணங்களினால் வெளிப்படுத்த முடியாது எனவும் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

# 'கோவிந்தா' கோவிந்தா!

வட பகுதியில் யுத்தம் மூண்டதுடன் அரசாங்கம், இராணுவம் ஆகியவற்றுடன் சேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராகச் செயற்படத் தமிழ், சிங்களக் குழுக்கள் பலவும், ஆயுதப்பிரிவுகளைக் கட்டியெழுப்ப அனுமதி கோரியுள்ளன. இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக என்ற போர்வையில் தமது இராணுவ பலத்தைப் பெருக்கிக் கொள்ள முயற்சிக்கிறார்கள் எனப்பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

என்னதான் கூடநின்று கோவிந்தா போட்டாலும், இராணுவத்தினர் இவர்களைவிட்டு எச்சரிக்கையாகவே இருக்கின்றார்கள் என்பது இவர்களுக்கு எங்கே விளங்கப்போகிறது.

# யுத்தம்...

பொருட்கள் அனுப்பப்படாமல் இருப்பதாக குறிப்பிடத்தக்க விடயம்.

இந்த லட்சணத்தில் 'யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல' எனமார்தட்டி பேசுகிறது அரசாங்கமும், 'தமிழ் மக்கள் நலன்' பேணும் கட்சிகளும், பத்திரிகைகளும் வழிமொழிகின்றன.

ஒருவேளை நிவாரணத் தொகையை புலிகள் அபகரித்து, அந்தப்பணத்தில் உக்ரேனில் போய் ஆயுதம் வாங்கி விடுவார்கள் என்று அரசு கருதுகிறதோ என்னவோ!

# படையினர் போதாது!

வில்பத்து எல்லையில் அமைந்துள்ள கிராமங்கள் பலவற்றின் பாதுகாப்புக் காவல் அரண்கள் அகற்றப்பட்டதால் அக்கிராமங்களிலுள்ள பெருந்திரளான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்லத் தொடங்கியுள்ளனர்.

இவ் எல்லையில் அமைந்துள்ள பொலிஸ் காவல் அரண்கள் ஐம்பத்தி இரண்டும், இராணுவக் காவல் அரண்கள் பத்தும் கடந்த சில தினங்களினுள் அகற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நாம் செய்த விசாரணை ஒன்றின் போது பதிலளித்த பிரதேச உயர் பொலிஸ் அதிகாரியொருவர், இக்காவல் அரண்களில் கடமையில் ஈடுபடுத்தப்படபோதியளவு படையினர் இல்லாத காரணத்தால் இக்காவல் அரண்களை அகற்ற தீர்மானித்ததாகக் கூறினார்.

"காவல் அரண்களில் பத்துப் பனிரெண்டு பேரே கடமையில் இருப்பர். புலிகளோ நூறு, இருநூறு பேர் வருவர். இதனால் தாக்குதல்களின் போது பாதுகாப்புப் படையினர் வெறுமனே கொல்லப்படுவர். இவற்றில் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊர்காவல் படையினரும் தற்போது போக முடியாது என்கின்றனர். அவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது பழைய துப்பாக்கிகள் ஆகும். புலிகளிடம் இருப்பதோ தானியங்கி ஆயுதங்களாகும்" என அவ் அதிகாரி கூறினார்.

ஹலங்கம, மதகம, பலுகஸ்வல, யாய 7, மஹவிலச்சிய ஆகிய கிராமங்களின் மக்கள் இவ்வாறு பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

இதே சமயம் இக்கிராமங்களைப் பாதுகாக்க தொண்டராக முன் வந்த இன்னொரு கிராமத்தைச் சேர்ந்த சிலர், தமது பழுதடைந்த துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு தமக்குப் புது ஆயுதங்களைத் தந்தால் எதிர்காலத்திலும் கிராமங்களைப் பாதுகாக்க முடியுமெனக் கூறியுள்ளனர்.

இந்நிலைமை தற்போது அனுராதபுரத்திற்கு அண்மையிலுள்ள கிராமங்களில் மட்டுமன்றிக் கந்தளாய், வலிக்கந்த, திம்புலாகல, வலிஓய (மணலாறு) ஆகிய பகுதிகளையும் பாதித்துள்ளதாகப் பாதுகாப்புத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பொலிசில் பதிய மறுப்பு!

3ம் ஈழயுத்தம் தொடங்கிய பின் கொழும்பில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடிகள் மேலும்மேலும் மீதிக்குள்ளாக்குகின்றன. ஏற்கெனவே பல லொட்ஜுகளை மூடுவதற்கான ஆணையை பொலிஸார் பிறப்பித்து வருகின்றனர்.

பாதைகளிலும், பஸ்களிலும் தமிழ் மக்கள் சந்தேகக்கண் கொண்டே பார்க்கப்படுகின்றனர். சாதாரண சிங்கள சிவிலியன்களின் விசாரணைகளுக்கு கூட முகம் கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது. சில சில இடங்களில் தாக்குதல்களும் நடந்துள்ளன. கைது செய்வதற்கு குற்றமாக தமிழனாக இருந்தலே போதுமானது என்ற நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில் வடக்கு கிழக்கிலிருந்து அண்மைக்காலமாக கொழும்பு வந்தவர்களை பதிவதற்கும் பொலிஸார் மறுப்பு தெரிவிக்கின்றனர். குறிப்பாக கொட்டாஞ்சேனை, மோதர பொலிஸ் நிலையங்களில் இப்படி நடக்கிறது. தமிழ் மக்கள் கைது செய்யப்படாமலிருப்பதற்கு நிபந்தனைகளில் ஒன்றாக இந்த பொலிஸ் பதிவு தேவைப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# பெரி...

உரிமை 1889 முதல் மறுக்கப்பட்டு வந்தது. திரு. எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்கா உள்ளூராட்சிக்கு பொறுப்பான அமைச்சராக இருந்த போது 1937ல் இச்சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. இத்திருத்தத்தின் கீழ் தோட்டங்கள் கிராமசபைக்கு வரிசெலுத்த வேண்டும். அத்துடன் பறங்கியரும், ஐரோப்பியரும் கிராமசபை தேர்தலில் வாக்களிப்பதற்கிருந்த தடை நீக்கப்பட்டது. ஆனால் இந்தியர் மீதான தடை நீக்கப்படவில்லை. இப்பாரபட்சத்தை பெரும்பாலான தமிழ் அரசசபை பிரதிநிதிகளும் இடதுசாரிகளும் கண்டித்தனர். எனினும் பெரும்பான்மை சிங்கள பிரதிநிதித்துவத்தின் முன்னால் அரச சபையில் இவ் எதிர்ப்பு வெற்றி பெறவில்லை.

இக்காலப்பகுதியில் இனப்பிளவை மேலும் விரிவுபடுத்துவதில் 1939 ஜனவரி தேர்தலின் பின்னர் இரண்டாம் அரச சபையினரின் அமைக்கப்பட்ட தனிச்சிங்கள அமைச்சர் சபை பெரும் பங்காற்றியது. 1920 வரை பல்தேசிய அரசு என்ற நிலையில் இருந்த இலங்கை 15 வருடங்களுக்குள் தனிச்சிங்களவரின் நாடு என்ற நிலைக்கு மாறிவிட்டதை இது உணர்த்தியது. பிரதேசவாரி பிரதிநிதித்துவமுறை பல்தேசிய நாடு ஒன்றில் சிறுபான்மையினருக்கு இழைக்கக்கூடிய அநீதிக்கு இது ஒரு நல்ல உதாரணமாகும்.

# தமிழ்ப்...

என்னை, எப்போதும், எந்தநிலையிலும் எதுவும் செய்துவிட முடியும் என்பதை வெளிப்படுத்துவதாக இருந்தது.

தொடர்பு சாதனதுறையின் சுதந்திரத்தைப் பற்றி அதிகளவு கருத்துக்களை முன்வைத்து பதவிக்கமர்ந்த இந்த அரசாங்கத்தில் இப்படியான சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே செல்வது தொடர்பூதன துறைக்கே பெரும் அச்சுறுத்தலான விடயம்.

இதே பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா முதலமைச்சராக இருந்த போது சூரியகந்த புதைகள் தோண்டச் சென்ற நேரம் அக்குழுவில் சென்ற ஒரே ஒரு தமிழ்ப் பத்திரிகையாளராக நான் இருந்தேன். அதேபோல் பிரேமதாசா காலத்தில் தென்னிலங்கையில் நடந்த சம்பவங்கள் பல இளைஞர்களின் காணாமல் போனோர் பற்றிய சம்பவங்கள், தென்னிலங்கை தமிழ் இளைஞர்களது கைது சம்பவங்கள் பற்றி பொ.ஐ.மு எதிர்ப்பு தெரிவித்து பிரச்சாரம் செய்த அதே காலத்தில் அச்சம்பவங்கள் பற்றி தமிழில் அதிகளவு விடயங்களை வெளிக்கொண்ர காரணமானேன். இன்று அதே பொ.ஐ.மு. அரசாங்கத்தால் இந்நிலைமைக்கு உள்ளாகியமை அரசாங்கத்தின் முன்னைய நடவடிக்கைகளை கேள்விக்குள்ளாக்குகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

# உலர்ந்த நம்பிக்கை!

யுத்தம் ஆரம்பமான பிற்பாடு நாட்டு மக்களுக்கு ஆற்றிய சிறப்புரை ஒன்றின் போது ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும், அதே நேரம் ஏமாற்றம் தருபவையாகவும் இருந்தன. சமாதானத்தைப் பேச்சு வார்த்தைகள் மூலமாகக் கொண்டுவரமுடியாது என்றால் அதனை யுத்தமூலமாகக் கொண்டு வருவதை விட வேறு வழியில்லை என்பது அவருடைய உரையின் மையம்.

''யுத்தத்தின் நோக்கம் யுத்தத்தை ஒழிப்பதுதான்'' என்பது மாஓ முதல், பாரீஸ் நகரத்துச் சோபோர்ன் பல்கலைக்கழகத்தில் புத்திசீவித்துவம் பெற்ற பொல்பொட்வரை ஒரு தாரக மந்திரமாக இருந்து வந்திருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகாவும் சுற்றி வளைத்து அந்த முடிவுக்குத்தான் வந்திருக்கிறார். இந்த முடிவுக்கு அவர் வரநேர்ந்தமைக்கான முழுப்பொறுப்பை அவரும், அவருடைய அரசும், ஆட்சி மிக்க ஆங்கில, சிங்களப் பத்திரிகைத்துறையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மேல் சுமத்திவிட்டுத் தங்களுடைய பொறுப்பின்மை, அக்கறையின்மை என்பவற்றை மறைத்து விடுகிறார்கள்.

எவ்வகையான குரூரமான யுத்தமும் கூடப் பேச்சுவார்த்தைகள் ஊடாகத்தான் முடிவுக்கு வந்திருக்கிறது என்ற அரசியல் வரலாற்று யதார்த்தம் மறக்கப்பட்டு யுத்தமே சாத்தியம் என்ற பிரமை பயங்கரமாக ஊட்டப்பட்டு வருகிறது.

இந்த மாயப்பிரமைகளின் திரைகளை நீக்கி நிதானத்தையும் அரசியல் தெளிவையும் இணக்கப்பாட்டையும் எய்துவதற்கு வெறுமனே உளப்பூர்வமான விருப்பு மட்டும் இருந்தால் போதாது.

பொதுத்தேர்தல்கள் முடிந்த பிற்பாடு நாம் எழுதிய ஆசிரியத் தலையங்கங்களில் ஜனாதிபதியிடம் காணப்பட்ட இந்த உளப்பூர்வமான விருப்பு பற்றிக் குறிப்பிட்டிருந்தோம்.

தேர்தல்களுக்குப் பிற்பாடு இப்போதைய யுத்தம்வரையான காலகட்டத்தில் இடம் பெற்ற நிகழ்வுகள், சமத்துவத்துடன் கூடிய சமாதானத்தைக் கொண்டுவருவதற்கு வெறுமனே 'உளப்பூர்வமான விருப்பு' மட்டும் இருந்தால் போதாது என்பதைத்தான் காட்டுகின்றன.

விருப்பு என்பது அர்த்தபூர்வமானதும் திறன் வாய்ந்ததுமான செயற்பாடுகளாக மொழிமாற்றம் பெற முடியாவிட்டால் அவ்விருப்பு எவ்வளவு உன்னதமானதாக இருந்தாலும் கனவுகளாகவே மரித்துவிடும். கடந்த காலங்களில் இருந்து வந்த இலங்கை அரசுகளிடம் இத்தகைய உளப்பூர்வமான விருப்போ செயற்பாட்டுத் திறனோ இருக்கவில்லை. ஜனாதிபதி சந்திரிகா அரசிடம் இத்தகைய விருப்பு இருந்தது என்பது பல தரப்பினரதும் கருத்தாக இருந்தது:

யதார்த்தம் என்னவென்றால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆக்கபூர்வமான அடிப்படையான தீர்வுகள் எதனையுமே இந்த அரசு முன்வைக்கத் திறனற்றதாக இருக்கிறது. சின்னச் சின்ன உதாரணங்கள் சிலவே இந்தத் திறனற்ற தன்மையைச் சுட்டிக் காட்டப் போதுமானவையாகும். ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் வருகிற இனத்துவவிவகாரங்கள் அமைச்சில் ஒரு கதிரை மேசை கூடக்கிடையாது! காணாமல் போனவர்கள் பற்றி விசாரணைகள் செய்ய அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்களுக்கு ஒரேயொரு கணினி மட்டும்தான் தரப்பட்டுள்ளது. ஒட்டு மொத்தமாகவே ஒழுங்கற்றும், நெறிப்படுத்தப்படாமலும் ஏனோ தானோ என்று இயங்கி வருகிற ஜனாதிபதி செயலகத்திடம் இருந்து எத்தகைய ஆக்கபூர்வமான தீர்வுத் திட்டங்களையும் இப்போதைக்கு) தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்பார்க்கக் கூடாது. மிக அண்மைய உதாரணங்களிலொன்று அரச கருமமொழிகள் ஆணைக்குழுவுடன் தொடர்பானது.

ஸ்ரீபாதக் கல்வியியல் கல்லூரி விவகாரம் மொழி தொடர்பானதாகவும் இருப்பதால் அது பற்றிய அறிக்கையொன்றை குறித்த திகதி, குறித்த நேரத்துள் சமர்ப்பிக்குமாறு ஆணையாளரை ஜனாதிபதி கேட்டுக் கொண்டிருந்தார். அதன்படி குறித்த நேரத்துக்கு அறிக்கை ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்பட்டது. பல மணித்தியாலங்களின் பிற்பாடு ஜனாதிபதி செயலகத்திலிருந்து ஆணையாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட செயலகத்தினர் அறிக்கை ஏன் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை' என்று கேட்டுள்ளனர். சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு இடைவழியில் என்ன நடந்தது என்பதுதான் எங்களுடைய கேள்வி. இத்தகைய நிலைமை அரச மட்டத்தில் எல்லாத் தரப்பிலும் எல்லா நிலைமைகளிலுமே காணப்படுகிறது. இவை பற்றிய புரிந்துணர்வோ அல்லது நடைமுறை யதார்த்தம் பற்றிய உணர்திறனோ ஜனாதிபதியிடம் கிடையாது.

ஜனாதிபதியின் தலையலங்காரத்தைத் திறன் வாய்ந்தமுறையில் யார் கவனிக்கிறார்கள் அல்லது அவருக்குப் பொருத்தமான சேலைகளையும் பிற அணிகளையும் நுணுக்கமாகத் தெரிவு செய்வதில் உதவிய தமிழ்ப்பெண்ணுக்கு என்ன நடந்தது போன்ற விஷயங்களில் எங்களுக்கு அக்கறையில்லை.

செயற்பாட்டுத் திறனற்ற ஜனாதிபதியாலும் உளப்பூர்வமான விருப்பு அற்ற அரசு எந்திரத்தாலும் என்னதான் சாதிக்கப்படப் போகிறதோ?

பாவம், வாக்களித்த 21 லட்சம் வாக்காளர்கள்!

மறுபுறத்தில், வடக்குக் கிழக்கில் இப்போது தாம் பெற்றிருக்கிற இராணுவ மேலாதிக்கத்தின் அடிப்படையில் யுத்தம் மூலமாகவே வெற்றியை ஈட்டி விடலாம் என்ற விடுதலைப் புலிகளின் எண்ணமும் யதார்த்தமற்றது. பலரும் எழுதுவது போல 'பெடியங்கள்' என்ற நிலையிலிருந்து ''தேசியத் தலைவர்கள்'' என்ற தரத்துக்குக் கால ஓட்டத்தில் பரிணாமம் பெற்றுவிட்டார்கள் தான் புலிகள் என்றால் அந்தப் பரிணாமத்தின் பொறுப்புணர்வும் அரசியல் பரிமாணமும் அவர்களிடம் காணக்கிடைக்கவில்லை.

மறுபடி, யுத்தத்தைத் திடீரென ஆரம்பித்ததில் இருந்து சென்றவார அப்பாவிப் பொது மக்கள் படுகொலைவரை அவர்கள் தரப்பிலும் எவ்வகையான அடிப்படை மாற்றங்களும் ஏற்படவில்லை என்பதையே காட்டுகின்றன.


இரண்டு தரப்பிலும் யுத்த ஆவேசம் கிளர்த்தப்படுவதும் சமூகம் இராணுவமயப்படுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றிய தொலைநோக்கற்ற இயல்பும் நம்பிக்கையைச் சிதற அடிக்கின்றன.

பொறுப்புணர்வும், தொலைநோக்கும்; பொறுமையும் இப்போது அவசியமான விஷயங்கள்.
இவை கிலோ என்ன விலை?

எங்கே கிடைக்கின்றன?

தெரிந்தால் அறியத்தாருங்கள்.

# திருமலை: கலாசார மண்டப "குடியேற்றம்"



இராணுவமுகாம் ஆக மாற்றப்படவிருந்து எப்படியோ மயிரிழையில் தப்பிப் பிழைத்துக் கொண்ட கல்யாண மண்டபம் என்ற திருமலை கலாசார மண்டபம் உண்மையில் பிழைத்துக் கொண்டதா என்பதைக் காலம்தான் காட்ட வேண்டும்.

இந்தமுகாம் அமைக்கும் முயற்சி திருமலையை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. சன நெருக்கடி மிகுந்த உட்துறைமுக வீதியில் குளுகுளு கடற்காற்றை எதிர்கொண்டபடி பரந்து நிமிர்ந்து நிற்கிறது, இப்பாரிய மண்டபம். சுற்றிவர வாழ்ந்து வரும் தமிழர்கள் இம்முகாம் அமைப்பால் தங்கள் சமாதாரண வாழ்க்கை பாதிக்கப்பட்டுவிடுமே என்று பயந்து கொண்டிருந்தனர். நகரத்து மக்களோ இது என்ன திருகுவலி என்று துவண்டு போயிருக்கின்றனர். நகரபிதா பெ.சூரியமூர்த்தி இது சம்பந்தமாக ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டார். ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் சிவதாஸன் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினார். இராணுவ முகாம் அமைக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழி பரதிப்பாதுகாப்பு அமைச்சரால் வழங்கப்பட்டது. ஒரு நிம்மதிப் பெருமூச்சு!

திருகோணமலை மக்களின் வாக்குகளை பெற்றுச் சம்பளம் எடுத்துக் கொண்டிருப்பவர்கள் இந்த விடயத்தில் ஏதாவது செய்தார்களோ தெரியவில்லை.

திருக்கோணமலை மக்களின் கோவம் இந்த கலாசார மண்டபப் பொறுப்பாளர் மீதே திரும்பியுள்ளது. இந்த மண்டபம் உபயோகிக்கப்படாமல் இருந்தபடியால் தானே இராணுவம் கேட்க வேண்டி வந்தது என்பது மக்கள் நியாயம். இனியும் பயன்படுத்தத் தவறும் ஒவ்வொரு தினமும் இன்னொரு படைமுகாம் முயற்சிக்கான நாட்களாகவே அமையும் என இவர்கள் கருதுகிறார்கள்.

1955 ல் அமைக்கப்பட்ட தமிழ்ப் பல்கலைக்கழ இயக்கத்தின் தொடர்ச்சியே இன்றைய இக்கலாசார மண்டபம். இதற்குப் பொறுப்பாக சுபாஷினி வரதன், புகேந்திரன், சுரேர்திரநாதன், ஜெயசங்கர், விக்னராஜா ஆகியோர் கொண்ட குழு இயங்குகிறது. இராணுவம் முகாம் போட ஆயத்தம் செய்வதைக் கண்ட ஒரு துடிப்பான இளைஞர் சுரேர்திரநாதனிடம் இது பற்றிக் கேட்ட போது ஒரு மாதம் தானே.... பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று அலட்சியமாகவே பதில் கூறியுள்ளார். இவர் பயப்படுகிறாரா இல்லையா என்பது முக்கியம் இல்லை. மக்கள் பாதிக்கப்படுவார்களா இல்லையா என்பது தான் முக்கியம் என்ற விடயம் இவருக்கு எங்கே உறைக்கப் போகிறது.

1994 ஆரம்பப் பகுதியில் இந்தக் கட்டடத்தை உட்துறை அமைச்சு வாடகைக்கு கோரியிருக்கிறது. இரண்டு வருடங்களுக்கேனும் தாருங்கள் என்று கேட்டிருக்கிறது. ஒரு அதிகாரி இந்தக் குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவர் வீட்டுக்கும் தனித்தனியாகப் படியேறி இருக்கிறார்.

இவர்கள் உடன்பட்டிருந்தால் மாகாண அரசால் ஆறு லட்சம் ரூபா செலவில் கட்டடம் மேலும் சீர் செய்யப்பட்டிருக்கும். இந்தப் பணம் திருப்பித்தரப்பட வேண்டியதில்லை. மூன்று லட்சம் ரூபா வாடகை முற்பணம் வழங்கப்பட்டிருக்கும். இவற்றுக்கும் மேலாக இந்தக் கட்டடம் பாதுகாப்பாக இருந்திருக்கும்.

இவர்களுடன் பேச வந்த அதிகாரி உட்துறை அமைச்சின் நன்மைகளை விட இந்தக் கட்டிடம் நல்லமுறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். இதனால் கிடைக்கும் பணம் வசதியற்ற மாணவர்களுக்கு உதவவல்லதாக இருக்க வேண்டும் என உளமார விரும்பினார். ஆனால் அவர் முயற்சி வெற்றியளிக்கவில்லை.

பல்கலைக்கழக் இயக்கம் ஆரம்பிக்கும் பேறு பாடசாலையைக் கூடக்கண்டிராதவர்கள் ஆரம்பத்தில் அந்த அமைப்புக்கு சிறுதொகையேனும் ஆர்வத்துடன் உதவி செய்த எனது கோரிக்கையை நிராகரித்து விட்டார்களே என்ற கவலை அந்த அதிகாரிக்கு.

வைக்கோற்போரில் படுத்து என்ன பயன்? யாரேனும் நெருப்பு வைத்த பிறகு கதறியோ பதறியோ என்ன லாபம்? பொறுப்பாளர்கள் உணர வேண்டும்.

வீ

# நகரசபையின் காணிச் சண்டை!

திருக்கோணமலை மட்டிக்களி கடற்பரப்புக்கு எதிரே பரந்து கிடக்கும் நிலப்பரப்பில் பொதுமக்களைக் குடியேற்ற நகரசபைத் தலைவர் திரு.பெ.சூரியமூர்த்தி போட்ட திட்டத்தால் அவருக்கு நகரசபைக்குள்ளே இருந்த எதிர்ப்பு பொலிஸ் நிலையம் வரை சென்றுவிட்டது.

மேற்படி காணியை எவரும் உரிமை கோராதவிடத்து அரசு தன்னுடைமையாக்க முயற்சி செய்த வேளையிலேயே சூரியமூர்த்தி இத்திட்டத்தை ஆரம்பித்தார். எங்குமே காணி வசதிகள் அற்ற ஏழைகளுக்கு இவற்றைக் கொடுப்பேன் என அவர் கூறிய போதும், வீதியை அண்டிய நல்ல பகுதி, களை சில காசுக்கார பணப்பெருச்சாளிகளுக்குக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாம்.

காணி அளந்து கொண்டிருந்த போது திடீரென வந்த பொலிஸார் காணி பெற வந்த சிலரைப் பொலிஸ்நிலையம் கொண்டு போய் விசாரித்து எச்சரித்து அனுப்பியுள்ளார்கள். இதுவரை தூக்கத்தில் ஆழ்ந்து போயிருந்த காணிச் சொந்தக்காரர் கோஷ்டியொன்று திடீரென விழித்து பொலிஸில் முறையிடப்போனதால்
இதுநடந்திருக்கிறது.
உறுதிக்காரர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் நிற்கிறார் என்பதை மோப்பம் பிடித்துக் கொண்ட நகரசபை உறுப்பினர்கள் பலர் தமது தலைவரைப் பழிவாங்க கிடைத்த சந்தர்ப்பமாக இதைப் பயன்படுத்தி அவ்வுறுதிக்காரர்களுக்கு வலிந்து சென்று உதவியிருக்கிறார்கள். நகரசபை உபதலைவரைத் தவிர சகல ஆளுங்கட்சி உறுப்பினர்களோடு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவரும் சேர்ந்து கொண்டனர்.
இவ்வுறுப்பினர்களில் இரண்டுபேர் தங்களைச் சேர்ந்தவர்களுக்குக் காணி தரத்தலைவர் சம்மதிக்கவில்லை என்பதால் உறுதிக்காரருக்கு ஆதரவாக நின்றார்களாம்.
அவர்களுக்குக் கோட்டா வழங்கப்பட்டிருந்தால் தலைவர் பக்கம் நின்று உறுதிக்காரரைக் பயமுறுத்தி இருப்பார்களோ என்னமோ.
உறுதிக்காரரைக் காணிக்கு வேலி போடும்படி பொலிஸார் கேட்டிருக்கிறார்கள்.
கடைசியில் நகரசபை உறுப்பினர்களின் சண்டை ஊருக்குள் அம்பலமாகியதுதான் மிச்சம்.

விவேகி

# புலியென்று ஒப்புக்கொள்!

மட்டக்களப்பு அகதி முகாமொன்றில் இருந்த நான்கு பாடசாலை மாணவர்கள் இழுத்துச் செல்லப்பட்டு பனங்கூடல் ஒன்றினுள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர். வைத்தியசாலையில் வைக்கப்பட்ட இவர்களது உடல்களைத் தருவதானால் இவர் எல்.ரி.ரி.ஈ.யைச் சேர்ந்தவர்கள் என கையெழுத்திட வேண்டும் என்று பொலிஸாரால் அம்மாணவர்களின் பெற்றோர் மிரட்டப்பட்டுள்ளனர். அரச பத்திரிகையான தினகரனும் சுடப்பட்டவர்கள் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் என செய்தியைத் திரித்து தன்னுடைய அரசு விசுவாசத்தைக் காட்டியுள்ளது. இதைவிடவும் படுகேவலமான நடைமுறையாக பெண்களை மானபங்கப்படுத்துவதும் பல இடங்களில் நடந்தேறியுள்ளது. இவ்வாறான சம்பவம் புதூர், பேத்தாளை, கிரான் ஆகிய கிராமங்களில் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# சமஷ்டியா? ஒரு போதும் இல்லை!

''சமஷ்டியா? அது ஒருபோதும் முடியாது! வேறுபட்ட அரசுகளை இணைத்தே ஒரு சமஷ்டி ஆட்சி முறையை உருவாக்க முடியும்'' என சிங்கள மகா சம்மந்த பூமிபுத்திர கட்சியின் தலைவர் ஹரிசந்திர விஜயதுங்க சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான கருத்தரங்கொன்றின் போது கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, ஒற்றையாட்சி உள்ள ஒரு நாட்டில் சமஷ்டி ஆட்சியை உருவாக்க முடியாது.

சிறிலங்கா ஒரு ஒற்றையாட்சியின் கீழ் உள்ள நாடு. வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஆயிரம் வருடங்களாக இந்த நாட்டின் ஒரு பகுதியாக இருந்தவை. அதனால் இவற்றை சமஷ்டி ஆட்சியின் கீழ் கொண்டு வரமுடியாது. ஆனால், மாலைதீவு, இந்தியா, பாகிஸ்தான் அல்லது வேறுநாட்டை வேண்டுமானால் நாம் சமஷ்டி ஆட்சியின் கீழ் ஒன்று சேர்க்கலாம்.

அரசாங்கத்தினால் ஆலோசனை செய்யப்படும் சமஷ்டி தீர்வானது எமது நாட்டில் இருந்து வடக்கு கிழக்கை பிரிப்பதற்கான நோக்கத்தைக் கொண்டது என்று கூறினார் விஜேதுங்க. இவர், இக்கட்சியின் சார்பில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றவரென்பதும், இவரது கட்சியே மலையக மக்களை கள்ளத்தோணிகள் என்று கூறி கடந்த தேர்தல் காலத்தில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்